20

16 July 1934

NISAB
N24.201
187520

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும்,



அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த
அயக்காந்த செந்
தூரத்தைக் காட்டி
வும் தேகபலந்

இட

1. நட்சத்திர விவ.
2. விவாக பொருத்;
3. ஜன்ம சட்சத்திர
4. இராசி.
5. இராசிகளில் ச
6. ஜன்ம லக்கின
7. கிரகங்கள்
8. அ

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரங்களால்
நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓய்வு, பித்த வெப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல் நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளைக்கு வாங்கி யுண்டால் இவற்றின் அபாரகுணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தின் வலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாகளைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம் முற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்தத் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிட அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது

ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்
சோதிட கணிதாமிருத சாகரம்.

கற்கக் கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற மூதுரை வாக்கியப்படி எவ்விதக் கல்வியாயினும் குற்றமறக் கற்றுத் தெளிவதே நம்மோர் கடமையாகும். அதுபற்றியே வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய, சோதிட சாஸ்திரமானது நம்மவர் எளிதிலறியும் வண்ணம் ஆரம்பசோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் துர்பிக்ஷகாலமுண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்ச செய்யும் முறை, சாஸ்திர உபயாகிநன். வர்கோத்தமம். தசவர்க்கம் பிரிக்கு மடைவு வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல். துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை. கேந்திர திரிகோணதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரிகாண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காய்வேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆக்ஷி, உச்சநட்பு நீச்சம்பகை முதலியபலம்; மண்டல சமயசார பருவம், மழையை யளந்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடிடும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம், கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திரபாவம்; ரோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; ருதுகால பலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளொடு வருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினாலெடுத்துக் காட்டும் புராதன கணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருதபலவிமர்சம் என்னும் ஜாதககணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலக பரோபகாரமாக குறைந்தவிலையில் தயார் செய்திருக்கிறோம். இந்நூலிலேயுள்ள விஷயங்கள் பெரும்பாலும் சாஸ்திர சம்பந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யவும் உள்ளபடி உண்மைப் பலன் சொல்லவும் ஏதுவாகும். சோதிடர்கள் பொதுவாய் ஜனன கால லக்ஷணங்களை சந்தேகமின்றி எடுத்துச்காட்டவும் யோகாவயோகங்களும் அவையுண்டாகுங் காலங்களும் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர் இப்புத்தகத்தைக் கொண்டே கணிதம் செய்யத்தக்க எளியநடையிலெழுதியுள்ளதாகையால் இப்புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதும் ஐயமில்லை.

இப்புத்தகத்தி லடங்கிய விஷயங்கள்.

1. நட்சத்திர விபரணம்.
2. விவாக பொருத்த நக்ஷத்திரங்கள்.
3. ஜன்ம நட்சத்திர பலன்.
4. இராசி.
5. இராசிகளில் சாஸ்திராதிகள்.
6. ஜன்ம லக்கின பலன்.
7. கிரகங்கள். [வம்.
8. அவைகட்குள் சத்துரு மித்திரத்
9. தாத்கால சத்துருமித்திரத்துவம்.
10. காரகத்துவம்.
11. சுப, பாபிகள்.
12. கேந்திர திரிகோணதிஸ்தானங் [கள்.
13. [illegible]
14. [illegible]
15. [illegible]
16. பார்வை.

187520

17. ஸ்தான பாவங்கள்.
18. பாவ ஸ்தானங்கள்.
19. வக்கிராதி.
20. பலன்கள்.
21. சாத்வீகாதி காலங்கள்.
22. நவாம்ச சக்கிர நிர்ணயம்.
23. அந்திய நவாம்ச இராசிகள்.
24. வர்க்கோத்தமம்.
25. திரேகாண சக்கிர நிர்ணயம்.
26. ஹோரா சக்கிர நிர்ணயம்.
27. திம்சாம்ச சக்கிர நிர்ணயம்.
28. த்வாதசாம்ச சக்கிர நிர்ணயம்.
29. குளிகைகால ஸ்தான நிர்ணயம்.
30. லக்கின நிச்சயம்.
31. ஸ்திரி புருஷ லட்சணம்.
32. கால ஹோரை.
33. ஜன்ம கால லட்சணம்.
34. த்விக்கிரக யோகம்.
35. திரிக்கிரக யோகம்.
36. குசகாதி யோகங்கள்.
37. ஸங்கியா யோகங்கள்.
38. தரித்திராதி யோகங்கள்.
39. ஆசிரிய யோகங்கள்.
40. விசேஷ யோகங்கள்.
41. ஊமை.
42. அந்தகத்துவம்.
43. பதிதபாவம்.
44. புஷ்டியம்சம்.
45. ஸ்திரி ஜாதகம்.
46. ஸ்திரி நடக்கை.
47. களத்திர பாவம்.
48. புத்திர பாவம்.
49. அபுத்திர பாவம்.
50. சுவீகாரம்.
51. வியாதி.
52. பாலாரிஷ்டம்.
53. அற்பாயுர்பாவம்.
54. மத்தியாயுர்பாவம்.
55. தீர்க்காயுர் பாவம்.
56. நிர்யாண விஷயம்.
57. மார[illegible] கொடுப்பவர்கள்.
58. தசைகள்.
59. நட்சத்திர தசை.
60. அதன் புத்தியாதிகள்.
61. ஷோமாசாதிகள்.
62. நட்சத்திர தசைகளின் புத்தி காலங்கள்.
63. சக்கர தசைகள்.
64. சக்கரதசா காலங்களும் நாட்டும்.
65. சக்கர புத்திகள்.
66. தசாபலன்களின் விதிகள்.
67. தசாபலன்.
68. கோசரம்.
69. அஷ்வர்க்க சந்திரபிந்து.
70. கோசர பலம்.
71. அந்தபலன் தரும் சமயம்.
72. கோசர வேதை.
73. அஷ்ட வர்க்கம்.
74. அதன் விதிகள்.
75. கண்டதிரிய விவரம்.
76. விவாக பொருத்தங்களின் வி[illegible]
77. பொருத்தங்களின் லட்சணம்.
78. விவாகத்திற்கு தோஷங்கள்.
79. முகூர்த்தங்கள்,

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை ரூபா 1.

ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9 கிரகங்களை 12 இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக் கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 7 கிரகங்கள் ஒன்றாகக் கூடியிருப்பினும் இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறியிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் இதனால் தெரிந்துகொள்ளலாம். இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(நான்காம் பதிப்பு)

அழகிய சி[illegible] பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்

400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தமடைய விரும்பும் யுவர்களும் யுவதிகளும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததியைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளியிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின்சாரக்

ங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இலபரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அதற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமூற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

இல்லற இன்ப விஜயம்

“இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?” என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! “இல்லற இன்ப விஜயம்” என்னும் சிற்றின்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை ‘ஆனந்தபோதினி’ ஆபீஸில் தமிழ்நாட்டுச் சகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தக ாப் இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் க ணையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்

MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விதி முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்குறக் கூறுகின்றமையால் இதை ஓர் ‘ஆபத்துக் குதவும் தோழன்’ என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

சற்குணவல்லி

அல்லது

சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது.)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன் பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொற்பின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விலக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமதி ர் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும் டி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை ரித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34-வரை விலை ரூபா 1—0—0.

கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-6-34 வரை விலை ரூ. 1—2—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் நீக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சிவப்பு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படிக்காதவர்கள், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற்கு ஏதுவாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.

இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனுல் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் அளவு வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஔவையார் அருளிச்செய்த

பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டுவது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே நல சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குலமுடைய வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிரமாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமார்த்தியச் செயல்களும் சொல்லொணு வியப்பையும் சோகத்தையும் வீரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத பக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேஷமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

விலை ரூபா 1—8—0.

காமவல்லி இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயவுரை, வதை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

பே. இராஜா செட்டியார், எம்.பி. பி.ஜ., அவர்கள் இயற்றியவை.

சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்திசெய்யக்கூடிய நாவல் இதுவே.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை ரூ. 1.

ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர் மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின்போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும். எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. அநேக நீதிகளடங்கியது; அறிவு விருத்திக்கு நிகரற்ற ஓர் பொக்கிஷம் என்றே இதைச் சொல்லவேண்டும். புதிய பதிப்பு விலை ரூபா 1—6—0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 31-8-34 வரை விலை ரூபா 1.

அன்பானந்தன்

அல்லது

அருஞ்செல்வன் விழைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு, ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றாகி விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இன்னபடிப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள்படும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-8-34 வரை விலை ரூ. 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, சென்னை.

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED)

தொகுதி	பவ௵ ஆடி மீ ௧௨	பகுதி
20	1934௵ ஜூலை மீ 16௳	1

கடவுள் வணக்கம்.

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
மண்ணையும் விண்ணையும் தெரியாது
அளம்பெறும் துரும்பொத் தாவியோ டாக்கை
ஆனந்த மாகவே அலந்தேன்
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணக்
காட்சியே சாக்ஷியே அமலா
உளம்பெறும் துணையே பொதுவினில் நடிக்கும்
உண்மையே உள்ளவா றிதுவே (1)

உள்ளமே நீங்கா என்னைவா வாவென்று
உலப்பிலா ஆனந்த மான
வெள்ளமே பொழியும் கருணைவான் முகிலே
வெப்பிலாத் தண்ணருள் விளக்கே
கள்ளமே தாக்கும் துவெளிப் பரப்பே
கருவெனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழாது எனைக்கரை யேற்றிப்
பாலிப்பது உன்னருட் பரமே. (2)

தாயும் தந்தையும் எனக்குற வாவதும் சாற்றின்
ஆயுநீயுநின் அருளுநின் அடியரும் அன்றோ
பேய னேன்திரு அடியிணைத் தாமரை பிடித்தேன்
நாய னேயெனை யாளுடை முக்கண் நாயகனே. (3)

தக்கரவி கண்ட சரோருகம்போல் என்னிதயம்
மிக்கவருள் கண்டு விகசிப்ப தெக்காலோ. (4)

187520

அரும்பொருள் விளக்கம்

1. இதனால் தமது நிலை இன்னது என்று விளக்குகின்றார்.

(இ-ள்) வஞ்சங்கொண்ட கபடமனத்தினர் காணக்கூடாத பிரத்தியக்ஷமே! சாக்ஷியாயுள்ளவனே! ஞானிகளின் மனதினை இடமாகக்கொண்ட உயிர்த்துணையே! தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த நடனம் செய்யும் மெய்ப்பொருளே! எனம் பொருந்திய ஞானக்கடலை வாயாற் பருகி, பூமியையும் ஆகாயத்தையும் அறியாமல் கடலிற்பட்ட துரும்பினை யொத்து உயிருடன் உடம்புகள் இன்புருவாக வருந்தினேன். உண்மையான நிலை இதுவே ஆகும் என்க.

கள்ளமே குடிகொண்ட நெஞ்சினையுடையவர்கட்கு முதல்வன் காணப்படானாகலின் "வஞ்ச நெஞ்சினர் காணாக் காட்சி" என்றும், அங்ஙனமில்லாத அறிஞரிடத்து எக்காலமும் விரவியிருப்பானாகலின் "அறிஞர் உளம்பெறு துணையே" என்றும் கூறினர்.

2. இதனால் பிறவிக் கடலில் விழுந்து தத்தளிக்காதவாறு தம்மைக் காக்க வேண்டும் என்கிறார்.

(இ—ள்) அடியேனுடைய மனத்தைவிட்டுப் பிரியாதிருந்து அடியேனை வருக வருக என அழைத்துக் கெடுதல் இல்லாத இன்பமாகிய மழையினையே சொரிகின்ற மேலான கருணைமுகிலே! சூடில்லாத குளிர்ச்சி பொருந்திய திருவருள் விளக்கே! வஞ்சனையாகிய இருளினை நீக்கும் தூய ஆகாய மயமே! கருப்பம் என்று சொல்லக்கிடந்த சூனியமாம் மாயைக் கடலில் வீழாதபடி அடியேனைக் கரையேற்றிக் காப்பது தேவரீருடைய திருவருட் பாரமாகும் என்க.

சர்வ வியாபகமாக விருக்கும் முதல்வன் அன்பர்கள் உள்ளத்து எக்காலத்தும் வாழ்வானாகலின் "உள்ளமே நீங்கா" என்றனர். முதல்வன் உள்ளத்திலே வாழினும் அன்பர்கள் பரிபக்குவம் அடைந்த காலத்து ஆசாரிய மூர்த்தியாக வெளிவந்து முன்னின்று அநுக்கிரகிப்பான் என்பார் "என்னை வாவாவென்று உலப்பிலா ஆனந்தமான வெள்ளமே பொழியும் கருணை வான் முகிலே" என்றனர். பூத விளக்கு அல்ல என்பார் "அருள் விளக்கே" என்றனர். மாயப் பள்ளம் என்றது பிறப்பினை.

3. இதனால் தமக்குச் சுற்றமாவதைத் தெரிவிக்கின்றார்.

(இ—ள்) நாதனே! என்னை அடிமையாகவுடைய முக்கண் நாயகனே! அன்னையும் பிதாவும் அடியேனுக்கு உறவு ஆவதும் சொல்லுமிடத்து, மேலோர்களால் நாடப்படுகின்ற தேவரீரும், தேவரீருடைய திருவருளும் தேவரீர் அடியார்களும் அன்றோ? பேயன் ஆகிய நான் உம் திருவடித் தாமரைகளைப் பற்றினேன் என்க.

4. இதனால் தமக்குத் திருவருட்பேறு வாய்க்கும் நாளை எதிர்பார்க்கின்றார்.

(இ—ள்) தனக்குச் சம்பந்தமாயுள்ள சூரியனைக் கண்ட மாத்திரத்தில் தாமரையானது மலருவதுபோல் என்னுடைய இருதயமானது திருவருளினைத் தரிசித்து ஞானம் உதயமாவது எந்நாளோ என்க.

ஆனந்தபோதினி
பவ௵ ஆடிமீ 1௳

OFFICE OF THE REGISTRAR ...
15 AUG 1934
MADRAS

"ஆனந்தபோதினி"யின் 20-வது ஆண்டு

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலும், செந்தமிழ்ச் செல்வர்களாகிய சந்தா நேயர்களின் போதரவாலும் நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகைக்கு 19-வது ஆண்டு இனிது நிறைந்து இந்த ஆடிமீ 1-ம் தேதி முதல் 20-வது ஆண்டு பிறந்திருக்கிற நற் செய்தியை மகிழ்ச்சிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். வறுமை மிகுந்தும், பத்திரிகை படிக்கும் உணர்ச்சி குன்றியும் இருக்கும் நமது நாட்டில் ஒரு பத்திரிகைக்குப் பத்தொன்பதாண்டுகள் நிறைவுற்று இருபதாவது ஆண்டில் அது சீரும் சிறப்பும் பொருந்தி வெளிவந்து உலவுவது சாமானிய விஷயம் அல்ல. சென்ற பத்தொன்பது ஆண்டுகளாக நமது "ஆனந்தபோதினி" தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் பற்பல வழிகளிலும் ஆற்றிவரும் தொண்டின் பெருமையைப்பற்றி விரித்துக் கூறவேண்டியது அநாவசியம் என்றே கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் எல்லாத் துறைகளிலும் புத்துணர்ச்சி பெற்றுப் புது வாழ்வு நடத்தவேண்டும் என்பதே "ஆனந்தபோதினி"யின் தலை சிறந்த நோக்கம் ஆகும். "ஆனந்தபோதினி" என்னும் அழகிய திருநாமம் சூட்டி ஆசீர்வதித்த மஹான் ஸ்ரீலஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளின் அநுக்கிரக விசேஷத்தால் அது நாளுக்கு நாள் வளர் பிறைபோல் அபிவிருத்தி அடைந்து தனது நோக்கத்தை இனிது நிறைவேற்றி வருதல் தமிழ் மக்கள் அறிந்ததே. இதன் வளர்ச்சி கருதி யாம் எடுத்துக்கொள்ளும் சிரமங்களையும் நேயர்கள் அநுபவத்தில் உணர்ந்திருப்பார்கள் என்றே நம்புகின்றோம். ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாயாகிய மிகக் குறைந்த சந்தாவில் 80 பக்கங்களில் நிறைந்த விஷயங்களோடும், படங்களோடும் "ஆனந்தபோதினி" போன்ற உயரிய மாத சஞ்சிகையை நடத்துவதில் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் உண்டு என்

னும் உண்மை சிறிது சிந்திப்பார்க்கும் நன்கு விளங்காமற் போகாது. நமது "ஆனந்தபோதினி" தோன்றிய பின்னர் எல்லா அம்சங்களிலும் அதைப் பின்பற்றி எழுந்த பத்திரிகைகளின் தொகை மிக மிக அதிகமாகும். "ஆனந்தபோதினி" குறைந்த சந்தாவில் வெளிவந்த பிறகே அநேக பத்திரிகைகள் குறைந்த சந்தாவில் வெளிவரத் தொடங்கின. பெயரிலும், வடிவத்திலும், விஷயத்திலும், அமைப்பிலும் இதைப் பின்பற்றிய பத்திரிகைகள் பலவாயினும் இது ஒன்றே என்றும் ஒன்று போல் நிலைத்து நின்று தமிழ் மக்கட்கு மகிழ்வூட்டி வருகிறது. இறைவன் அருளும், சந்தா நேயர்களின் ஆதரவும் தவிர வேறு எத்தகைய உதவியும் எமக்கு இல்லை என்று இதற்கு முன்னர் பல தடவைகளில் தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டி யிருக்கின்றோம். எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் நேரினும் நம் நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைந்து தன் மதிப்புடன் இன்ப வாழ்க்கை நடத்த வழிகாட்டவேண்டும் என்ற ஒரு நோக்கத்துடனேயே யாம் தொண்டாற்றி வருகின்றோம். எமக்கு மேன்மேலும் உற்சாகமும் ஊக்கமும் அளித்து ஆதரிக்க வேண்டிய பொறுப்பு எம்பால் அன்புமிக்க தமிழ் மக்களைச் சார்ந்தது ஆகும்.

சென்ற ஆண்டிலும், அதற்கு முன்னரும் நமது "ஆனந்தபோதினி" காலத்துக் கேற்பப் பழமையும் புதுமையும் கலந்த சில விசேஷ அம்சங்களோடு வெளிவந்து மக்களை மகிழ்வூட்டிய விஷயத்தை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. சமயம், மொழி, சமூகம், அரசியல் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய துறைகளில் சிறந்த அநுபவம் வாய்ந்த அறிஞர்கள் தம்முடைய கட்டுரைகளால் இதுகாறும் "போதினி"யை அலங்கரித்தது போலவே இனிமேலும் விசேஷமாக அலங்கரிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். பெண்கள் முன்னேற்றம், சிறுவர் சிறுமியர்களின் அறிவு வளர்ச்சி முதலிய விஷயங்களை எப்பொழுதும் போலவே நமது "போதினி" தாங்கி உலவும். வழக்கம்போல் ஓயாச் சிரிப்பும், அறிவும் நிறைந்த சம்பாஷணை விகடப் படங்கள் உங்கட்கு நகை விருந்து அளியாநிற்கும். சமூக சீர்திருத்த சம்பந்தமான—படங்களோடு கூடிய—நவரசம் சொட்டும் சிறு கதைகள் உங்கட்கு இன்பத்தேன் ஊற்றிக்கொண்டே இருக்கும். ஒவ்வொரு மாதத்திலும் நிகழும் விசேஷ சம்பவங்கள் அல்லது செய்திகளைப் பற்றிய தலையங்கங்களும், ஆசிரியர் குறிப்புக்களும் உண்மை நிலைமைகளை எடுத்துக் காட்டுவனவா யிருக்கும். வழக்கப்படி தொடர் கதைகளும் வந்துகொண்டே இருக்கும். இன்னும் இவ்வாண்டில் பற்பல சிறப்பியல்புகளுடன் நமது "போதினி"யை வெளியிட ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறோம். பொருள் நெருக்கடி மிகுந்துள்ள இக்காலத்தில் சந்தாத் தொகையை அதிகப் படுத்தாமல் என்றும் ஒரே விதமாய் "ஆனந்போதினி"யாம் அறிவுக் களஞ்சியத்தை நடத்திவரும் எமக்கு நீங்கள் செய்யக்கூடிய கைம்மாறு என்ன? நமது அருமை "ஆனந்தபோதினி"யை அன்புடன் ஆதரித்து

வரும் ஒவ்வொரு நண்பரும் குறைந்தபக்ஷம் இரண்டு சந்தாதார்களை யேனும் புதிய ஆண்டின் ஞாபகார்த்தமாகச் சேர்த்துக் கொடுத்தலே அவர்கள் எமக்குச் செய்யும் சிறந்த கைம்மாறாகும். நண்பர்கள் மனம் வைத்தால் இஃது ஒரு பெரிய காரியம் அன்று. எனவே இவ்வாண்டில் எல்லாச் சந்தா நேயர்களும் தங்களால் எவ்வளவு சந்தாதார்களைச் சேர்க்க முடியுமோ அவ்வளவு பேரையும் இன்று முதலே சேர்க்கத் தொடங்கவேண்டும் என்று அன்பின் உரிமை கொண்டு எல்லாரையும் வற்புறுத்தி வேண்டிக் கொள்ளுகின்றோம். பிரதியுபகாரங் கருதாது நாட்டு நலம் ஒன்றே கருதி உண்மைத் தொண்டாற்றிவரும் நமது "ஆனந்தபோதினி"க்கு ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் சந்தா நேயர்களாகச் சேருவதைத் தங்கள் தவறாக் கடமையாகக் கருதவேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

தங்களுடைய அரும் பெருங் காரியங்கட் கிடையே "ஆனந்தபோதினி"யின்பால் அன்புகூர்ந்து விஷயதானம் செய்துவரும் அறிஞர்கட்கும், சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்பியும், வி. பி.யில் பெற்றும் ஆதரித்துவரும் அன்பர்கட்கும், புதிதாகச் சேர்ந்துள்ள சந்தா நேயர்கட்கும், ஜீவிய சந்தா நேயர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலையும் வந்தனத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். "ஆனந்தபோதினி"யின் சந்தா நேயர்களும், வாசகர்களும், விஷயதானம் புரியும் அறிஞர்களும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழுமாறு எல்லாம் வல்ல திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றோம். சுபம்.

விஷயதானம் புரிவோர் கவனிக்க

"ஆனந்தபோதினி" யில் விஷயதானம் புரிய விரும்பும் அன்பர்கள் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். எழுத்துப் பிழைகளும், வாக்கியப் பிழைகளும், பொருட் பிழைகளும் மலிந்த கட்டுரைகளை அனுப்பி வீண் நஷ்டமடைவதைவிட அனுப்பாதிருத்தலே இருபாலாருக்கும் நன்மையாகும். சிலர் கூட்டு எழுத்துக்களில் தம் மனம் போனவாறு தீட்டி அனுப்பிவிடுகின்றனர். விஷயம் நன்றாயிருக்கலாம். ஆனால் அச்சுக் கோப்போருக்கும் எமக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகின்றது. ஒரு சிலர் வரையறையின்றி ஏராளமான பக்கங்கள் நிரப்பி அனுப்பிவிடுகின்றனர். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையை ஒவ்வொருவரும் வழக்கத்தில் கொணர முயலவேண்டும். சிலர் ஒரு காகிதத்தின் இரண்டுபக்கங்களிலும் எழுதிவிடுகின்றனர். இவ்வாறு வரும் கட்டுரைகளை வெளியிட முடியாமையை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தமிழ்ப் பெண் மணிகளின் கட்டுரைகள் அப்போதைக் கப்போது "ஆனந்தபோதினி" யை அலங்கரிக்கவேண்டும் என்பது எமது பேரவா. எனவே அவர்கள் தங்கள் முன்னேற்றத்

திற்குரிய கட்டுரைகளை எழுதி அனுப்புவார்களானால் நன்றியறிதலுடன் ஏற்று வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம். வழக்கம்போல் ஏனைய அறிஞர்களும் தங்கள் அரிய கட்டுரைகளை எழுதி வருவார்கள் என்றே நம்புகின்றோம்.

வறுமை நீங்கும் வழி

நமது நாடு தன்னைத்தானே போஷித்துக் கொண்டதுடன் நில்லாமல் மற்ற நாடுகட்கும் பண்டங்களை ஏற்றுமதி செய்த செய்தி பழங்கனவாகி விட்டது. இப்பொழுது உண்டிக்கும் உடைக்கும் மற்றவாழ்க்கைப் பொருள்களுக்கும் பிறநாடுகளை எதிர் பார்த்து நிற்கவேண்டிய இழிநிலை ஏற்பட்டிருப்பது கண்கூடு. சுதேசிக் கிளர்ச்சியானது பல ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வந்தும் இன்னும் மக்களிடையே போதிய உணர்ச்சி அரும்பாதது வருந்தத் தக்கதாகும். சுமார் பதினைந்து ஆண்டுகளாகக் காந்தியடிகள் கதர் இயக்கத்தில் கருத்தைச் செலுத்தி வருகிறார். அவர் அல்லும் பகலும் கதர் முன்னேற்றத்திற்காக அரும்பாடு படுகிறார்.

சிறையிலிருந்தாலும் வெளியிலிருந்தாலும் ஏழை பங்காளராகிய மகாத்மா ராட்டினத்தைக் கைவிடுவதில்லை. அவருடைய இடையறாத தீவிர முயற்சியின் பயனாகவே நாட்டில் நாளுக்குநாள் கதர்ப்பற்றும் சுதேசிப் பற்றும் வளர்ச்சி பெற்று வருகிறது என்று கூறலாம். இப்பொழுது நாடெங்கும் கதர்ப் பொருட்காட்சிகளும் சுதேசிப் பொருட்காட்சிகளும் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொருட்காட்சிகள் சாதாரண மக்கட்குச் சுதேசியப்பற்றையும் உணர்வையும் எழுப்பும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

5-7-34-ம் தேதியில் திரிச்சியில் 3-வது அகிலஇந்திய கதர்—சுதேசிப் பொருட்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதைக் காங்கிரஸ் சட்டசபைத் தேர்தல் கழகக் காரியதரிசி ஸ்ரீமான் புலாபாய் தேசாய் திறந்து வைத்தார். ஸ்ரீமான் புலாபாய் தேசாய் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் வாய்ந்த பெரியார். சிறந்த தியாக புருஷர். இத்தகையவர் கதரே நமக்குக் கதிமோக்ஷம் அளிக்கும் என்று கூறியது பெரிதும் குறிப்பிடத் தக்கதாகும். பிறநாடுகட்குத் துணிகளை ஏற்றுமதி செய்து கொண்டிருந்த இந்தியா இப்பொழுது அந்நியர் கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஈன நிலைமைக்குப் பெரிதும் வருந்தினார். நமது நாடு விவசாய நாடு. 100-க்கு 90 பேர் விவசாய விருத்தியினால் காலக்ஷேபம் செய்கிறார்கள். இவர்கட்கு வருஷத்தில் ஐந்தாறு மாதங்கள் கூடச் சரியான வேலை இருக்காது. மற்றக் காலத்தை ஒரு வேலையும் இன்றி வீணே கழித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கட்கு வேண்டிய துணிகளைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ளல் நலம் என்று ஸ்ரீமான்

புலாபாய் தேசாய் கருதுகிறார். காந்தியடிகள் கருத்தும் இதுவே அன்றோ? கதர் ஒன்றே நமது வறுமை முழுவதையும் ஒழித்துவிடும் என்பது புலாபாயின் கருத்தல்ல. வேறு தொழில்களை விட்டி விருப்பவர்கள் செய்யக் கூடுமானால் கதர் உற்பத்தியானது லாபகரமானதல்ல என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். ஆனால் தற்காலத்தில் வேறு தொழில் என்ன இருக்கிறது? "ஒரு குடும்பத்தில் நான்கு மாதம் வேலையில்லாமல் இருக்கும்போது துணி உற்பத்தி செய்வதின், மூலம் சிறிது பொருள் கிடைத்தால் அந்த மட்டில் தேசத்திற்குப் பணம் வெளியே போகாதது லாபமே. 1928–29 முதல் 1930–31 வருஷம் வரையில் இறக்குமதி துணி குறைவானதால் தலைக்கு இந்தியாவில் ரூ. 1–8–0 லாபமாயிற்று. இன்னும் 32 கோடி குறைந்தால் தலைக்கு 3 ரூபாய் லாபமும், ஒரு வீட்டில் நான்கு நபர்களிருந்தால் 12 ரூபாய் குடும்பத்திற்கு லாபமும் உண்டாகும்" என்று ஸ்ரீமான் புலாபாய் தேசாய் எடுத்துக் காட்டிய விவரத்தைக் கிராம மக்கள் நன்கு கவனிக்க வேண்டுகின்றோம்.

1928–29-ம் ஆண்டில் 67 கோடி பெறுமான ஜவுளி வாங்கியதற்குப் பதிலாக 1931–32-ம் ஆண்டில் 24 கோடியே வாங்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டில் 10 கோடி அதிகம் ஆயிற்று. நமது சுதேசிப் பற்றாலும் கூட்டுறவாலுமே இறக்குமதி திடீரென்று குறைய நேரிட்டது என்பதை எல்லாரும் கவனிக்கவேண்டும். நமக்கு வேண்டிய துணிகளில் மூன்றில் இரண்டு பாகம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. மீதி மூன்றில் ஒரு பாகம்தான் வெளியிலிருந்து இறக்குமதியாகிறது. இதையும் தடை செய்யவேண்டும் என்பதே தேசபக்தர்களின் கோரிக்கையாகும். துணிகளை நாமே உற்பத்தி செய்து உபயோகப்படுத்துவதின் மூலம் சிறிது தொகையை மிச்சப்படுத்தி ஒரு கறவைமாடு வாங்கினால் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லாரும் நெய் பால் தயிர்களை அநுபவிக்கலாம் என்று ஸ்ரீமான் புலாபாய் தேசாய் கூறுவது உயர்வு நவிற்சி அல்ல—உண்மையேயாகும். உடல் பொருள் ஆவி மூன்றையும் நாம் இன்னும் எத்தனை நாட்களுக்கு மேல்நாட்டாருக்குத் தத்தம் செய்யவேண்டும் என்று கேட்கின்றோம். இப்பொழுது காங்கிரஸ் ஸ்தாபனங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றன. சட்டசபை தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகி விட்டது. சட்டசபைகளில் நுழைய விரும்பாத காங்கிரஸ்காரர்கள் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்பது காங்கிரஸ் கட்டளை—மகாத்மா கட்டளை ஆகும். எனவே நமது வறுமைக்கு மருந்தாக விளங்கும் கதர்ப்பிரசாரத்தையும் சுதேசிப் பிரசாரத்தையும் அவர்கள் உடனே மேற்கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றோம். சிறப்பாகக் கிராம மக்களிடையே தீவிரமான பிசாரம் நடைபெற வேண்டும் என்பதை நாம் எடுத்துக்காட்டவும் வேண்டுமோ?

"ஆனந்தபோதினி"யின் இருபதாம் பருவ வாழ்த்து.

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை பாடியது.)

சீர்மிகு சென்னைத் திருநக ரதனில்,
ஏர்மிகு பசுந்தமிழ் இன்பத் தாய்க்கு
பணி செய் நோக்கம் படைத்த நற்செல்வன்;
துணிவின் துணையால், சோதனை எதிலும்
கலங்க லில்லாக் கருத்(து) உரம் உடையோன்;
இலங்கு நூல்கள் எழில் மிகு முறையில்
பல வெளியிட்டோன்; பாமனை மறவா
நலமுறு மதியோன்; நாகவே(டு) என்னும்
நற்பதியாளன்; நல்லோர் நட்பைப்
பெற்றுச் சிறந்த பெருமை யடைந்தோன்;
முனிசாமி முதலியார் என்னும் தூய
இனியான்—சென்ற இராட்சச வருடத்(து)
ஆடி மாதத்தில் அளித்த நற்செல்வி!
சீர் கரபாத்திர—சிவப்பிரகாசர்—
பேர் தரப்பெற்றுப் பெரிய நாவலர்
குப்புசமியார் கொண்ட அன்பினால்
இப்புவி புகழ இனிது வளர்ந்தாய்!
பிரமானந்தம் பெருகப் பேசி,
பாமனன்பு பாவிட உழைத்தாய்!
இத் தமிழ்நாட்டின் எம் மூலையிலும்,
பத்திரிகைச் சுவை பலர்க்குப் அளித்தாய்!
வடிவழ(கு) உடையாய்! வாசக நேயர்
மடியில் தவழ்ந்து வளர்ந்த நற் செல்வி!
சோதனை நேர்ந்தும், தோன்றிய மதி முதல்
மாதம் ஒன்றிலும் வாராது நின்ற(து)
இல்லை இன்றளவும், எம் உயிர்ச் செல்வி!
பல்வகை சிறந்த பண்புகள் பெற்று,
உருவிலும் உரையிலும் உயர் அழ(கு) உற்று
இருபதாம் பருவம் எய்தினை இன்றே!
ஓது மெய்யின்பம் ஊட்(டு) "ஆனந்த
போதினி" என்னும் புகழ் மிகு செல்வீ!
சூழ் துயர் போக்கும் தூய் பணி செய்து
வாழ்க பல்லாண்டு! வாழ்க வாழ்க நீ!
பத்திராதிபரும் பரிவுறு சந்தா
மித்திராதியரும் மிகு சுவை கட்டுரை
வரைவோர் தாமும் வாழ்க பல்லாண்டு
தரையில் நலங்கள் தம்மைப் பெற்றே!

முக்கூடற் பள்ளு ஆராய்ச்சி

ச. தண்டபாணி தேசிகர், தமிழாசிரியர், நாகை.

செந்தமிழன்னையின் செல்வப் புதல்வர்களாகிய புலவர் பெருமக்கள் அவ்வக்காலத்து உலகியலுக்கு ஏற்றவாறு புலத்துறை முற்றிய இலக்கிய நூல்களை இயற்றித் தொண்டு புரிவாராயினர். இத்தகைய புலவர்களின் அறிவு வடிவாய்த் திகழும் அரும்பெரு நூல்கள் அனுபவத்திறம் விளக்கும் அருங்கலச் செப்புகள் காப்பியம் என்ற பெயரான் அழைக்கப் பெறும். இதனை வடநூலார் 'காவியம்' என வழங்குவர். காவியம் என்ற சொல் கவியின் தொழில் எனப் பொருள்பெறும். ஆயின் உண்டல் உடுத்தல் முதலிய கவியின் தொழிலும் 'காவ்யம்' என்ற பெயரானே அழைக்கப்படுமோ எனின்; படாது. இச் செயல்கள் புலவரல்லாதார் மாட்டும் ஒப்ப நிகழ்கின்றமையானும், பிறர் மனத்தைத் தம் வயட்படுத்தும் ஆற்றல் அவற்றிற்கு இன்மையானும், கவிஞன் மனத்துதித்த உயர்ந்த எண்ணங்களை—இயற்கை யழகுத் திறத்தைக் கேட்பார் மனத்தும் உதிக்கச் செய்யும் வன்மை யின்மையானும், மனக்கோட்டம் நீக்கி மாண்பு அளிக்காமையானும் என்பது. அக் காவ்யம் பார்ப்பதும் கேட்பதும் என இரு வகைப்படும். அவற்றுள் பார்ப்பதை 'திருஸ்யம்' எனவும் கேட்பதை 'சிராவ்யம்' எனவும் வடநூலார் கூறுவர். பார்ப்பன சிலப்பதிகார முதலிய நாடகக் காப்பியங்களாம். கேட்பன சிந்தாமணி முதலிய பெரியவும் சிறியவும் ஆகிய காப்பியத் தொகுதிகளாம். அவற்றுள் நாடகம் என்பது கூத்தினைச் சிறப்பாக் கொண்ட நூல்களாம். கூத்தென்பது தாம் மேற்கொண்ட வேடத்திற்கு ஏற்ப நடித்துப் பிறருள்ளத்தும் துன்ப வின்பக் கூறுபாடுகளைத் தோற்றுவித்து மெய்ப்பாடுகளை உண்டாக்க வல்லதாய் இருப்பது. அதற்குப் பிறருடைய துன்ப இன்பங்களைக் காணுபவராகிய தாம் நுகருவதாக உண்மையில் தோற்றும்படி நடிக்குங் காலத்தில் உண்டாகும் நகை யழுகை முதலிய மெய்ப்பாடுகளும், நடை, கொடி, பாவனைகளும் உறுப்புக்களாம். கூத்து விகற்பங்களால் நாடகக் காப்பியங்கள் பத்து வகையன என்பது வடநூலார் துணிபு. அவற்றுள் 'பிரஹசனம்' என்பது ஒன்று. அது நகைச்சுவை பயக்கும் பெரு நோக்குடையதாய்க் காமச் சுவையை பெரிதுந் தழுவிப் புதுவது புனைந்த கதை மேற்கொண்டு நடிக்கப் பெறுவது. அது தூயது, திரிந்தது, கலந்தது என மூத்திறப்படும். இவற்றைச் சுத்தம் வைகிருதம் சங்கீரணம் எனக் கூறுவர் அணியியலார். சுத்தம் நகைச்சுவை யொன்றே

தழுவிக் குல வொழுக்கத்தினின்றும் வழுவியவர்களுடைய வேடமும் செயலுந் தாங்கி ஆடப்பெறுவது. இரண்டாவது காமப் பித்தர்களின் மொழி வேடத்தோடு நகைச்சுவை தழுவிய நடிப்புக்களால் இயற்றப் பெறுவது. அவற்றுள் நாம் எடுத்துக்கொண்ட பள்ளு நாடக வகைகளும் இரண்டாவதாகிய வைகிருதத்துள் அடங்கும்.

பொதுவாக மக்கள் உள்ளத் தியற்கையானது தாமே நேரிற் கண்டு நுகர்ந்த பொருணுகர்ச்சிகளையும் பிறர் நுகர்வதாக நடித்த வழி, கண்டு இன்ப மீதூரப் பெறுதல் இயல்பே. உதாரணமாகப் பசுவை நாள்தோறும் காண்போமாயினும், பசுவேடந் தரித்த ஒருவன் பசுவேபோன்று ஆடுகிறான்' (கோகர்ண வித்தை) என்ற விடத்தும் அதனைப் போய் வியப்புடன் காணாமலிருக்க மாட்டோம். கண்டு அவன் செய்யும் உடல் சிலிர்த்தல், காதசைத்தல், தொட்ட இடத்தை மட்டும் அசைத்தல் முதலிய செய்தற்கரிய இயற்கைகள் செய்வதைப் பார்த்து மகிழாம லிருக்க மாட்டோம். பல சொல்லி என்ன? கடவுளின் தகுதிபெற்ற ராமபிரானும் தன் வாழ்நாட் செய்தியைத் தன் மக்களாகிய குச, லவர்கள் வால்மீகி முனிவர் ஆச்சிரமத்து நடிக்கக் கண்டு களித்தனர் என்றால் நாடகம் எத்தகைய கற்றாரும், மற்றையாருமாகிய மன்பதையை வயமாக்கி உணர்வளிக்க வல்லது என்பது சொல்லாமலே யமையும். அத்தகைய நாடகங்கள் தமிழ் மொழியில் பண்டிதர்களுக்குப் பயன்படு முறையிற் சிலவே யமைந்துள்ளன. பாமரர்களுக்கும் நாடக மூலமாக, ஒழுக்கமுறைமையினையும், உலகியலையுந் தெரிவித்திருத்தலாம் என்றறிந்த பிற்காலத்துப் புலவர்களால் குறவஞ்சி பள்ளு முதலிய நாடகச் சிறு நூல்கள் இயற்றப் பெற்றன. இப்போதுள்ள பள்ளு நாடகங்கள் முக்கூடற் பள்ளு, மாந்தப் பள்ளு, வடகரைப் பள்ளு, ஞானப்பிரகாசப் பள்ளு, முதுகுளத்தூர் முருகன் பள்ளு முதலிய பலவாம். இன்னும் இது போன்ற எத்துணையோ பள்ளு நாடகங்கள் செந்தமிழ்ப் பாண்டி மண்டிலத்து முதுமக்கள் வாய்ப்பாடமாகச் சொல்லப்பெற்று வருவதாகப் பழகிய அறிஞர்கள் வாயிலாக அறிகிறோம்.

அவற்றுள் நாம் ஆராய எடுத்துக்கொண்டது முன்னையதாகிய முக்கூடற் பள்ளு என்பதாம். அதில் 'பள்ளு' என்பதியாது?, கதைச் சுருக்கம், பாட்டுடைத் தலைவனியல்பு, வருணனைச் சிறப்பு, பழமொழிகள், வழக்குச் சொற்கள் முதலியவற்றைப் பற்றிச் சிறிது கூறி இவ்வாராய்ச்சி யுரையை முடிப்பேன்.

பள்ளு:—பள்ளு என்பது வயலில் வேலைசெய்யும் ஒரு வகைச் சாதியாராகிய பள்ளர்கள் தம் பள்ளியர்களோடு மாறியும் கூடியும் பேசும் முறையாற் பாடப்பெற்ற தமிழ் நாடக வகைகளுள் ஒன்றாம். பள் என்பது பள்ளரது தொழில். இந்நூலில் பள்ளுத் தொழிலின் சிறப்பே மிகுதியுங் கூறப்பெறுதலின் இப் பெயர் பெற்றது. முக்கூடல் என்பது சேரமா தேவிக்குப் பக்கத்திலுள்ளதோரூர். இங்கு மூன்று யாறுகள் ஒன்று கூடுவதால் இப் பெயர்பெற்

றது. முக்கூடலில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் அழகரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பெற்றதாதலின் இப் பெயர் பெற்றது. குறிஞ்சி நில மக்களின் இயல்பை நன்கு விளக்கி அவர்கள் குறிகூறும் திறத்தையும் சொல்லும் குறவஞ்சி நாடகங்கள் போன்று மருத நிலத்து மக்களின் மாண்பை விளக்குவது என்பது பெறப்பட்டது. இப் பள்ளு நாடகத்திற்கு இலக்கணம் பாட்டியல் நூல்களிற் சொல்லப் பெறாமையானும், இடையிடையே தெலுங்கு நாட்டுச் சங்கீத முறையைத் தழுவி எழுந்த இசைப் பாட்டுக்கள் பயின்று வருதலானும், பிற்காலத்திய திசைச் சொற்கள் பல மலிந்து கிடக்கின்றமையானும் இந்நூல் மிக மிகப் பிற்பட்டது என்பது துணியப்பெறும்.

ஆசிரியர்:—இப் பள்ளை இயற்றினார் பெயர் நன்கு விளங்கிற்றிலது. ஆயினும் இப் பள்ளு நாடகத்தில் நூற் சிறப்புக் கூறுவனவாக ஐந்து செய்யுட்கள் உள்ளன. அவற்றை யாதாரமாகக் கொண்டு ஆராயின் இதனை யியற்றினார் 'சின்னத்தம்பிப் புலவர்' என்னும் பெயருடையவர் என்பது துணியலாம். இப் பெயர் 'சின்னாயினான்' எனவும் வழங்கி யிருக்கலாம். நயினான் என்பது நாயன் என்ற சொல்லின் திரிபாகப் பண்ணை முதலாளியாகிய வேளாண் பெரு மகனை யுணர்த்தும். இப்போதும் தஞ்சை ஜில்லாவில் நயினார் என்ற சைவ வேளாண் குடியினர் விளங்குகின்றனர். ஆகையால் இப் புலவரும் சின்னத்தம்பி என்பதன் முற்பகுதியோடு வேளாண் பட்டப் பெயராகிய நயினார் என்பதையுங் கூட்டிச் 'சின்னாயினான்' என வழங்கி இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. இக்கொள்கை இந்நூல் 4-ம் செய். "வக்கரைக்குள் தனி வேளாண் சின்னத்தம்பி யருள் வாக்குப் பாட" (3-ம் செய்) "இந் நிலத்தோர் தழைத்தோங்கும் சின்னயினான் மதுரகவி யிசையாய்ப்பாட" என்பது முதலிய அடிகளால் வலியுறும். இவர் தந்தை சாமிப் புலவர் என்பதும் வேளாண் வருணத்தவர் என்பதும், அபிராமி யம்மையின் திருவடியில் என்றும் நீங்கா அன்பு பூண்டு உயர்நிலை யடைந்தவர் என்பதும் பரத நாட்டிய விதங்களில் நல்ல தேர்ச்சி யுற்றவர் என்பதும் பின்வரும் செய்யுளால் விளங்குகின்றது.

"அபிராமி பதமலரை யனுதினமு மறவாம லன்பு கூர்ந்து
தவஞான விதிமுறைமை வழுவாத தமிழ்ப்புலவன் சத்ய வாக்கி
புவிராஜர் மனமகிழப் பரத நாட்டிய விதங்கள் பொலிவாய்த்தந்த
கவிராஜ னருள் சாமிப் புலவர் பதம் அநுதினமுங் கருது வாமே" (5)

என்பதாம்.

இவருடைய குரு இந்திரஜாலம் மயேந்திர ஜாலம கஜகர்ண கோகர்ணங்களிற் சிறந்தவரும் பரத நாட்டியத்தில் தேர்ந்தவரும் ஆகிய முத்துப் புலவர் என்பவர். குரு வணக்கத்தின் இரண்டாம் செய்யுளால் வைணவ தீக்ஷை பெற்று முக்கூடலழகர் திருவருட் பேறுபெற்ற நாச்சிமுத்துப் பணிக்கர் என்பாரும் இவருக்கு ஞான குருவா யிருந்தவர் என்பது புலனாகிறது. நூற் சிறப்புச் செய்தோரால், 'அகத்திய விம்பம்' என்றும் 'அமுத மொழிகனியும் மேகம்'

என்றும், 'மதுரகவி' என்றும், 'விதி முறைமை வழுவாத தமிழ்ப் புலவன்' என்றும், 'சத்தியவாக்கி' என்றும் இந்நூலாசிரியர் பலபடப் பாராட்டப் பெறுகின்றார். இவர் பாடலியல்பு "கற்கரைக்கும் கேட்டிருந்தோர் மனங் கரைக்கும் கேளாதோர் காதும் கேட்கும், சர்க்கரைக்கும் முக்கனிக்கும் அதிக ரசம் எனத் தோன்றும்" என்ற சிறப்புப் பாயிரத்தால் இனிது விளங்கும். இவர் அபிராமி யம்மையை ஆன்மார்த்தமாகக் கொண்டு பூசித்து வந்தமையாலும், கடவுள் வாழ்த்தினும் பாயிரத்தினும் விநாயகரை வணங்குதலாலும் சைவ சமயத்தினராக இருக்கலாம் என்பதும், அங்ஙனம் இருந்தும் நாச்சிமுத்துப் பணிக்கருடைய ஆணையின்படி இந்நூலை அழகர்மேற் பாடி யிருக்கலாம் என்பதும் துணிய இடம் உண்டு. இந்நூல் 65-ம் செய்யுளில் "பாவலர்க்குபகாரி கருவையம்பலவாணன் பலகிளையுந் தழைக்கவே கூவாய குயிலே" எனக் கூறுவதால் இவர், கம்பர், வில்லி, புகழேந்தியார், மண்டலபுருஷர் இவர்களைப் போலத் தம்மைப் பெரிதும் ஆதரித்த புரவலராகிய கரிவலம்வந்தநல்லூரிலுள்ள 'அம்பலவாணன்' என்னும் வள்ளலை வாழ்த்தியுள்ளார் என விளங்குகின்றது. மற்றும் சாத்தூரில் வாழ்ந்த பெரிய நம்பி ஐயங்காராலும் உதவிபெற் றிருக்கலாம் என்பது "அருள் பெருகுந் தருமநிதி சாத்தூரிற் பெரியநம்பி ஐயங்கார் வாழ்கவே கூவாய் குயிலே" என்ற அடியால் உணரக்கிடக்கின்றது.

கதைச் சுருக்கம்:—முக்கூடலழகருக்கு சூரவளநாடு, சீவலநாடு ஆகிய இரண்டு ஊர்களிலும் பண்ணைகள் உண்டு. அவ்விரு பண்ணைகளிலும் தொன்று தொட்டு வழிவழி யடிமையாகத் தொண்டு புரியும் 'அழகக் குடும்பன்' என்ற பள்ளன் ஒருவன் இருந்தான். அவனுக்கு முக்கூடலில் அழகர்க் கடிமைப்பட்ட குலத்திற் றோன்றிய பள்ளி யொருத்தியும், பக்கத்தில் உள்ள மருதூரில் சிவபெருமானுக்குத் தொண்டு பூண்ட குலத்திற் பிறந்த பள்ளி யொருத்தியும் மனைவியராக இருந்தனர். அவருள் முக்கூடற் பள்ளி மூத்தவள். மருதூர்ப் பள்ளி இளையவள். குடும்பன் அழகர் பண்ணையில் வேலை செய்வதால் முக்கூடற்பள்ளிக்கு அதிகச் செல்வாக்கு உண்டு. இளமை ஏதுவாகப் பள்ளனுக்கு இளையாளிடம் நன்மதிப்பும் பற்றும் மிகுந்திருந்தது. இப்படி யிருக்க பள்ளன் வயல் வேலை தொடங்கும் காலம் வந்தது. பள்ளன் பண்ணையாண்டாரிடம் சென்று கும்பிட்டு ஆண்டே உமக்கு அடைக்கலம் என்று அடிவீழ்ந்து எழுந்து நின்றான். அதைக் கண்ட பண்ணையினார் மூத்த பள்ளி வரவில்லையோ என்று கேட்டார். அஞ்சிய பள்ளன் மூத்த பள்ளியிடம் சென்று 'அழகர் கட்டளைப்படி நம் பண்ணை யாண்டாரைக் கும்பிடுவோம் வா' என்று அழைத்தான். தனது கோபத்தைச் செலுத்த காலம் பார்த்திருந்த மூத்த பள்ளி 'இளையாளைக் கூட்டிப்போய்க் கும்பிடு' எனக் கூறிப் பார்த்தாள். பள்ளன் மிக வற்புறுத்தினான். உடன்பட்டு வந்தாள். இருவருமாகச் சென்று பண்ணை யாண்டையை வணங்கினார்கள். உழவுக்கு வேண்டிய முற் காரியங்கள் துவக்கப் பெற்றன. அப்போது எல்லாப் பள்ளருமாகக் கூடிக் குரவையாடி மழை பொழிவிக்கும்படித் தத்தம் கடவுளர்களை வேண்டிக்கொண்டனர். மழை பெய்தது. ஆற்றில் பெருவெள்ளம் வந்தது. சீவலமங்கை நாட்டிலுள்ள அழகர் பண்ணையைப் பார்க்கச் சென்ற பள்ளன் அந்நாட்டிலுள்ள மருநூர்ப் பள்ளியாகிய இளையாள் வீட்டிலேயே சில நாள் தங்கிவிட்டான். பண்ணையார் ஆள்விட்டுத் தேடிப் பார்த்தார். மூத்த பள்ளியை யழைத்துக்கேட்டார். தன்னைத் திரும்பிப் பாராமையாற் கோபமுற்றிருந்த பள்ளி சமயம் வாய்த்ததென்று பள்ளன் பண்ணையிற் செய்த அட்டூழியங்களை எல்லாம் கூறி அவன் மருதூராள் வீட்டில் இருப்பான் என்றும் கூறினாள்.

பண்ணையார் இளையாள் வீட்டிற்கு ஆளனுப்பினார். அவள் பண்ணையாண்டானிடம் வந்து முக்கூடற் பள்ளிதான் அழகக் குடும்பனை வீட்டில் மறைத்து வைத்துக்கொண்டு எனக்கும் பண்ணை வேலைக்கும் இடையூறு புரிகின்றாள் எனக் கூறினாள். பண்ணையார் மூத்த பள்ளியை யழைத்து அடிக்க உத்தரவிட்டார். பயந்த மூத்தாள் பள்ளன் இளையாள் வீட்டி லிருப்பதாகவும் தான் சிலரை விட்டுப் பார்த்துவரச் சொன்னதாகவும் கூறினாள். உடனே பண்ணையார் வேலை கெடுகிறது என்று எண்ணி வீடு புகுந்து அவனைக் கட்டி வரும்படி உத்தரவிட்டார். இதனை யறிந்த பள்ளன் தானாகவே ஆண்டானிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுடன் தான் இது வரையும் பார்த்ததாகச் சிலவேலைகளையும் கூறினான். அவ்வாறு பள்ளனும் பண்ணையாரும் பேசிக்கொண்டிருக்கும்போது மூத்தபள்ளி பள்ளனிடம் வந்து ரகசியமாக நீ என்னிடமே இருந்து விடுவதாக வாக்களித்தால் உன் குற்றங்களை யெல்லாம் மன்னிக்கச் செய்து விடுதலை செய்விப்பேன். இல்லையேல் பெருந்துன்பம் விளைவித்துத் தொழுவில் மாட்டச் செய்வேன்' எனக் கூறினாள். பள்ளன் அதைச் சிறிதும் மதியாதிருக்கப் பள்ளி, இவன் பண்ணையில் நெல் திருடியதையும், மாடு திருடியதையும் மாட்டைப் பண்ணை உத்தரவில்லாமல் விற்றதையும், அவன் செலவினங்களையும் எடுத்துக் கூறிப் பண்ணையாண்டானுக்குக் கோப மூட்டினாள். பண்ணையாண்டான் பள்ளன் காலில் குட்டைமாட்டும் உத்தரவிட்டான். தொழுவத்தில் மாட்டிய பள்ளன் விடுவித்துக் கொள்ள வழியின்றி வாடினான். இப்படி யிருக்கப் போனவன் வரவில்லையே என்று அவன் பிரிவாற்றாமையால் வருந்திய இளையாள் வந்து கண்டாள். தன் கணவன் மானக் கேட்டிற்கு வருந்தினாள். மூத்தாள் கொடுஞ் செயலைக் குறித்துப் புலம்பினாள். ஆண்டானிடம் சென்று விடுதலை விண்ணப்பம் செய்துகொண்டாள். ஆண்டான் இவ்வளவும் விளைந்தது உன்னாலல்லவா? என்று அவளை அடிக்க வந்தான். அஞ்சிய இளையாள் மூத்தாளாவது விடுதலை செய்யட்டும் என்று எண்ணி மறைந்திருந்தாள். மூத்தாள் வந்து பள்ளனை இடித்துக் கூறித் தன்னெண்ணம்போல் நடப்பதாக வாக்குறுதி பெற்ற பிறகு அவனை விடுவித்தாள். பள்ளன் உழவு வேலை தொடங்குகிறான். பள்ளர்களைத் திரட்டிக் காளைகளை அவிழ்த்துவரச் சொல்லுகிறான். அவற்றுள் மிக முரட்டுக் காளையொன்றை இக் குடும்பன் முன் ஏரிற் பூட்டி நடத்தினான். அப் பில்லைக்காளை வயலில் வரால்மீன் துள்ளியதைக் கண்டு வெருண்டு திரும்பி ஓடத் தொடங்கியது. பள்ளன் அதன் செருக்கடக்கி நடத்துவன் என்று எதிரிற் சென்று மரிகக அக்காளை தன் கூரிய கொம்பாற் குத்திற்று. பள்ளன் சிறிது அறிவிழந்து மயங்கி வீழ்ந்தான். இதனைக் கேள்வியுற்ற இளையாளாகிய மருதூர்ப் பள்ளி ஓடிவந்தாள். மூத்த பள்ளியும் வந்தாள். இருவரும், பள்ளன் வாய்வழி நீர் சோர அறிவிழந்து கிடப்பதைக் கண்டு புலம்பினர். சிறிது நேரங் கழித்துப் பள்ளன் மூர்ச்சை தெளிந்து புலம்போசைக் கேட்டு எழுந்தான். இருவரும் மகிழ்ந்தனர். அப்போது பள்ளன் இருவரையும் ஒன்றுபடுத்தி அன்புடன் இல்வாழ்க்கை நடத்தி வந்தான் என்பதாம்.

(அடுத்த இதழில் முடிவுபெறும்.)

இயற்கை எழில்

—:(o):—

(தே. ப. பெருமாள்.)

இயற்கை எழில் என்றால் என்னே? ஆண்டவனால் அமைக்கப்பெறும் அழகே இயற்கை எழில் எனப்படுகின்றது. மனிதனால் இயற்றப்படுவது இயற்கை அழகல்ல; அது செயற்கை அழகின்பாற்பட்டது. இயற்கையழகை மனிதன் இயற்றல் இயலாது. அஃது அவ்விறைவன் ஒருவனாலேயே இயலுஞ் செயல்.

அழகியமலை; நெருங்கிய மரங்கள்; அடர்ந்த கிளைகள்; பசியகொடிகள்; பன்னிறப்பூக்கள்; பழுத்த பழங்கள்; தூயநதி; தீம்புனலருவி; அருவிநீரில் அழகியமலர்கள்; மலரின் மகரந்தம்; மலரின் மாகந்தம் மாண்பு நிறைந்த நீரில் படிந்ததால் நீர் முழுதும் மஞ்சள்நிறம்; கொடிய விலங்குகளின் எழில் மிக்க நடை; இருண்டகண்களின் வெய்யபார்வை; மானின் ஓட்டம்; மயிலின் ஆட்டம்; மந்தியின் கூட்டம்; குயிலின் தீம்பாடல்; பலநிறப்புள்ளின் புனிதக்குரல்; கிளைவிட்டுக் கிளைசெல்லும் கிள்ளையின் ஐவர்ணத் தோற்றம்; இவைகள் அனைத்தும் மலைமேல் தோன்றும் இயற்கை எழில்.

ஞாயிறுதயம்; இருள் அகல்கின்றது; யாண்டும் ஒளிபரவுகின்றது; காகம் கரைகின்றது; கோழிகள் கூவுகின்றன; மக்கள் பரபரப்புடன் துயிலை விட்டெழுகின்றனர்; புள்ளினங்கள் உயரப்பறந்து கூக்குரலிடுகின்றன; பரிதியின் ஒளிகண்டதும் பங்கயங்கள் மலர்ந்து இன்பக் குதூகலஞ்செய்து இளந்தென்றலால் ஆடின; ஏனைய நறுமண மலர்களும் தாதவிழ்ந்து தண்மணம் பொழிந்தன; பரிதியின் ஒளிபட்ட பசியகதிர்க்குலைகள் பொன்னால் இயற்றப்பட்டன போன்று தோன்றுகின்றன; ஆ! எத்தகைய வனப்பு! இவையனைத்தும் பொழுது புலரும் பொழுதுள்ள புனித இயற்கை வனப்புகள்.

அந்தி மாலை; குடதிசையில் கதிரவன் மூழ்கும் வனப்பு; இளவேனில்; எங்கும் மஞ்சள்நிறம்; பைம் பொன்னை உருக்கிவார்த்தாலென்ன நீலவானின் நிறம் பெயர்ந்து தோன்றுகின்றது; பறவைகள் கூட்டைநோக்கிச் செல்கின்றன; தொழுவந் திரும்பும் காளையின் மணிக்குரல் காதைப் பிளக்கின்றது; ஆதித்தன் மேற்றிசையில் மூழ்கினான்; பங்கய மலர்கள் அங்கை கூப்பியது போன்று முகிழ்த்தன; நீலவானின்கண் சிவப்பு நிறந் தோன்றுகின்றது உதிரந்தோய்ந்த உடைபோர்த்தாலென்ன வானின்நிறம் மாறுபட்டுத் தோன்றும் விதம் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதா

கும். ஆ! வானின் வனப்புதான் என்னே! அதன் பின்னர் என்ன? கீழ்த்திசையில் சந்திரன் தோன்றுகின்றான். யாண்டும் பாலைப் பொழிந்தாலென்ன பசுமை நிறம்; விண் மீன்களின் வெட்டு; நிமிடத்திற்கு நிமிடம் மாறுபட்ட நிறம்; பால் நிலவு பசிய மணற்பொடிகளில் படுகின்றது; வைடூரியப் பொடி சிந்தியது போன்று எங்கும் வளமிகுந்த ஒளி, தலைவன் தலைவியைக்கண்டு ஒப்பற்ற உவகை கொண்டு அவளுடன் அளவளாவி மகிழ்கின்றான். தோழி இஃதை மறைவில் நின்று நோக்குகிறாள். மரங்கள் இளந் தென்றலால் ஆடுகின்றன. பாண் மிழற்றும் வண்டினங்கள் பறந்து செல்கின்றன. தாதவிழ்ந்து மலர்கள் இனிய தேனை வண்டுகட்கு நல்குகின்றன. இவையனைத்தும் அந்திமாலையும் அதற்குப்பின்னரும் தோன்றும் அழகிய இயற்கை வனப்பு.

மாரிக்காலம்; கறுத்திருண்ட மேகங்களின் விரைந்த ஓட்டம்; நீண்டவான வில்லின் வளைவு; பலநிறம் பொருந்திய பாங்கு; பறவைகள் கலைந்து வானில் பறக்கின்றன; காளைகள் கலைந்து தொழுவம் செல்கின்றன; பெருத்த புயல்; மரக்கிளைகள் சுக்கல் சுக்கலாய் ஒடிந்தன; பெருத்தமின்னல்; கண்ணை அள்ளுகின்றது; உரத்த இடி; பூமி அதிருகின்றது; தவளைகள் மழைக்கிரங்கும் குரல் காதைத் துளைக்கின்றது; பரிதியைக்காணோம்! ஒளியைக்காணோம்! யாண்டும் இருட்செறிவு! சோவென மழை பொழிகின்றது; ஒருவர் உரையாடுங்குரல் மற்றொருவருக்குக் கேட்கின்றிலது. எங்கும் தண்ணீர்; தவளைகளும் மீன்களும் நீருடன் களித்தோடுகின்றன. பயிர்கள் தம் நேரிய நிறம் தோன்றுகின்றது. இவைகள் அனைத்தும் மாரிக்ககாலத்தில் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத் தோன்றும் அழகு மிகுந்த இயற்கை வனப்புகளாகும்.

பசும்புற்றரை; அதில் ஓர் பருத்தமரம்; அடர்ந்த கிளைகள்; நெருங்கிய இலைகள்; வெயில்கண்டறியா வீங்கிருட் செறிவு; மரத்தின் உயர்ந்த கொப்புகள் இளந்தென்றலால் ஆடுகின்றன; மரத்தின் சிறுமலரின் வாடை நாற்பக்கமும் வீசுகின்றது; உயர்ந்த கொப்பின்கண் இருகுயில்கள்; ஆணும் பெண்ணும்; இன்பக்குரல் மீட்டி அளவளாவுகின்றன; இது போழ்து உரத்த காற்று; குயில்கள் இருந்த கொப்புகள் காற்றால் நன்கு ஆடுகின்றன: ஆடுங்கொப்பு உயரும்போழ்து குயில்களின் உரு அடுத்த கிளைகளில் மறைக்கப்படுகின்றது; அவைகள் பச்சைமாகதத் தொட்டிலில் ஆடப்படுவன போன்று நோக்கும் விழிகளுக்குப் புலனாகுகின்றன. இது போழ்து காற்றுக் குறைந்தது. எங்கும் அமைதி! மருந்திற்கும் காற்றில்லை. குயில்கள் கொஞ்சுங்குரல் செவிகளுக்கு நன்றாகப் புலனாகுகின்றது. அவைகள் ஒன்றையொன்று முத்தங் கொடுத்து இன்பந்துய்க்கின்றன. இதைக் கண்ட யாம் வியப்பும் மகிழ்ச்சியுங் கொண்டேம். காதலனும் காதலியும் இவ்வாறு கருத்தொருமித்து வாழ்தல் மாண்பு மிக்க மக்கள் கூட்டத்தும் இல்லையே என எண்ணி இறும்பூது எய்தினேம். எம் எண்ணம் மண்ணாயது. அடுத்தபோழ்த்து இரண்டும் ஊடலாற்பிணங்

கின. ஒன்றையொன்று முகத்தைத்திருப்பித் தமது பிணக்கைக் காட்டின. என்ன அவைகளுள்ளும் அத்துணை ஊடற்பிரிவா என யாம் அவைகளின் கூர்ந்தமதியை நினைந்து வியப்பெய்தினேம். அவைகளைப் படைத்த அவ்விறைவனை நினைந்தோம். எம்மையு மறியாது எம் முள்ளம் உருகியது. விழிகள் இன்பநீர் சொரிந்தன. கைகள் அவரை அவண் கூப்பித்தொழுதன; சிறிது நேரம் யாண்டும் அமைதி. பிணங்கிய குயில்கள் ஊடலை நீக்கின. முன்போல் இன்முகங் காட்டி ஒன்றையொன்று தழுவிப்புணர்ந்தன. இது யாம் ஒரு பசும் புற்றரையிலே, ஓர் ஆலமரத்திலே இயற்கை எழிலால் அடைந்த இன்பமாகும்.

நம்முன்னையர் இத்தகைய இயற்கை எழிலினைக் கண்டே இயற்கை இன்பந்துய்த்து வந்தனர். அவர்தம் உள்ளம் எக்காலும் இயற்கை இன்பத்தையே நாடும். பிற ஒன்றை நாடாது. ஆதலின் துன்பம் அவரிடம் தலைகாட்டாது. ஒருகால் அவரறியாது அவருக்கிடுக்கண் வந்துறினும் அதைக் கணப்பொழுதில் மறந்து இயற்கை எழில் செறிந்த இடம்தேடி இன்பம் அடைவர். அஞ்ஞான்றெழுந்த புலவர்தம் காவியத்தின் கண்ணும் இயற்கை வருணனையே மிக்கிருக்கும். இயற்கை வருணனைகள் மிக்க அக் காவியங்கள் படிக்குந்தோறும் மட்டற்ற இன்பஞ் சொரியா நிற்கும். கம்பர்காவியம், வள்ளுவர் நூல், சேக்கிழார் நூல், இச்சிலப்பதிகாரம், மணிமேகலை, நைடதம் முதலிய நூற்கள் இயற்கை வருணனையே முற்றும் தம்பாற் கொண்டு மிளிர்வனவாகும்.

இற்றைக்கால மக்கட்கு இயற்கை எழில் யாதென்றும், இயற்கை இன்பம் என்னவென்றும் தெரியாது. இவர்கள் மலை மீதிவர்தல் கடினமென்றும், அவண் ஒன்றும் அதிசயமில்லையென்றும், கதிரவனைக் காண்டல் கண்ணுக்குக் கெடுதல் என்றும், அந்திமாலையில் என்ன? அது போழ்து வனப்பு ஒன்றுமில்லையே என்றும் கூறா நிற்பர். அந்தோ! இவர் தம் புன்மதி இருந்தவாறென்னே! அறியாத்தனமாய் யாதறைகின்றனர்? உள்ளதை இல்லையென்றன்றோ உரைக்கின்றனர். இவர் தம் புன்மதி இரங்கற் பாலது.

மக்கள் அனைவரும் எக்காலும் இயற்கை எழிலை நாடி அடைதல் வேண்டும். இயற்கை இன்பத்தை அனுபவித்தல் வேண்டும். மக்கள் மனத்தின்கண் கவலை அகலல் வேண்டும். எக்காலும் மனத்தின்கண் அமைதி நிலவுதல் வேண்டும். அமைதி நிலவின் மட்டும் வாழ்க்கை சேரியமுறையிற் செல்லும்: இன்றேல் வாழ்க்கை என்னும் பண்டி நெறியல்லா நெறிச் சென்று அடைதற்கரிய துன்பத்தை அடையும். ஆதலின் ஒவ்வொருவரும் வாழ்க்கைக்கு இன்றியமையாத இயற்கை எழிலினைக் காணல்வேண்டும். இயற்கை இன்பம் அடைதல் வேண்டும்.

இலக்கிய இலக்கணம்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

(தொகுதி 19. பகுதி 12. 906-ம் பக்கத் தொடர்ச்சி.)

நடை—உரை

உரைநடை செய்யுணடை என நடை இருவகைப்படும். இப் பாகுபாடு எம்மொழிக்கு முரித்து. உரைத்தல் என்பது சொல்லுதல் என்னும் பொருட்டு. எனவே, உரைப்பனவெல்லாம் உரையாகலின், செய்யுளும் உரைஎனத் தழுவற்பாலதே யாமாயினும், வழக்குப்பற்றி உரை என்பது செய்யுளல்லாத நடையைக் குறித்தது என்க. வடமொழியாளர் வசனம் என்பதற்கும் இஃது ஒக்கும். இங்ஙனம் வருவன காரண விடுகுறிப் பெயர்கள் எனப்படும். சேற்றில் முளைப்பன வெல்லாம் பங்கயமாயினும், அப்பெயர் தாமரை யொன்றற்கே யாயவாறுபோல இதனையுங் கொள்க என்பது. சொல்வதே உரைநடை என்பதாயினும், அச்சொற்றொகுதியே எழுதிக் காட்டப்படுதலால், ஒற்றுமைநயங் கருதி உரைநடைக்கு இணங்க எழுதப்படுவதும் அப் பெயர்பெறும். 'களவியலுரையில் நக்கீரனார் உரைத்தார்' என்பதும் அவரான் எழுதப்பட்டதைக் குறிக்குமாறு உணர்க. அவர் தாம் சொல்லியவற்றையே எழுதினாராகலின் சொல்லக் கருதியவற்றை எழுதினும் சொல்லுதற் பயன் பெறுதலால்; உரைநடை என்பதனால் இழுக்கு இன்று என்க. கட்டு எனப்படுவது உறுதியுஞ் செறிவுமாம். எனவே, கட்டுரையாவது சொற்பொருள்கள் உறுதியுஞ் செறிவும் உற்றும் ஒழுகும் நடை எனப் பொருள்படும். உரை நடையையும் உரைச் செய்யுணடையையுங் குறிப்பது கட்டுரை என்று கூறுவதின்று என்பது கருத்தாகக் கொள்க. உறுதியுஞ் செறிவுமுற உரைக்கப்படினும் எழுதப்படினும் கட்டுரை என்றற்கு இழுக்கின்று, முன்னுரைத்தவாற்றால் பொருள் இணங்குதலின். சிலர், எழுதப்படுவதே கட்டுரை எனத் துணிவர். அது பொருத்தமன்று என்பதற்குக் 'கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை' 'இடித்திடித்துக் கட்டுரை கூறிச் செவிக்கொளா' என்பன சான்றுகளாம் என்க. எழுத்து வடிவே எல்லார்க்கும் நின்று பயன்றருதல் நோக்கி எடுத்துக்கொண்ட பொருளை எழுதப்படும் கட்டுரைகட்கு ஏற்றிக் கூறுதும்.

கட்டுரை—வியாசம்

கட்டுரை வியாசம் எனவும் சொல்லப்படுவதுண்டு. நுனித்து நோக்கின், அவை இரண்டும் வேறுபாடு உடையனவாகும். கட்டுரை விரிந்து நிற்க வேண்டுமென்னும் வரையறை இன்று. சொற்பொருட் செறிவே அமையும். வியாசம் சொற்பொருட் செறிவுபட்டுக் கிடக்கவேண்டுமென்னும் வரையறை இன்று. விரிந்து நிற்பதே அமையும். வியாசம் அகலம் என்பன ஒரு பொருட்

சொற்கள். யாதேனும் ஒரு பொருளை எடுத்து அதனோடு தொடர்பு உறும் பல பொருட்களையும் நன்கு இணக்கி விரித்து உரைப்பது வியாசம் எனப்படுமென்க. கட்டுரை விரிந்து நிற்பின் வியாசம் எனவும் கூறப்படலா மாயினும், சொற்பொருட் செறிவுற்றுச் சுருங்கிக் காட்டுவன கட்டுரைகள் வியாசமெனப்படா என்பது அறியற்பாலது. இனி, வியாசம் என்னும் வடசொற்கு நேரான தென் சொல் அகலவுரை என்பது எனக் கொள்க.

கட்டுரை வகை

கட்டுரைகள் சுருங்கிநிற்பனவும் விரிந்து நிற்பனவுமென இருபால. யாதேனும் ஒரு பொருட் பெற்றிமையைச் சில்வகைச் சொற்களில் அமைத்துக் காட்டுவது சுருக்கக் கட்டுரை. அதனையே அகலம்படக் காட்டுவது அகலக் கட்டுரை என்க. அரசு என எடுத்துக்கொண்டு, 'நீதிநெறி வழுவாது கல்வியுங் கேள்வியுங் கருத்துமுடையனாய்ச் செவ்விபட நின்று பகைவரும் உவப்ப அரசு புரிவானே அரசன்' எனிற், 'அரசு' என்னும் பொருள் பற்றிய சுருக்கக் கட்டுரை எனப்படும். சிறிது விரிந்து நிற்பினும் இழுக்காது. அரசமைதி, அரசியலுறுப்பு, செங்கோற் சிறப்பு, நீதிநெறி, அரசியன் மாண்பு, அதன்பயன் என்று இங்ஙனம் பகுத்து ஒவ்வொன்றையும் பலபட விரித்துச் செல்வது அகலக் கட்டுரை எனப்படும். அம்முறைமை இக்கட்டுரையினும் காண்க. சுருக்கக் கட்டுரைக் கண் சிறப்புடையன விடுத்துச் சிறப்பில்லன மட்டும் கூறப்படா. எடுத்துக்கொண்ட பொருட்கு (முந்துற்ற) சிறப்புடைய பொருளே கூறப்படல் வேண்டும். 'அரசு' என்னும் பொருட்கு நீதிநெறி செவ்வியுடைமை முதலியன சிறப்புடையனவாக 'அரசன் தனது உடம்பை நன்றாய்ப் பாதுகாத்தல் வேண்டும்' என்பனபோன்ற சிறப்பில்லாதனவற்றை மட்டும் கூறுதல் ஒன்றாது என்க. அகலக் கட்டுரைக்கண் இரண்டும் தழுவப்படும். எக்கட்டுரைக்கண்ணும் சிறப்புடைப் பொருள் ஒரு தலையாக நிறுவப்படுதல் வேண்டும்.

அடிப்படை—வடிவமைதி

கட்டுரை எழுதத் தொடங்குவதன் முன்னர் அதனை உள்ளத்தே வடித்துக் கொள்ளுதல் வேண்டும். கட்டுரை இன்ன முறையில் வழங்கப்படல் வேண்டுமென்று கருதாமுன் எழுதத் தொடங்கின், உரை தடுமாறி நல்கும். கட்டுரை பயில்தற்கு உரியர் (அதிகாரி), அவர்க்கு உரிய நடை, அடுக்கு முறை, பொருள்கோள், பயன் முதலியனவற்றிற்கு ஏற்பக் கட்டுரை வடிவு உள்ளத்து முதன்முதல் அமைதல் வேண்டும். அதுவே கட்டுரையின் நுண்வடிவு எனப்படும். அதனைப் பொறித்தபின் பருவடிவு ஆகின்றது. உள்ளத்தே பொருளமைதியின்றி எழுதுவதனால், பலர் எடுத்துக்கொண்ட பொருளை இனிது முடிக்கலாது அலமரும் சிறப்பு மகல ஒல்கித் தோன்றும்படி எழுதி வருகின்றனர். பொதுவாக இரண்டுமணி நேரத்தில் எழுதி முடிக்கத் தக்கதொரு கட்டுரைக்கு அரைமணிநேரம் முற்பட்ட ஆராய்ச்சி வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து உள்ளத்து கட்டுரையின் வடிவு கட்டப்பட்ட பின்னர், எழுதப் புகின் இடையீடின்றியும் பிழையின்றியும் இனிதாக எழுதல் கூடும் என்று உணர்க. இன்றேல், புரண்பட எழுதிக் கிழிப்பதும் பின்னர் எழுதுவதும் கட்டுரை இனிது முடியாமைக்கு வருந்துவதுமே பயனாய் முடியும். எழுதப் புகுவது உள்ளுறுத்தி வடித்தபின்னர் எழுதுதல் மிக எளிதாகவும் மகிழ்ச்சியை அளிப்பதாகவும் தோன்றும். நன்கு பயிற்சியுடையார்க்கு எழுதவேண்டுவன

அவ்வப்போது உள்ளத்து இனிதாக வடிவேறிப் போதலின், அவர்க்கு முற்பட்ட ஆராய்ச்சி யின்றியே கட்டுரைகள் எழுதவியலும். ஆயினும், அவர் ஆராய்ச்சியின்றியே எழுதுகின்றனர் என்பது பொருந்தாது. அவர் பன்னெடுங்காலம் பலபட ஆய்ந்து வைத்தவற்றையே தம் பயிற்சியால் விரைவிற் கொணர்ந்து எழுதுகின்றார் என உணர்க. அவரும், ஆராய்ந்து பொருளை உள்ளே வடித்துக்கொண்டு எழுதுவரேல், நுண்பொருள் பல செறிந்து கட்டுரை சால நயம்பெற்று விளங்கும் என்பது ஒரு தலை. அடிப்படையில்லாத எதுவும் முற்றுப்பெறுவதில்லை யாதலின், கட்டுரைக்கு உரிய அடிப்படை வடிவு மிக இன்றியமையாதது. அகலக் கட்டுரைகட்குரிய பொருட்டொகுதிகளை முற்றும் உள்ளத்து அமைத்தல் இயலாதுவிடின், அவற்றை எழுதிவைத்துக் கோடல்வேண்டும். அவையே எடுத்துக்கொண்ட கட்டுரைக்கு உரிய பொருட் குறிப்புக்கள் (Hints) எனப்படுவன. கட்டுரைக் கட்டிடத்திற்கு இட்ட அடிப்படையாவதும் அதுவே.

முறை

எழுவாய்—இடைநிலை—இறுதிநிலை.

அப் பொருட்குறிப்புக்கள் முறைபட்டுக் கிடத்தல் வேண்டும். இன்றேல் கட்டுரையும் முறை பிறழ்ச்சி உற்று இன்னாதாய்க்காட்டும்; பொருட்டெளிவும் சிறப்புமின்றி ஐயமும் திரிபும் பயக்கும். கட்டுரை முறையாவது. எழுவாய் இடைநிலை இறுதிநிலை என ஒவ்வொரு கட்டுரையும் பகுத்து அவற்றிற்குரிய பொருளை நிலைபெறுத்தலா மென்க. இம்முறையிலும் உண்முறை ஒழுக்கு ஒன்று காணப்படும், கட்டுரைக்கண் வரும் பொருட்பாகுபாடு ஒவ்வொன்றும் முறைபெற்று நடந்து அதன் திரண்ட வடிவம் முறைபெற்று மிளிரவேண்டும் என்பது கருத்து. எழுவாய் முதலிய மூன்றும் கட்டுரையின் திரட்சி வடிவிற்கு உரிய முறை என்க. அவற்றுட் போதரும் பொருள்கள் தோற்றம் சிறப்பு என்னும் இருவகை முறையுள் ஏதேனும் ஒன்றுபற்றி நிகழல் வேண்டும். முன்னர்த் தோன்றிய பொருளை முன்னரும் பின்னர்த் தோன்றிய பொருளைப் பின்னரும் வைப்பது தோற்றமுறை எனப்படும். முயற்சி, செல்வம், ஈகை, இன்பம் எனல் தோற்ற முறை. முயற்சி தோன்றிய பின்னர்ச் செல்வமும் செல்வம் தோன்றிய பின்னர் ஈகையும் ஈகை தோன்றிய பின் இம்மை மறுமை யின்பங்களு முண்டாதலின் செல்வத்திற்கு முயற்சியும் ஈகைக்குச் செல்வமும் இன்பத்திற்கு ஈகையும் காரணமாதல் பற்றியும் மற்றவை காரியமாதல் பற்றியும் இம்முறை காரண காரிய முறை எனவும் படும். யாவற்றுள்ளும் சிறந்த இன்பத்தை முதலில் உரைத்து அதன்பின் ஏனையவும் சிறப்பு முந்துற உரைப்பது சிறப்பு முறை எனப்படும். முதலில் அரசனையும் அதன்பின் அமைச்சனையும் அதன்பின் இம்முறையே பிறவற்றையும் உரைத்துச் சேறலும் அது தோற்ற முறை பொது முறை எனவும் படும். எனவே, முறை பொது முறை சிறப்பு முறை என இரண்டாயின. இவற்றுள் பொது முறை (தோற்ற முறை) காரண காரிய முறையேயாம். சிறப்பு முறை காரண காரிய முறைபற்றியும் காரிய காரண முறைபற்றியும் நிகழும். காரியத்தை முதலிலும் அதன் காரணத்தைப் பின்னும் நிறுவுவது காரிய காரண முறை என்க. குடம் மண் எனல் காரிய காரண முறை. குடம் காரியமும் மண் காரணமுமாம் ஆதலின். ஒரு கட்டுரையின் அகப்பொருட் கூறுகளில் மேலே கூறிய முறைகளில் யாதேனும் ஒன்று ஒழுகுதல் வேண்டும்.

ஓரிடத்து ஒரு முறையும் பிறிதோரிடத்துப் பிறிதொரு முறையும் நிறுவுதல் ஒருபான்மை கொள்ளப்படுவது உண்டு. சிலர் யாதொரு முறையும் கடைப்பிடியாது பிதற்றுரைகள் எழுதிவிடுகின்றனர். அதனால் பொருண் மலைவு ஏற்பட்டுப் பயிற்சிக்கண் இன்னாமை தோன்றுவதை அவர் அறிகிலர் போலும்! 'முறையின்றிக் கூற்று' ஒரு குற்றம் என அறிஞரால் ஒதுக்கப்படுகின்றதும் அக் கூற்று நிகழின் அதனால் சிறப்புடைப்பன பெறப்படுதல் வேண்டும் என்பதும் உணராப்பால. முறையில்லாதனவற்றை ஒழுங்கில்லாதன என்ப வாகலின், முறைப்பட எழுதப்படாத கட்டுரைகள் ஒழுங்கில எனத் தள்ளத் தக்கன.

எழுவாய் தொடக்கப் பொருளும் சிறப்புடைய பொருளும் கொண்டு இலங்குதல் வேண்டும். பொருளின் பெற்றிமை, பாகுபாடு, அமைதி, பயன் முதலியன தொடக்கத்தில் அமையற்பால. கட்டுரைக்கண் போதரும் பொருள்கள் எல்லாவற்றினும் சிறந்தது எழுவாய் அமைதல் வேண்டும் என்பது 'சிறப்புடைய பொருளை முற்படக் கிளத்தல்' என்பதனாற் பெறப்படுவது உணர்க.

இடைநிலையிற் பொருளிடைப் பாகுபாடு உபாயம் (எய்து நெறி) இடம், காலம், துணை, செழுமை, வரம்பு, கிளைப்பொருள் முதலியன எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்பக் கூறப்படுதல் வேண்டும். எழுவாயிற் கொண்ட சிறப்புடைப் பொருளை இடைநிலையிற் பலபட விரித்து எழுதுதலும் அமையும். இடைநிலை என்னும் இப்பகுதியினாலேயே கட்டுரை சிறப்பு உறல் வேண்டும். எழுவாய்க்கண் சிறப்புடைப் பொருளின் பொதுவுரை மட்டுமே கூறப்படல் வேண்டுமென்க. இடைநிலை செழுமைப்பட நில்லாவிடின் கட்டுரை வளனின்றிக் கிடக்கும். எனவே, கருதிக்கொண்ட பொருளில் சிறப்புடைப் பகுதிகளும் அவற்றோடு தொடர்புடையனவும் எடுத்துக்காட்டுக்களும் இடைநிலைக்கண் செறிந்து நிற்றல் வேண்டும் என உணர்க.

இறுதிநிலையில் முன் கூறிய பொருளின் திரண்ட பொருள், கடைப்பிடிக்க வேண்டுவன, பயிற்சி முறை முதலியன உரைக்கப்படல் வேண்டும். கட்டுரையின் ஈற்றில் பயனை நிறுவுதலும் குற்றமன்று. பயன் இது என உணர்ந்தே பொருட் பயிற்சியில் ஊக்கஞ் செலுத்துவாராதலின், அதனை முன்னர் வைப்பது நூன் முறை. அது கம்பராமாயணம் முதலிய நூன் முறையிலுங் காண்க. நூற் பொருள் அனுபவத்திற்கு வந்த பின்னரே பயன் பெறப்படு முறை நோக்கி அதனை ஈற்றில் வைப்பதும் பலரால் தழுவப்பட்டிருக்கிறது. 'கேட்போர் பயனொடு வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே' என்பதில் பயன் முன்னர் வைக்கப்படல் வேண்டும் எனக் கூறப்பட்டது. தேவாரப் பதிகங்கள் முதலியவற்றில் பயன் பின் கூறப்பட்டது. எனவே, யாவரும் எளிதில் அறியத் தக்கதும் யாவர்க்கும் இன்றியமையாததுமானவற்றின் பயனை ஈற்றில் நிறுவுவது பொருந்தும். ஒவ்வொரு சாரார்க்கே பயன்படத் தக்க பொருளாயின், அதன் பயன் முன்னர் நிறுவப்படுதல் வேண்டும். அப் பயனறிந்து அதனை வேண்டுவோர் கற்றலும் வேண்டாதார் விடுத்தலும் அதனால் இயலும். இன்றேல், அதிகாரிகள் எல்லாரும் கற்கப்புகுவர் என்பது.

மேற்கூறிய எழுவாய் கட்டுரையாகிய உடம்பிற்குத் தலைபோலவும் இடைநிலை உடல்போலவும் இறுதி நிலை கால்போலவும் சிறப்பிக்கப்படும்.

இவற்றுள் எவ்வுறுப்புக் குறையினும், கட்டுரை யுடலம் முடம்படுமென்பது கூறவேண்டுங்கொல்?

கலவைப்பு.

கட்டுரைப் பொருள் பாகுபாட்டிற்கு ஏற்பப் பிரித்து எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு கலன் அல்லது பந்தி (Paragraph) எனப்படும். ஒரு கலனில் பல பொருள்களை இணக்குதல் ஒரு பொருளை இடையில் அறுத்துப் பிறிது கலனில் அமைப்பதும் கூடா. பொருள் மிக விரிந்து செல்லுமிடத்து அதனைப் பகுத்து ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனிக் கலம் அமைக்கலாம். எனவே, ஒரு பொருள் பல பந்திகளிலும் ஒழுகுமென்க. ஆயினும், ஒவ்வொரு கலனும் ஒவ்வொரு பொருளைச் செறித்துக் கொண்டு நிற்றல் வேண்டும்.

தொடர்பு.

ஏதேனும் ஒருபொருள் விரிக்கப்பட்டு வரவே, அதன் உட்பகுதி ஒன்றை விரிக்கத் தொடங்கின விடத்தும், அது முடிந்த பின்னர் அதன் தலைப்பொருளோடு கொண்டு கூட்டப்படல் வேண்டும். தலைப் பொருளுடன் எடுத்துக் கொண்ட கிளைப்பொருட்கு ஒற்றுமை கூறாக்கால் பொருள் இனிது பெறப்படாது. மற்றொன்று விரித்தலாய் முடியும். இனிச், சிலர் கிளைப் பொருள் கூறி வரவே, அதன் தலைப்பொருளை அறவே மறந்து விடுகின்றனர். அதனால் 'கட்டுரை' இடையறவு பட்டு இன்னாதாகின்றது. சொற்குச் சொல் தொடர்ந்து நில்லாவிடின், எவ்வுரையும் கட்டுரை எனப்படாது என்று அறிக. கட்டுரை யிடை விரிக்கப்படும் ஒவ்வொரு பொருட் கூறும் வேறாக வேனும் பிறிதொரு பொருளைப் பற்றுக் கோடாகக் கொண்டேனும் தலையங்கத்தோடு தொடர்பு கூறல் வேண்டும். ஒரு வகையினும் தொடர்பில்லாத பொருள் கூறப்படாது. எடுத்துக்காட்டுக்களின் பொருட்குப் பிறிது பொருள் கூறப்படினும் அது கட்டுரைப் பொருட்கு அடங்கி நிற்றல் வேண்டும். விரிக்கப்படின், இன்னது 'நன்மை' என்னும் தலைப்பொருள் கூறத் தொடங்கி ஆண்டு இராமனது கதை முற்றும் கூறப்புகின், நன்மையாகாது இராம காதையாய் விடுமன்றோ?

எடுத்துக்காட்டு.

எடுத்துக்காட்டுட் சிறந்தன ஈற்றில் வைக்கப்படல் வேண்டும். ஒரு பொருளை நிறுவுதற்கு உரிய பல எடுத்துக் காட்டுகள் இருப்பச் சிறந்ததை முற் கூறிவிடின், ஏனைய கூறிப் பயன் யாது? அன்றியும், சிறந்ததை முற் கூறியும் தெளிவு பிறவாவிடின், வேறு எடுத்துக்காட்டு இன்றாய் விடுதலால், பொருள் நன்கனம் நிறுவப்படாது. அனுமன் தன் வரலாறு முதலியவற்றை முற்படக் கூறி எல்லாவற்றிற்கும் பின்னர் இராமனது கணைபாழியைக் காட்

டவே, பிராட்டி முற் கேட்ட வரலாற்றான் ஒருவாறு தெளிந்த தெளிவை அக் கணையாழி நன்கு உறுதி படுத்தியது. கணையாழியை முற்படக் காட்டின், எளிதில் நம்பும் செவ்வி வாய்க்கப் பெறாத பிராட்டி அனுமனை எத்துணைக்கு நம்புவள்? நூலடிகளை எடுத்துக்காட்டு மிடத்தும் யாவரானும் ஒப்புக்கொள்ளப்படும் சிறப்புடையவற்றை இறுதியில் வைத்துக் காட்டல் வேண்டும். ஆத்திச்சூடி நாலடியார் முதலிய நூலெடுத்துக்காட்டுக்கள் கூறப்பட்ட பின்னர்த் திருக்குறள் எடுத்துக்காட்டப்படு மென்க. திருக்குறள் எடுத்துக்காட்டின் பின்னர் ஆத்திசூடி முதலிய எடுத்துக் காட்டுதல் பயனின்று; திருக்குறளை ஒப்ப முடிந்த நூலாதலின். பிறவு மிது கடைப் பிடித்து உணர்க. சிறுபான்மை இம் முறை மாறுதலுங் கூடுமேனும், நன்கு நிறுவப்படத் தக்கனவற்றிற்கு இம் முறை இன்றியமையாததென்க. பழைய நூல்களின் உரைக்கண்ணும் இம் முறை ஒழுகுதல் கருதற்பாலது. எடுத்துக்காட்டுக்கள் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடையனவாதல் வேண்டும். சிலர் தாம் ஏதேனும் மேற்கோள் கூறுதல் பெருமையைத் தருமென்றெண்ணி, இரண்டொரு சொல்லொப்புமை மட்டும்கருதி இயையாதன எடுத்துக் காட்டி வாளா செருக்குகின்றனர். அது தம் அறிவின்மைக்கே அளவுகோலாதலை அவர் உணர்வதில்லை.

(தொடரும்.)

ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.
அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.
உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர்:—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஹென்றி VIIIன் மனைவிகளும் மக்களும்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

இங்கிலாந்தில் மதச் சீர்திருத்தத்தின் போக்கை சரியாக உணர்ந்துகொள்ள இத்தொடர்ச்சியில் உள்ள விஷயங்கள் உபயோகமாகுமென சில விபரங்களை எழுத வேண்டி யிருக்கிறது.

தன்னை பிறநாட்டார் மதிக்கவேண்டி ஹென்றி VII தன் நிலைமையைப் பலப்படுத்திக்கொண்டு பல வழிகளிலும் பணம் சேர்த்த விபரம் முன்பு எழுதப்பட்டது. அவ்வழிகளை யொட்டி அக்காலத்தில் ஐரோப்பாவிலேயே மிகுந்த செல்வம் படைத்த ஸ்பெயின் தேச இளவரசியான 'அரகானைச் சேர்ந்த காதரீன் என்பவளை ஹென்றி தன் மூத்த மகன் ஆர்தருக்கு மணம் செய்து கொண்டார். அவள் தன் நிலைமைக் கேற்றவாறு ஏராளமான ஸ்ரீதனப் பொருள்களுடன் வந்தாள். ஆனால் ஆர்தர் இறந்து விட்டான்! ஏராளமான ஸ்ரீதனப் பொருள்களை விட்டுவிட மனமில்லாத ஹென்றி VII, தன் இரண்டாவது மகன் ஹென்றி வயதில் பெண்ணுக்கு மிகவும் இளையவனாக இருந்தும் அந்த காதரீனை அவனுக்கு மணம் செய்து வைத்தார். அப்போது ஹென்றி இளவரசனுக்கு விவரமும் அதிகம் புரியவில்லை போலும்! இது மதக் கொள்கைப்படி நியாய மற்றது என்றதனால் இருதரப்பாரும் அப்போதைய போப்பை அணுகி, இந்த மணத்திற்கு விசேஷ அனுமதி தரச் செய்தனர். போப்பும் அரசர்களின் தயவைச் சம்பாதிக்க வேண்டி அதிக ஆலோசனையின்றி அனுமதியும் தந்துவிட்டார்!

ஆனால் ஹென்றி இளவரசர் ஹென்றி VIII ஆகி வாலிப முறுக்கில் வந்தபோது ஸ்வபாவப்படி காதரீன் வார்த்திக மடைந்திருந்தாள். தவிரவும் ஹென்றியினிடம் பிறந்த பல குழந்தைகளில் மேரி என்ற ஒரு பெண் மாத்திரம் மிகுந்து மீதிக் குழந்தைகள் இறந்துவிட்டன. அந்த மேரிக்கும் சதா "நோவும் கொடியுமாக" இருந்தது. படித் துணர்ந்த ஹென்றி இதையே தகாத காரியத்திற்குக் கடவுளின் கோபம் என்று ஆதாரங் காட்டி போப் அனுமதி செய்தது நியாயமில்லை என்று வாதாடினர். தவிரவும் ராஜ சபையில் ஆன்பொலீன் என்ற யுவதியை மணந்துகொள்ள விரும்பித் தான், மூன்

திய மணத்தை ரத்து செய்ய போப்பினிடம் அனுமதி கோரியதாகும்! போப்பின் கஷ்டங்களும் மனோ நிலையும் அவர் செய்த தந்திரங்களும் முந்தின வியாசத்தில் சொல்லப்பட்டன. கிரான்மர் என்பவரைக் கொண்டும் சீர்திருத்த பார்லிமெண்டின் ஆதரவைக் கொண்டும் காதரீன் மணம் ரத்தாகியது! ஆன்பொலீன் மணம் அனுமதிக்கப்பட்டு புனிதமு மாக்கப்பட்டது! ஆனால் அவளுக்கு ஒரு பெண் குழந்தை ஒரு வருஷத்தில் பிறந்ததும், அவளிடம் அரசனுக்கு சந்தேகமும் அருவருப்பும் தோன்றி அரசனாணையில் தலை வெட்டப்பட்டாள். (இந்த நிலையில் காதரீனும் தன் பெண்ணுடன் அரண்மனையில் இருந்து வந்தாள்!)

கிரான்மர் கோஷ்டியில் சேர்ந்த தாமஸ் கிராம்வெல் என்பவன் இப்போது அரசனுக்கு மந்திரியாகி, அரசனுக்கு ஜேன் ஸேமூர் என்ற ஒரு சீர்திருத்த மனப்போக்குள்ள பிரபு வம்சத்திய பெண்ணை மணஞ் செய்வித்தான். அவளும் ஒரு வருஷத்தில் ஒரு ஆண் மகவை ஈன்று மரணமடைந்தாள். இதற்குள்ளாகத் தான் அரசனுடைய பணமுடையை ஒட்டியும் வெளிப்படையாக, மடாலயங்கள் போப்பின் சார்பாக இருப்பவை என்ற காரணங்களைக் காட்டியும், மடாதிபதிகளை சோம்பேறிகளாகவும் நெறியற்ற வாழ்வு நடத்து வந்தார்கள் என்பதைச் சொல்லியும் அந்தரங்கத்தில் சீர்திருத்தமதத்தைப் பரப்ப வேண்டும் என்றும், கிராம்வெல் முதலில் சிறிய மடங்களையும் முடிவில் பெரிய மடங்களையும் இடித்தெறிய உத்தரவு பெற்று சொத்துக்களை கொள்ளை யடித்தான். அரசனும் வழி புரியாமல் வாளாவிருந்தான். இதுவரையில் அரசன் தன் வழியில் நின்றதைக் கண்ட கிராம்வெல் சற்றுத் துணிவு கொண்டு ஜேன் ஸேமூர் இறந்ததும் ஜெர்மனி தேசத்திய க்ளீவ்ஸ் ஊரைச் சேர்ந்த ஆன் என்ற ஒரு இளவரசியைப் பேசி மணமுடித்து வைத்தான்! (லூதரின் உபதேசம் வேர்கொண்டு ஜெர்மனியின் பெரும்பகுதி சீர்திருத்தக் கொள்கைகளை யனுஷ்டித்து விட்டது இங்கு குறிக்கற்பாலது.)

ஆனால் வந்தது கிராம்வெல்லுக்கு அனர்த்தம்! வந்த பெண் அவ்வளவு அழகும் வசீகரமுமான பெண்ணல்ல! அவளுக்கு ஹென்ரிக்குத் தெரிந்த பல பாஷைகளில் ஒன்றும் தெரியாது. அவளுக்குத் தெரிந்த ஒரே பாஷையான ஜெர்மன் பாஷை அரசருக்குத் தெரியா திருந்தது! பேச்சு சல்லாபத்திற்குக் கூட வழி யில்லை! இக்காரியத்தைச் செய்த கிராம்வெல்லின் நோக்கமும், மேழ்கடையில் அடித்த கொள்ளைகளும் அரசரின் மனக்கண் முன் தோன்றி, ஒரே இரவில் கிராம்வெல்லுக்கு மரண தண்டனை விதித்து ஆன் என்பவளையும் விவாக ரத்தால் விலக்கினார்! தான் சீர்திருத்தப் போக்கில் தன்னையறியாமல் இழிபட்டுப் போவதை யுணர்ந்தார். உடனே ஆறு கொள்கைகள் சட்டம் (The Statute of Six Articles) என்றதைச் செய்வித்து, தேசமக்கள் யாவரும் கதோலிக்க மதக் கொள்கைகளில் முக்கியமான ஆறை அனுஷ்டிக்க வேண்டும் என்று திட்டம் செய்து மறுத்தவர்களை மரண தண்டனைக் குள்ளாக்கினார். (இந்தக் கொள்கைகளில் பண்ட மாற்றுக் கொள்கை, மதகுருமார்களின் பிரமசரிய விரதவசியம், லாடின் பைபிள், லாடின் சடங்குகள் போன்றவை வற்புறுத்தப்பட்டன போலும். இவற்றை சீர்திருத்தக்காரர்கள் கதோலிக்க மதத்தின் ஆறு சாட்டைகள் Six Whips of Catholicism என்று குறித்து நடுநடுங்கினார்களாம்!)

ஆன் என்பவளுக்குப் பிறகு அரசர் காதரீன் ஹாவோர்ட் (Catherine Howard) என்பவளை மணந்தாராம்! ஆன்பொலீனைப் போல் அவளிடமும் சந்தேகம் கொண்டு அவள் தலையையும் வெட்டிவிடச் செய்தார்! (ஆராயாமல் பெரிய மனிதர்கள் தாக்ஷண்யத்திற்கென ஆதியில் போப் அனுமதி கொடுத்த ஒரு கல்யாணத்தினால் எவ்வளவு பெண்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை வாசகர்கள் மனதிலிருத்தவேண்டும். "ஆயிரங் காலப் பயிர்" என்று சொல்லப்படும் மணச்சடங்கை ஆராய்ந்து செய்ய வேண்டிய அவசியமும் குறித்துக் கொள்வது அவசியம்). கடைசியாக அரசா காதரீன் பார் என்ற ஒரு கைம்பெண்ணை தமது ஆறாவது மனைவியாகக் கொண்டார் இவள் ஒருத்தியே அரசனால் துன்புறுத்தப் படாமல் தப்பியவள். அரசருக்குப் பிற்காலத்திலும் உயிருட னிருந்தாளாம்!

இவ்வளவு மணங்களில் அரசருக்குக் குழந்தைகள் மூவர் மிஞ்சினர். மூத்த மனைவி காதரீனுடைய மகள் மேரி ஒருத்தி. இரண்டாம் மனைவி ஆன்பொலீனிடம் பிறந்த பெண் எலிஸபெத் ஒருத்தி. மூன்றாவது மனைவி ஜேன் ஸேமூர் பெற்ற மகன் எட்வர்ட் ஒருவன். வெகுகாலம் பிள்ளைப்பேறில்லாமல் பிள்ளைக் கலியைத் தீர்க்க வந்த எட்வர்ட் தாய்ப்பாலில்லாத குறையால் மேரியைப் போலவே பல நோய்களுக்கு ஆளாகி யிருந்தான். மனைவிகளிடம் எவ்வாறிருந்த போதிலும், பிள்ளைகளிடம் பிரியமாகவே, ஹென்ரி இருந்திருக்க வேண்டுமென நினைக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே அந்திய காலத்தில் மொழி பெயர்ப்பு பைபிளை மாதாக் கோவில்களில் உபயோகப்படுத்தலா மென அரசன் அனுமதித்தார். தன் வார்சுகளையும் ஒருவாறு நிர்ணயித்து ஒரு வார்சு பத்திரம் செய்வித்தார். "முதலில் எட்வர்ட் அரசராக வேண்டியது. அவர் வியாதிகளில் அகப்பட்டு வார்சில்லாமல் இறந்தால் மூத்த பெண் மேரி ராணியாக வேண்டியது. அவளும் வார்சில்லாமல் இறந்து விட்டால் இரண்டாவது பெண் எலிஸபெத் ராணியாக வேண்டியது" என்பது அதன் சாராம்சமாகும்! அரசன் தீர்க்கதரிசி என்பது பின்னால் தெளிவாகும். ஏனெனில் எட்வர்ட் பாலியத்திலேயே இறந்தான்! மேரிக்கு மணம் நடந்ததே யொழிய மக்களே யில்லை! எலிஸபெத் பகிரங்கமாக மணக்காமலே "கன்னிப் பெண் ராணி (Virgin Queen) என்ற பெயருடன் இறந்தாள்.

இவ்வியாசத்திலிருந்து ஹென்ரி VIII காலத்தில் கொள்கைகளில் சீர்திருத்தமே ஏற்படவில்லை என்பது புலனாகி யிருக்கலாம். அடுத்து எட்வர்ட் VI காலத்திய சீர்திருத்த சரித்திரம் வெளிவரும்.

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

காப்பிக் குடி.

(வீ. சங்கரய்யர்.)

காப்பிக் குடியால் பொருளாதாரத் துறை எப்படி தாக்கி யிருக்கிறது என்பதைக் கவனிப்போம். ஒரு மனிதனுக்கு ஒரு மாத உணவுக்கு ஒரு கல நெல்லும்(24-பட்டணம் படி), அதற்கு ஒரு ரூபாய்க்குட்பட்ட உபசாமான்களும் போதுமானது. ஆனால் ஒருவன் ஒரு வேளை காப்பி யருந்த ஒரு மாதத்துக்கு குறைந்தது ஒன்றரை வீசை காப்பிக் கொட்டை ஒரு வீசை சர்க்கரை, இரண்டு ரூபாய்ப் பால் ஆகக் கூடுதல் ரூபாய் ஐந்து ஆகிறது. ஒருவனுக்கு தன் வாழ்வில் உணவிற்காக செலவழிக்கப்படும் இரண்டத்தனை காப்பி என்ற இராக்ஷஸன் கொள்ளை யடிக்கிறான். கிஸ்திக்கும் உழவுச் செலவுக்கும் பணமில்லை யென்கிற குடியானவர்களும், சம்பளம் குறைந்து போயிற்றே என்கிற உத்தியோகஸ்தர்களும் என் குடியைக் கெடுக்கின்ற காப்பிக்குடியை நிறுத்தக்கூடாது. நெடுநாள் பழக்கம் என்றும் கௌரவத்துக்கு என்றும் காப்பி குடிக்காதீர்கள். பண நெருக்கடியால் பலர் எத்தனையோ விஷயங்களை யெல்லாம் விட்டு விட்டார்கள். ஆனால் காப்பிக்குடி இன்னும் நாட்டைவிட்டு ஓடமாட்டேன் என்பது அதிக ஆச்சரியமே. 'இன்று முதல் காப்பியை விட்டு விட்டேன் சார்' என்றார் என் நண்பர் ஒருவர் சுமார் 6-மாதங்களுக்கு முன். ஒருவாரம் சென்ற பின் அவர் கடையிலிருந்து ஒரு வீசை காப்பிக்கொட்டை வாங்கிக்கொண்டு வந்தார்; என்னைக் கண்டதும் உத்தரீயத்துக்குள் மூடிக்கொண்டு வீட்டிற்குள் சென்றார். நானும் உள்ளேபோய் 'அது என்ன சார்' என்று கேட்டதற்கு 'காப்பிக் கொட்டைதான், என்ன செய்வது' என்று முணு முணுத்தார். 'என் சார் காப்பியை விட்டு விட்டதாகக் கூறினீரே' என்றேன். அதற்கு அவரால் சரியாக பதில் கூற முடியவில்லை.

நான் சுமார் ஒரு வருஷத்துக்கு முன் உத்தியோகத்திலிருந்த இராஜபாளையத்தில் காப்பியினால் ஏற்படும் கெடுதல்களை நன்குணர்ந்த டாக்டர் அவர்கள் குடியைக் கெடுக்கும் காப்பியை விட்டுவிட்டு தினமும் காலை காப்பிக்குப் பதிலாக மோர் தீர்த்தம் (நீர்மோர்) சாப்பிட ஆரம்பித்தார். அவர் அவ்விஷயத்தை பலருக்கும் உபதேசிக்கவும் செய்தார். பலர் அவர் உபதேசத்தையும் கைப்பற்றினார்கள் என்று சொல்லலாம். ஆனால் சிலர் மட்டும் சில

நாட்கள் நடந்துவிட்டு 'மோரைச் சாப்பிட்டுப் பார்த்தேன் சார்; அது காப்பியாகுமா, ஐவேஜு இருக்கட்டும் அல்லது போகட்டும் சார். காப்பியைவிட முடியாது' என்று பழையபடி காப்பி அரக்கனை வணங்கி தோத்திரம் செய்ய ஆரம்பித்தனர்.

'உங்கள் வீட்டில் காப்பி யுண்டா?' என்று கேட்போருக்கு 'இல்லை' என்று கூறுவது இழிவென நினைத்து காப்பி குடிப்பவர் பலர். உண்மையிலேயே பழக்கத்தால் விடமுடியாமல் தவிப்பவர் பலர். காப்பியினிடமுள்ள அபிமானத்தால் குடிப்பவர் பலர். ஒரு கப் காப்பிக்காகப் பிராணனை விடுபவர் பலர். காப்பி யில்லாக் கல்யாணம் கல்யாணமே யில்லை. சம்பந்திகளுக்கு எவ்வளவு நல்ல காப்பியாகக் கொடுத்தாலும் திரும்பவும் காப்பிப் புகார் அதிகமாகவேதா னிருக்கின்றன. விருந்தாளிகளுக்கும் காலை காப்பிக் கொடுத்தாக வேண்டியே யிருக்கிறது. சில சமயம் அப்பொழுது காப்பிப்பொடி பூஜ்யமாக இருக்கின்றது. வந்தவர்களுக்குத் தெரியாமல் காப்பிப்பொடி கடன் வாங்க அடுத்த வீட்டிற்குப் பலர் சென்றதையும் நான் பார்த்திருக்கிறேன். சில சமயம் அடுத்த வீடுகளிலும் பூஜ்யமாக நேரிடுகிறது. என்ன செய்வார்கள் பாவம். விருந்தாளிகளையும் உடனே காப்பி ஹோட்டல்களுக்கு அழைத்துச் சென்று வீண் பண விரயம் செய்கிறார்கள். காப்பி தேவதையின் மஹத்துவமே மஹத்துவம்.

சூரியன் எப்படி லோகத்துக்கு இன்றியமையாததோ அபபடியே காப்பியானது இக்காலத்தில் இன்றியமையாததாக இருக்கிறது. தோட்டி முதல் தொண்டைமான் வரை காப்பி குடிக்காதவர்களில்லை. ஒருவரை காலையில் பார்த்தவுடன் 'ஸார் என்ன காப்பியாயிற்றா?' என்ற கேள்விதான் முதல் கேள்வி. அதனால் நன்மை யுண்டோ இல்லையோ? அதை விட்டால் பைத்தியம் பிடித்து விடுகிறதுபோ லிருக்கிறது. தலைவலி வந்து விடுகிறது என்கிறார்கள்.

சென்னைக்கு வடக்கே காப்பியே கிடையாது. பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களில் தேயிலைக் கடைகளே இருக்கின்றன. காப்பி ஹோட்டல்கள் கிடையா. காப்பிக் குடியால் சுறுசுறுப்பு உண்டாவதாய் பலர் கருதுகிறார்கள். ஆனால் அது மனிதனைத் தூக்கமின்றி கெடுத்து மூளைக்கு ஒரு உணர்ச்சியையும் உண்டு பண்ணவில்லை. காலையில் குடிக்கப்படும் காப்பி குடலில் ஒரு விதமான மந்தத்தை உண்டுபண்ணுகிறது. காப்பி குடல் நரம்புகளுக்குப் பசி யறியும் உணர்ச்சியைப் போக்கடித்து வருகிறது.

என்னவோ இந்த காப்பிக் குடியானது அடுத்துக் கெடுக்கும் ஒரு சிநேகிதனைப்போல் நம்மைக் கெடுத்து விடுகிறது. அதனை அடியோடு ஒழித்து விடுவது மிகவும் நலம். காப்பிக்குடியால் சரீரத்துக்கும் நன்மையில்லை. பொருள் லாபமு மில்லை. ஆகையால் காப்பி என்ற அரக்கன் கையில் சிக்கி அவனுக்கு இரையாகி இறக்காம லிருக்கும்படி எல்லாம்வல்ல இறைவன் யாவருக்கும் அருள் புரிவாராக.

சன்மார்க்க போதங்கள்.

(தெல்லிப்பழை-கா. சின்னப்பா.)

அந்தணர்க் கழகு பந்த மகற்றல்
ஆறுதல் பெற்றிட நீறு புனைந்திடு
இறக்குமுன் தீவினை மறக்க முயற்சிசெய்
ஈற்றி லழியும் சோற்றுத் துருத்தி
உறவின ரெவரையும் மறவா திருந்திடு
ஊக்கமாய்த் தீமையை நீக்க முயற்சிசெய்
எத்தரு ணத்தும் சத்தியம் தவறேல்
ஏக்கம் மனதைத் தாக்குதல் நிச்சயம்
ஐய னருளால் உய்வதற் கெண்ணு
ஒப்புர வேற்றுத் தப்பிதம் தவிர்த்திடு
ஓர்ம முள்ள நீர்மையனா யிரு
ஔவையை மறப்போன் தவ்வையைச் சார்வன்
கன்ம வசப்படி நன்மை யணையும்
காலனை வெல்லும் சீலம் தேடு
கிட்ட விருக்கும் துட்டரை நீக்கு
கீத நாதனின் பாதம் பற்று
குருவிலா வித்தையால் ஒருபயனில்லை
கூற்றுதைத் தோனைப் போற்றிடு நிதமும்
கெட்ட குணத்தால் நட்டம் விளையும்
கேள்விமுயன்று வேள்வி விலக்கு
கைகூசாது செய்பல தர்மம்
கொடுப்போ ரெவரையும் தடுத்தல் தவறு
கோப மடக்கிப் பாவம் பகைத்திடு
சரியென் பதைநீ பெருமை யுடன்புரி
சாலம் செய்பவர் கோலம் கவனி
சித்திரப் பயிற்சி மெத்தவும் நன்று
சீதனம் நகைக்காய் மாதரை மணந்திடேல்
சுற்றத் தவர்க்கு நற்றுணை புரிந்திடு
சூடுடை யோரை நாடிடும் நோய்கள்
செய்யு முதவியை மெய்யன்போடு செய்
சேக்கிழார் புராணம் வாக்கினி லமைத்திடு
சைவ சமயம் மெய்பல உணர்த்தும்

சொல்வ தெதையும் நல்லா யுணர்ந்துசொல்
சோறிட் டவர்க்கு மாறு செய்யாதே
தந்தா மெதையும் சிந்தையா லகற்று
தாசிக ளெவரிலும் நேசம் வையாதே.
திங்க ளணிந்த சங்கரன் பதம்துதி
தீமை மனதின் தூய்மையைக் கெடுக்கும்
துறவிக ளரன்பதம் மறவா திருப்பர்
தூற்றும் பெண்களைக் கூற்றும் வெறுக்கும்
தெய்வ பக்தி உய்வதற் கேது
தேசத் தொண்டில் ஆசைவை யென்றும்
தையல ரெவர்க்கும் மெய்யன்பு காட்டு
தொந்தர வெதாலும் சிந்தையைக் கெடாதே
தோகையர்க் குதவி சாரும் வரைபுரி
நல்லவர்க் கொருவித அல்லலும் புரியேல்
நாவினா லனேக சேவைகள் புரியலாம்
நித்தமும் வாயால் அத்தனைப் போற்று
நீரிற் குமிழி பாரிலெம் தேகம்
நுட்ப புத்தியால் பெட்பெமெக் கமையும்
நூல்பல கற்கும் சால்பை யடைந்திடு
நெசவு தொழிலால் அசைவுறா திருந்திடு
நேர்மை நெறியால் பாரிற் புகழ்பெறு
நைந்து வருந்தும் மைந்தரைத் தேற்று
நொந்தவ ரெவரின் சிந்தையும் தேற்று
நோன்பிற் சிறந்தது மாண்புறு சீவியம்
பன்னரு நற்குணம் உன்னிடத் தமைத்திடு
பாவையர் கற்பைத் தேவரும் போற்றுவர்
பிழையை நீக்கி விழைவுடன் நன்மைசெய்
பீடுடன் எவர்க்கும் கூடிய உதவிசெய்
பெற்றோர்க் கென்றும் நற்றுணை புரிந்திடு
பேதமை நிறைந்த மாதரைத் திருத்து
பைகொடு போவோர் செய்வர் மாதீமை
பொன்றுங் காலம் என்றும் நிகழும்
போலிச் சைவர் சீல மிழப்பர்
மனப்பெல வீனம் அனைத்தையும் கெடுக்கும்
மாசறு சிந்தை தேசுறச் செய்யும்
மின்னல் நேர்வாழ்வு தன்னை நம்பாதே
மீறும் மைந்தர் சோறிலா தலைவர்

முக்கா லமும்நீ தக்கது புரிந்திடு
மூட ருறவு கேடுறச் செய்யும்
மெத்த நல்ல சுத்தம் நாடு
மேலோர் வாழ்த்துச் சாலவும் நன்று
மைவிழி யாரில் வையா திருமனம்
மொழிபல கற்று எழிலுடன் வாழ்ந்திடு
மோரைப் பருகி வெண்ணீரையும் பாவி
வறுமை வரினும் சிறுமையை நாடேல்
வாட்ட முறாது நற்சேட்டம் பெருக்கு
விட்ட துர்ப்பழக்கம் தொட்டிடல் தீது
வீணரைக் கண்டு நாணுதல் நன்று
உலகிலெப் பாசமும் மலைவுறச் செய்யும்
ஊரவர் வாழ்த்த நற்பேருடன் வாழ்ந்திடு
வெட்டெனப் பேசும் துட்டரை விலக்கு
வேலையில்லா தோர் சில மிழப்பர்
வைதிடும் பழக்கம் செய்திடும் தீமை
ஒற்றுமை யெவர்க்கும் பெற்றிடும் நற்புகழ்
"ஓம்"என உரைப்போர் தீமையால் விலகுவர்.

"Funny" Magzin of India.

(Bi-monthly) Published on the 5th & 20th.

GIVES THE BEST OF EVERYTHING

Jokes, Stories, Serials, Humorous articles, Cartoons of great events and Competitions.

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE OUR ADDITIONAL FEATURES.

Price As. 1-6.

AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.

Apply to:—

The "Funny Magzin" Office,

No. 6, Lawyer Chinnathambi Mudali St.,

Sowcarpet, MADRAS.

கடன் வாங்கிய ஆங்கிலமொழி

(என். பாலசுப்பிரமணியம்.)

ஒரு இந்தியன் ஆங்கில தேசம் சென்றால் அங்குள்ள குளிருக்குத் தக்கபடி உடைகளை அணிந்துகொள்ள வேண்டியவனாகின்றான். குளிரைத் தடுத்து உஷ்ணம் தரும் உடைகளைத் தரித்துக் கொள்வான். எப்படி உடைகளை மாற்றிக்கொள்ளுகிறானோ அப்படியே அந்நாட்டுப் பழக்க வழக்கங்களையும் மேற் கொள்ளத் தொடங்குகிறான். அதே சமயத்தில் அவன் புதிதாக அணிந்துள்ள உடைகளுக்குத் தன் சுதேச பாஷையில் பெயர் இல்லாத காரணத்தினால் இங்கிலீஷ் பதங்களையே உபயோகித்துக் கொள்ளுகிறான். ஆதலால் புதிய வார்த்தைகள் கண்டுபிடிக்க வேண்டிய கஷ்டமில்லாது போய்விடுகின்றது.

மேலே கூறப்பட்டுள்ள உதாரணத்திற்கு ஒப்பவே பிரிட்டிஷார் அயல் நாடுகளுக்குச் செல்லும்போது நடந்து கொண்டார்கள்—கொள்ளுகின்றார்கள். உலகிலுள்ள சகலமான பிரதேசங்களிலும் ஆங்கில தேசத்தார்கள் காணப்படுகின்றார்கள். தங்கள் நாட்டுச் சீதோஷ்ண நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட பிரதேசங்களிலும் குடியேறியுள்ளார்கள். அப்பாகங்களில் சுற்றுப் பிரயாணங்களும் செய்கின்றார்கள். பிரஸ்தாப பிரதேசங்களில் அன்னார்கள் புதிய பதார்த்தங்களை காண்பதோடல்லாமல் புதிய பழக்க வழக்கங்களையும் அறிகின்றார்கள். தாங்கள் காணும் புதுமைகளுக்குப் பெயர் குறிப்பிட வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றது. புதிதாகக் காணும் வஸ்துக்களுக்கு ஏன் தங்கள் சொந்த தாய் மொழியிலிருந்தே வார்த்தைகள் கண்டுபிடிக்கக்கூடாது என்ற கேள்வி எழலாம். ஆனால் அவ்வழக்கம் ஆங்கிலத்தார்களிடம் மருந்துக்குக்கூட கிடையாது எனக் கூறினும் மிகையாகாது.

புதிய வார்த்தைகளைக் கண்டுபிடிக்கப் போதிய அளவு அவகாசமில்லை என்றும் குடியேறி உள்ளவர்கள் சுமாரான அறிவுள்ளவர்களாக இருப்பதால் புதிய பதங்களைத் தங்கள் சுதேச மொழியில் கண்டுபிடிக்கும் சாதனம் ஏற்பட இடமில்லை என்றும் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்டவர்களுக்கு அன்னார்கள் புதியதாக கண்டுள்ள வஸ்துக்களின் ஆதி சொந்தக்காரர்கள் உபயோகிக்கும் வார்த்தைகளையே கடன்வாங்கிக் கொள்ளும்படி பொது அறிவு கூறிவிடுகின்றது. அதே சமயத்தில் அவர்கள் அவ்வாறாகக் கடன்பட்டுப்பெற்ற வார்த்தைகளின் உச்சரிப்பையும் சரியானபடி தெரிந்துகொள்ள கவலை எடுத்துக்கொள்ளுவதில்லை. தவிரவும் தங்கள் தாய்மொழிப் பதங்களை உச்சரிப்பதுபோல அதே சமயத்தில் பேசிவிடுகிறார். புதிய வஸ்துக்களின் பெயர்களை கடன் வாங்குவதற்குப் பிரயாணம் மட்டும் காரணமில்லை. பிரஸ்தாப பதார்த்தங்கள் கப்பல் வர்த்தகர்கள் குடியேறி உள்ளவர்கள் ஆகியவர்களின் வாயிலாகவும் வந்து சேர்ந்துவிடும். அவ்வமயம் படிப்பாளிகள்

தங்கள் தாய் பாஷையிலேயே நீண்ட புதிய வார்த்தைகள் கண்டுபிடிக்க விரும்புவதும் இயற்கை. இருந்தாலும் அதிகப்படியான பொது மக்கள் அதற்குள்ளாக ஆலசியமின்றிக் கூசாமல் கடன் வாங்கிவிடுவார்கள். ஏன்? தமிழர்கள் கூட ஆங்கில பாஷையி லிருந்தும் பிற பாஷைகளி லிருந்தும் அநேக சொற்களைத் தாராளமாய் வழங்கிவருதல் காண்கின்றோம்.

இவ்விஷயத்தில் ஆங்கிலேயர்களே ஆதிகால பலத்த கடனாளிகள் எனச் சரித்திரம் கூறுகின்றது. ஆதவன் பிரகாசிக்கும் சகல தேசத்தாரிடமிருந்தும் கூசமல் கடன் வாங்கித் தாய் மொழியுடன் இரண்டறக் கலந்துக் கொண்டார்கள். எது ஆதிபதம் எது கடன் வாங்கப்பட்ட பதம் எனக் கண்டறியக் கூடாதபடி பிரிட்டிஷார் பாஷை மிளிர்கின்றது.

சைனா பாஷையிலிருந்து tea (டீ) என்பதையும் துருக்கியர்கள் மூலமாக அராபிக் மொழியிலிருந்து coffee (காபி) எனும் பதத்தையும் ஸ்பானியர் மூலமாக மெக்ஸிகன் மொழியிலிருந்து Tomato (டொமாடோ) என்பதையும் ஒரு மதன் அமெரிக்க மொழியினின்று மறுபடியும் ஸ்பானியர்கள் உதவியால் Po'ato (பொடாடோ) எனும் சொல்லையும் ஹிந்துஸ்தானியி லிருந்து பெர்ஷியன் மூலமாக Toddy (டாடி) என்னும் பதத்தையும் பிராஞ்சுக்காரர்களிடமிருந்து Soup (சூப்) எனும் பதத்தையும் ஆஸ்திரேலியாவிலிருந்து Kongaroo (கங்காரு) என்பதையும் Mango (மாங்கோ) என்பதை போர்ச்சுகீஸ் மூலமாக தமிழ் மொழியிலிருந்தும், மலேயாவிலிருந்து mangosteen godown (மாங்கோஸ்டீன் கோடவுன்) ஆகியவைகளையும் கடன்பெற்றிருக்கின்றார்கள் ஆங்கிலத்தார்கள்; லட்டின் பிரஞ்சு ஆகிய இருமொழிகளிலிருந்து அதிகம் வாங்கி உள்ளார்கள். Age (ஏஜ்) என முடிவடைகின்ற பதங்களில் அநேகம் பிரஞ்சு மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவைகளே. தவிரவும் லட்டின் பாஷை பொருள்களின் பெயர்கள் அநேகம் கொடுத்திருக்கின்றது. Origin (ஆரிஜன்) nation (நேஷன்) estimate (எஸ்டிமேட்) terrestrial (டெர்ரஸ்ட்ரியல்) ly (லி) Oxygen (ஆக்ஸிஜன்) hydrogen (ஹைட்ரொஜன்) geography (ஜியாக்ரபி) telegraphy (டெலெகிராபி) telegraph (டெலெகிராப்) telegram (டெலெகிராம்) ஆகியவைகள் கிரீக் தேச மூலமாக இங்கிலீஷார் பெற்றவைகள்.

Voyage (வாயேஜ்) எனும் பதத்தின் வரலாற்றைச் கவனித்தால் காலக்கிரமத்தில் அப்பதம் எப்படி பிரயாணம் என்னும் பொருளில் மாறியதென்பது நன்கு விளங்கும். ஆபீஸருக்கு கொடுக்கப்படும் பிரயாணப்படி எனும் அர்த்தத்துடன் விளங்கிய oviaticum எனும் லட்டின் பதம் பிரஞ்சுக்காரர்களிடம் சென்று அவர்கள் உச்சரிப்பால் Voiage என அழைக்கப்பட்டது. அது சமயம் பணம் என்ற பாகம் நழுவவிடப்பட்டது. அதனால் பிரயாணம் என்ற அர்த்தம் மட்டும் தங்கி இருந்தது. ஆங்கிலேயர்கள் Voyage எனும் உச்சரிப்புடன் கடன்வாங்கி 'கடல் வழியாக செல்லும் பிரயாணம்' என்ற அர்த்தம் தற்காலத்தில் விளங்கும் வரை வைத்திருக்கின்றார்கள். மனிதர்கள் பிரயாணம் செய்வதுபோல பதங்களும் கைமாறி சுற்றுப் பிரயாணமாகி விடுகின்றன. மலபார் அரிசி பிரயாணம் போன வரலாற்றைக் கூறி இக்கட்டுரையை முடித்துவிடுகின்றேன். முற்காலத்தில் மலபார் பிரதேசத்திலிருந்து Arishi (அரிசி) கிரீக் நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயிற்று. கிரேக்கர்கள் அதை Oruza

என உச்சரித்தார்கள். கிரீக்கிலிருந்து லட்டீனுக்கும் பிரெஞ்சுக்கும் சென்றது. பிரஞ்சு பாஷையில் Ris என வழங்கப்பட்டது. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்துவந்த மலபார் அரிசி விரைவில் இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி இங்கிலாந்துக்குச் சென்றது. அங்கே Rice ஆகிவிட்டது. கடன் வாங்கப்பட்ட வார்த்தைகள் பாடும் பரிதாபமாகத்தான் இருக்கின்றது. சரித்திரசம்பந்தமாக பார்த்தால் இன்று உலக பாஷையாக இருக்கின்ற ஆங்கில மொழியில் கடன் பதங்கள்தான் பெரும்பாலும் மிளிர்கின்றன என்ற முடிவிற்குத்தான் வரவேண்டி யிருக்கின்றது.

பேதி மருந்துகள் மிகவும் கெடுதல்.

வாலாயமாய் உபயோகித்துவந்தால், எல்லாப் பேதி மருந்துகளும் கெடுதலையை உண்டுபண்ணக்கூடியவை என்று ஜர்னல் ஆப் அமெரிகன் மெடிகல் அஸோஸியேஷன் சொல்லுகிறது. 'நிலாவிரை' ஒரு கொடும் பேதி மருந்து என்று எல்லா வைத்தியர்களுக்கும் தெரியும். சதை சுருங்குதலோடுகூடிய மலச்சிக்கலிலும், குடல் அழற்சியிலும் இது கெடுதலையை செய்யக்கூடியது. ஹெமராய்ட்ஸினால் வருந்துவோர் (பிருஷ்டபாகத்தைச் சுற்றிலுமுள்ள நாளக் குழாய்கள் விரிந்திருத்தல்) இதை முக்கியமாய்த் தவிர்க்கவேண்டும். எடையைக் குறைக்கவேண்டி, விடாமல் கண்டபடி பேதி மருந்துகளைக் கொடுப்பது மடத்தனம். தவிர, இது அபாயகரமானது. இதனால் எடை குறைந்தாலும் கூட, அது ஆகாரம் செவ்வையாய் உறிஞ்சப்படுமுன்னே குடற் கால் வழியால் சரேலென்று செல்வதினாலேயாம். அதாவது, கொஞ்சம் ஆகாரம் அடியோடு வியர்த்தமாய்விடுகிறது. தவிர அடிக்கடி பேதி மருந்து சாப்பிடுவதினால் ஜீரணக் கருவிகளை, முக்கியமாய்க் கீழ்க் குடல்களை, துர்விநியோகப்படுத்துவது போலாம். எல்லாப் பேதி மருந்துகளும் கோலனை பழுதாக்கி விடுகின்றன. அதனால், கொலைடிஸ் என்னும் வியாதியும், கோலனின் சதை சுருங்குதலும் ஏற்படுகின்றன. இந்த மருந்துகள் டியடீனம் அல்லது இரண்டாம் இரைப்பையைத்தான் முக்கியமாய்த் தாக்குகின்றன. நீடித்த டியோடனேடிஸ் என்னும் வியாதிக்கு வாலாயமாய்ப் பேதி மருந்துகளைச் சாப்பிடுவதே காரணம்.

எல்லாவித அஜீரணங்களிலும் டியோடனேடிஸ் இருந்துகொண்டிருக்கிறது. அதன் குறிகள், வயிற்றில் புளிப்பு, எரிச்சல், ஏப்பம், அபானவாயு, சாப்பிட்டானவுடன் வலி, ஓய்ச்சல், தேகம் பளுவாயிருத்தல், ஓக்காளம், பசியின்மை, சாப்பிட்டானவுடன் தூக்கம், இரைப்பை, கல்லீரல் இந்த இடங்களில் அமுக்கினால் நோய், தலைவலியோடு கூடிய குன்மம், மனோமந்தம், கைகால்கள் ஜில்லிட்டுப் போதல், வியர்வையோடு கூடிய உள்ளங்கை, நாக்கில் அழுக்கு, வாய் நாற்றம் இவை முதலியனவாம். பேதி மருந்து தற்சாந்தியேயொழிய, நிரந்தரமான குணம் கொடாது. கடைசியில் அதனால் கெடுதலே உண்டாகும்.—ஹெல்த் பர் ஆல். —ஆ. தீ.

“ திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம் ”

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

ஓதுந்தோறும் உன்னுந்தோறும் ஒப்புயர்வற்ற பேரின்ப மூட்டுவதும் ‘எங்ஙனே சொல்லினும் இன்பம் பயப்பது’ம் உண்மையன்பர்களது உள்ளத்தைப் பெரிதும் உருக்கக்கூடியதுமாகிய தெய்வத் திருவாய் மலர்ந்தருளிய நம்மாழ்வார் அவதரித்தருளிய ‘திருக்குருகூர்’ எனும் திருப்பதி, பாண்டியநாட்டு வைணவத் திருப்பதிகள் பதினெட்டினுள் ஒன்றாகும். ஆண்டவனிடம் அன்பு மிகுந்து பாடுவதினும், அவனது மெய்யடியார்கள்மீது அன்பு மிகுந்து பாடுவதில் பெரு விருப்பம் கொண்டு நின்ற அன்பர்கள், முற்காலத் தமிழ் நாட்டில் பற்பலர் இருந்தனர். சின்னஞ் சிறு முடிச்சுகள் பல கொண்ட கயிற்றினால், தன்னை அன்னை பிடித்துக் கட்டும்படி எளியனாய் நின்ற கண்ணபிரானது திருநாமத்தைக் காட்டினும், ‘குருகூர் நம்பி’ எனும் நம்மாழ்வார் திருநாமத்தைக் கூறும்போது, நாவிலே ஆராத அமுதம் ஊறிப் பொங்கிப் பெருகி வழிகின்ற தென்றார் மதுரகவி யாழ்வார். தமிழ்க் காவிய உலகிலே தனிப் பெருஞ்சுடர் நாயகமாக விளங்கும் கம்பராமாயண ஆசிரியராகிய கம்பநாட்டாழ்வார், நம்மாழ்வாரைத் தலைவராகக் கொண்டு அரும்பொருள்கள் பொதிந்த அந்தாதி பாடி மகிழ்ந்தார். ஆழ்வாரது அவதாரஸ்தலமாகிய திருக்குருகூரில் பிற்காலத்தில் தோன்றிய புலவர்களுள் பலர், ஆழ்வாரைத் தலைவராகக் கொண்டனவும் அகத்தைக் கவர்ந்து ஆனந்தம் ஊட்டுவனவுமாகிய சீரிய நூல்கள் பலவற்றைச் செய்து மகிழ்வாராயினர்.

அத்தகைய சிந்தைக்கினிய செந்தமிழ்ப் பனுவல்களுள் மிகப் பல, இன்னும் அச்சு வாகனம் ஏறாதிருந்து வருகின்றன. அவ்வாறு ஓலைச் சுவடிகளிலிருந்த பனுவல்கள் பலவற்றில், தமிழ்த்தாயின் தவப்பயனாக சமீபத்தில் “திருக்குருகூர் மகிழ் மாறன் பவனிக் குறம்”—என்பதொரு சீரிய செந்தமிழ் நூலொன்று வெளிவந்துளது. நலம் பலவும் நிரம்பிய தலைமகன் ஒருவனிடம் காதல் மிகுந்து நிற்கும் நங்கை ஒருத்தியின் முன், குறி சொல்லும் குறத்தி ஒருத்தி தோன்றி, தலைவன் பெருமை—நகர்ச் சிறப்பு—மலைவளம்—நாட்டுவளம் முதலியவற்றை விரித்துரைத்துக் குறி சொல்லுவதை உட்பொருளாகக் கொண்டது ‘குறம்’ எனும் தமிழ்ப் பிரபந்தம். எளிமையும் இனிமையும் பக்தியும் காதலும் சொல்லின்பமும் பொருளின்பமும் வருணனை நயங்களும் ஒருங்கே நிரம்பப்பெற்று, ஓதுவோர் உள்ளத்தை ஒப்பற்ற தூய தெய்வக்காதல் உலகில் சஞ்சரிக்கச் செய்விக்கக்கூடிய இப்பிரபந்தத்தில் காணப்படும் பலவகைப்பட்ட நயங்களும் வாசகர்கட்குப் பேரின்பம் ஊட்டக்கூடியனவாக இருக்குமென்னும் உறுதியான நம்பிக்கையினாலே, செய்யுள் நடையி

லுள்ள இப்பனுவலில், இடையிடையே சிற்சில பொருள்களைக் கூட்டியும் குறைத்தும் இக்கட்டுரை வரையத் துணிந்தேன்.

பலநிற மணிகளால் செய்த மணிக் கூடையை இடையிலே தாங்கி, மணிவளைகள் கலகலவென்று குலுங்கும் மலர்க்கையிலே மாத்திரைக் கோலை ஏந்தி, பலவகை நிறமும் வடிவும் உடைய அழகிய காட்டுப் பூக்களைச் சூடிய கருங் கூந்தல் காற்றில் அவிழ்ந்து தொங்க, இயற்கைக் கருமை உடைய கயற் கண்களுக்கு செயற்கைக் கருமையும் ஊட்ட கரிய மை தீட்டி, பதங்களில் அணிந்த சிலம்பு புலம்ப குறத்தி ஒருத்தி உல்லாஸமாக மெல்ல மெல்ல நடந்து வருகின்றாள். குருவி பிடித்துக் கொக்கரிக்கும் அற்பக் குறத்தியல்ல அவள்; மகிழ்மாலை அணிந்து மாதவனை நினைந்து மனமுருகி நின்ற ஞானச் செஞ்சுடர் நாயகராகிய நம்மாழ்வாரது தெய்விகத் திருவாய்மொழியால், வடமொழிக்கும் மேற்பட்ட தனிப்பெருஞ் சிறப்பைப் பெற்ற செந்தமிழ் மணங்கமழும் சந்தனப் பொதிய மலையைச் சார்ந்த சுந்தரக் குறத்தி அவள். கைக்குறி, மெய்க் குறி, கண் குறி, மொழிக் குறி முதலிய பலவகைப்பட்ட குறிகளையும் நோக்கியவளவில் நுண்ணிதின் உணர்ந்து வாக்கின் திறமையால் நயம்பட மொழிந்து, எவரையும் எளிதில் மயங்கச் செய்யக்கூடிய பேராற்றல் பெற்ற சிங்காரக் குறத்தி அவள். எளிய மாதர்கள் மீது நாணமின்றிப் போர் தொடுக்கும் ஈனமாரனை வென்ற ஞானமாறனாகிய நம்மாழ்வாரது திருவாய்மொழித் தமிழ் மணக்கும் பொதிய மலையில் வதியும் குறத்தி அவள். பலவகைப்பட்ட நாட்டு வளங்களையும் மலைவளங்களையும் கண்ணாரக் கண்டு களிக்கும் பேராவலால் தூண்டப்பட்டவளாய், அவன் பொதிய மலையினின்றும் புறப்பட்டு ஊரூராகத் திரிந்து குறி சொல்லிக்கொண்டுவருகின்றாள். முடிவில், அவள் நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூர் நகரை அடைந்து வீதி வழியே நடந்து வந்தாள்.



பச்சை மேனிப் பவளவாய் மோகனப் பைங்கிளிகள் இருந்து பண் மிழற்றும் ஒரு மாளிகையின் மேன் மாடத்திலே நின்று கொண்டிருந்த ஒரு பெண்மணியின் கண்ணோக்கம், அக்குறப் பெண்மேல் விழுந்தது. அக்குறத்தியின் முகத் தோற்றத்திலிருந்தே அவள் குறி சொல்லுவதில் பெரிதும் வல்லவளாக இருப்பாளென்பதை உணர்ந்த அப்பெண்மணி, காதற்பிணியால் உடல் மெலிந்து உள்ளம் கரைந்து

உருகும் தனது செல்வப் புதல்வியின் நிலையைக் குறித்து குறி கேட்க விரும்பியவளாய், தனது மகளை அழைத்துக்கொண்டு கீழிறங்கி வந்து குறத்தியைக் கூப்பிட்டு பின்வருமாறு கூறலானாள்:—

'அகத்தினழகு முகத்தில் தெரியும்'—என்பதுபோல், குறி பார்த்துச் சொல்வதில் நீ பெரிதும் தேர்ந்தவளாக இருப்பாயென்பதை உனது முகக் குறியே இனிது உணர்த்துகின்றது. ஞானப் பொலிவும் மேனிப் பொலிவும் நிரம்பிய நம்மாழ்வார், அன்ன வாகனத்தில் ஆரோகணித்து திருவீதியில் பவனி வந்தபோது, எனது மகள் ஆழ்வாரை உற்று நோக்கினள்! தனது ஒப்புயர்வற்ற திருவடிவழகு முழுவதையும், எனது மகளது கண்களுக்குப் புலப்படுத்தி யருள ஆழ்வாரும் திருவுள்ளங் கொண்டார் போலும்! அன்று தொட்டு இன்று வரையில், என் மகள் கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்; மார்பில் சந்தனம் அணியாள்; மலர்க் கண்களுக்கு மை எழுதாள்; அன்போடு நெருங்கும் பூவையை ஆசையோடு நோக்குவதைவிட்டு, வெறுப்போடு நோக்குகிறாள்; கொஞ்சிக்கொண்டு நெருங்கும் பைங்கிளியின் பவள வாயில் பாலுணவை ஊட்டாள்; பெரு விருப்புடன் விளையாடும் பந்துகளையும் பதுமைகளையும் மூலையில் எறிந்துவிட்டாள்; மாந்தளிர் போன்று அழகிற் சிறந்த மேனி, வெள்ளை வெளேலென்று வெளுத்துவிட்டது; மேனியெங்கும் பயலை பூத்துப் பரவிவிட்டது. சில வேளைகளில், பொற்பதுமைபோல் அசைவற்று நின்று நீண்ட சிந்தனையில் ஆழ்ந்துவிடுகிறாள்; சில சமயங்களில், விழிகளிலிருந்து நீர் அருவிபோல் பெருகி வழிய நின்று கலங்குகிறாள்; சில நேரங்களில், பித்து மருந்தவளைப் போல் பெருநகை புரிகிறாள்; சில வேளைகளில், தனக்குத் தானே என்னென்னவோ பிதற்றுகிறாள். தன்னைத்தான் மறந்து இரவும் பகலும் அகம் உருகி நிற்கும் இப்பெண்ணை, எத்தெய்வம் பிடித்துக்கொண்டதோ தெரியவில்லை. நாங்கள் என்னென்னவோ செய்து பார்த்தும், எதனாலும் இவளது நோய் இன்றளவும் சிறிதும் தணிந்தபாடில்லை. இவளைப் பற்றியுள்ள தெய்வம் இன்னதென்பதையும் இவளது பிணியை நீக்கக்கூடிய மார்க்கம் எது என்பதையும் நீ உள்ளது உள்ளபடி உரைப்பாயானால், என்னையும் இப்பெண்ணையும் துயரக்கடலிலிருந்து கரையேற்றியவளாவாய்!"—

உடனே, அக் குறப்

பெண் ஒரு முறமும் கொஞ்சம் நெல்லும் கொண்டு வருமாறு கூறவும், அவை கொண்டுவந்து கொடுக்கப்பட்டன. அவள் தனது குல தெய்வத்தைச் சிறிது நேரம் பிரார்த்தித்த பின்னர், அவள்மேல் தெய்வ ஆவேசம் தோன்றலாயிற்று; அம்முறத்திலிருந்த நெல்லில் கொஞ்சம் எடுத்துக் குறி பார்க்கலானாள்; உடனே, அவளது உடல் வேர்க்கத் தொடங்க, மயிர்க்கூச்செறிந்தது. பின்னர், அன்னையையும் பெண்ணையும் நோக்கி அவள் பின்வருமாறு பேசத் தொடங்கினாள்:—

"அம்மே! நீ எதற்காக வருந்தவேண்டும்? இப்பெண்ணின் கவலைக்குக் காரணராக நிற்பவர் எவர் என்பதையும்; இப்பிணியை அகற்றும் வழி எது என்பதையும் விரிவாகச் சொல்கிறேன் கேள்:—

தலைவன் சிறப்பு

"மோதி எழுந்து விழுந்து புரண்டு அலைகள் விளையாடும் நீலக் கடலின் நீரைக் குடித்து மேனி கருத்து வயிறு பெருத்து மெல்ல மெல்லச் செல்லும் மேகங்கள், களைதீரப் படுத்து உறங்கும் பொதியமாமலைக்கு அருகிலிருப்பவன். அந்த மலையிலுள்ள சந்தனத்தையும் அகிலையும் செம்பொன்னையும் நவமணிகளையும் ஏராளமாக வாரிக்கொண்டு ஓடிவந்து, தனது இருகரைகளிலும் இறைத்துக் குதூகலிக்கும் வளஞ்சிறந்த பொருநை நதிக்கரையில் இருப்பவன். குடிகுடியாக திருமாலுக்கே அடிமை செய்யும் தொண்டர் குலத்தில் தோன்றிய திருவழுதி வளநாடன். பொன்னும் முத்தும் பொருளும் மலிந்து வளங்கள் பலவும் நிரம்பிய திருக்குருகூரை உடையவன். பிறந்தவுடனே தொடரவந்த மாயையை வெருட்டி ஓட்டி வெற்றி கொண்டதால், 'சடகோபன்' எனும் திருநாமத்தைப் பெற்றவன். கருணைக் கடலாகிய திருமாலின் திருவுள்ளத்தில் சினமூட்டக்கூடிய கொடியோரை நடுங்கச் செய்யும் கவிதையாகிய வீரப்பரியை உடையவன். 'இருள்தருமா ஞாலத்தில் தீவினைப்பயனால் நேரும் பலவகைப்பட்ட துன்பங்களாகிய பசிப்பிணியின் கொடுமையைச் சகிக்க முடியாமல், அதைத் தீர்த்துக்கொள்ள ஞான இன்பத்தைச் சுவைக்க விரும்புவோரெல்லாரும் வாருங்கள் வாருங்கள்' என்று கூவியழைப்பதுபோல் வானில் ஆடிக்கொண்டிருக்கும் அன்னக் கொடியை உடையவன் எம்பெருமான். நான்மறை முடிவின் சீரிய உட்பொருள்கள் எவர் செவியிலும் விழும்படியும் சிற்றறிவினரும் போலி வாதிகளும் குதர்க்க வாதங்களால் மற்றவர்களை மயங்கச் செய்வோரும் நடுங்கும்படியும் முழங்கும் வீரத் திருவாய் மொழியாகிய வெற்றி முரசுடையவன். 'பரத்வ நிர்ணயம்'—என்னும் வெற்றிப் படையை உடையவன். பண்பாடும் வண்டினங்கள் மொய்த்திருந்து, செந்தேனருந்தும் மணம் மிகுந்த மகிழ்மாலையை மகிழ்ந்து அணிவோன்.

'அருவாய் வெளி உருவாய் உயர் அருளாய் நிறை பொருளாய்' உடல் மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துள்ள இறைவனாகிய மணிவிளக்கை இதயத்தில் இருத்திக்கொண்ட ஒப்புயர்வற்ற தனிப்பேரொளியை உடையவன். திடம் மிகுந்த கடயானை கொலை வேடனையும் கொல்லும் திருச்சங்கணித்துறைக்கு உரியவன். கண்காட்டி தனம் காட்டி மையல் மூட்டும் தையலாரிடம் மறந்தும் செல்லாத நன்மனத்தைப் பெற்ற ஞானக் கொற்றவன்; திருமால் திருவருளைப் பெற்றவன்; மறைபொருளைப் பறையறைந்த நற்றவன். 'கொஞ்சு பூங்கிளி வஞ்சி தங்கிய குமரித்துறை'யை உடையவன்.

நகர் அலங்காரம்.

சீரார் மறை முழங்கும் செல்வத் திருக்குருகூர் நகரிலே, 'என்ன நோன்பு நோற்றனளோ இவனைப் பெற்ற வயிறுடையாள்'—என்று கண்டோர் எவரும் களித்து உரையாடுமாறு உடைய நங்கையின் திருவயிற்றில் தோன்றிய மெய்ஞ்ஞானச் சுடர் நாயகராகிய சடகோபர் உல்லாஸமாக திருவீதியில் பவனி வருங்காலத்திலே, அன்பர்கள் நகரை அலங்கரிக்கும் சிறப்பைச் சிறிது கேள்:—

"கூடகோபுர மாட மாளிகைகளிலே, பலவகைப்பட்ட அலங்காரங்கள் செய்வார்கள். அழகிய வீதிகளிலே, பன்னீர் கொண்டு தெளிப்பார்கள்; பலவித அழகிய இலைகளாலே பசுந் தோரணங்கள் கட்டிப் பலவிடங்களிலும் தொங்கவிடுவார்கள். வாழை மரங்களையும் கமுகு மரங்களையும் கருப்பங்கழிகளையும் ஆங்காங்கு கட்டுவார்கள். சந்தனத்தைக் கரைத்து வீதியெங்கும் வாரி வாரி இறைப்பார்கள். தெருவாசலில் குத்து விளக்கு ஏற்றிவைத்து பூரண கும்பங்களின் மீது பூக்களைச் சொரிந்து மகிழ்வார்கள். எங்கு நோக்கினும் இன்பமே பொங்கும் அத்தகைய திருவிழாவிலே, வீர முரசங்கள் 'டாம் டாம்' என ஒலிக்க—வெற்றிச் சங்கங்கள் 'பூம் பூம்' என முழங்க—மத்தளம் கொம்பு தவில் தாரை முதலிய பலவகைக் கருவிகள் பேரொலி எழுப்ப—மாதர்கள் சங்கீதமும் மாதவர்கள் வேதமும் பாட அந்தணர்கள் சிந்தை மகிழ்ந்து புடைசூழ—திருக்குருகூர்ச் சடகோப நாயகர், திருவீதியில் பவனிவந்துகொண்டிருந்தார். அவ்வேளையிலே, உடலில் பலவகை மணி அணிகளைப் பூட்டி, திருநெற்றியில் கஸ்தூரி திலகம் தீட்டி, விழிகளில் கரிய மை எழுதி, உனது தோழியர்களோடு அன்ன நடை நடந்து சென்று திருக்குருகைச் செல்வரை விருப்போடு நோக்கினாய்! நோக்கிய நீ, செயல் மறந்து மயல் மிகுந்து நின்றாய்!



பெண்ணரசே! அவ்வண்ணம் நீ எதை நினைந்து செயல் மறந்து நின்றாய்? உனது உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் தோன்றி, உன்னைப் பொற்பதுமைபோல் அசைவற்று நிற்கச் செய்தன? சற்றே வாய்திறந்து சொல்லாயோ? பாவம்! நாணம் உனது பவள வாயை அடைத்துக் கொள்கிறது போலும்! நீ வாய்திறந்து சொல்லக் கூசினாலும், குறியறியும் திறமையால் நடந்தவற்றை நானே கூறுகிறேன் கேள்:—

"அந்த நாயகர்மேல் நீகொண்ட காதல் மிகுதியினால், பூரிப்புடன் சென்ற உனது உடல் மெலிந்தது; மணிக்கைகளும் மெலிந்தன; அவற்றில் அணிந்திருந்த வளைகளும் கழன்று விழுந்தன. அவரது தோள்களை அணைய நாடி, உனது உள்ளம் பெரிதும் வாடியது. உனது மாந்தளிர் மேனி மாறி, அங்கமெங்கும் தங்கநிறம் ஆயிற்று. உன்னையும் மறந்து, உடனிருந்த தோழிகளையும் மறந்து, உனது அன்னையையும் மறந்து நின்றாய்! அன்று முதல் இன்றுவரை, இரவும் பகலும் மெழுகேபோலும் அகம் கரைந்து உருகுகிறாய்!

மலைவளம்

இவ்வாறு கூறிய குறமாது, கயல் விழிகளை உருட்டி கைகுவித்துத் துதித்து, "குமரித்தாயே! குறி உணர்த்த வருவாய்!"—என்று வேண்டிக்கொண்டு, பின்வருமாறு பொதியமலைவளத்தைப் புகழ்ந்து பாடலுற்றாள்:—

"பொருத்தமுடன் மதகரிகள் பெருத்த கருமலையே!
புலியுடன் வெங்காடி சிங்கம் மலியும் எங்கள் மலையே
கருத்திருண்ட மான்மரைகள் உருத்திரண்ட மலையே!
கடமாவும் வரை ஆடும் நடமாடும் மலையே!"

"துன்னு கன்னி காரமகிழ் மன்னிவளர் மலையே!
துலங்கு சிறு தெங்கினங்கள் இலங்கும் எங்கள் மலையே!
பன்னி தென்ன மாங்குருந்து வன்னிவளர் மலையே!
பயில் ஞானவசம்பு வஞ்சி இயல்பான மலையே!"

"அம்மே! எங்களது பொதியமலையிலே, ஓங்கி வளர்ந்துள்ள கொன்றை மரங்கள் தங்க நிறங்கொண்ட மலர்களைத் தாங்கி காற்றில் அசைந்தாடும் காட்சி அற்புதக் காட்சியாகத் தோன்றும்; பசுங்கடம்பு, காஞ்சி, நெல்லி முதலியன வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து நிற்கும்; வேங்கை, பலா, குறிஞ்சி, புன்னை முதலிய பலவித மரங்கள் நிறைந்து விளங்கும்; ஏலம், இலவங்கம், மஞ்சள், அதிமதுரம் முதலிய பலவகைச் செடிகள் செழித்து வளர்ந்து கிடக்கும். சௌந்தர்ய தேவியாகிய மலர்மகளும் பிரகிருதி தேவியாகிய புவிமகளும் பெரிதும் மகிழ்ந்து தத்தம் திருவருளைப் பொழிய நிற்கும் மலை எங்கள் மலை. பாண்டியநாட்டில் வளங்கொழிக்கும் பொருநை நதியின் பிறப்பிடம் எங்கள் மலை. யோகிகளும் முனிவர்களும் இருந்து தவம் புரியும் மலை எங்கள் மலை. என்றுமுள்ள தென்தமிழை இயம்பி என்றுங் குன்றாத தனிப்பெரும் புகழ்பெற்ற குறுமுனிவராகிய அகத்தியர் வாழும் மலை எங்கள் மலை. உடலையும் உள்ளத்தையும் உயிரையும் ஒருங்கே குளிர்விக்கும் இன்னிளம் பூந்தென்றற்காற்று என்றும் வீசிக்கொண்டிருக்கும் மலை எங்கள் பொதிய மலை. அதன் வளம் முழுவதையும் பேதையாகிய என்னால் விரித்துரைக்க முடியுமோ?

நாட்டுவளம்

ஆடவர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் சுடர்வாளும் இருதயத்தில் ஊடுருவிப் பாயும் கொடுங்கணையும் நோக்குவோர் மனத்தை எளிதில் சிதறச் செய்யும் கூரிய வேலும் போலும் விளங்கும் நீலவிழிகளைப் பெற்ற சோலைக் குயிலே! உயிருக்கு உயிரே! மென்னடை அன்னமே! தீங்கனிகள் கனிந்து

ஒழுகும் செழுந்தேனே! கார்தல் மிகுந்து நிற்கும் பெண்மானே! உனது சிந்தையைக் கவர்ந்துகொண்ட செல்வாது திருவழுதி நாட்டின் வளத்தைக் குறித்துச் சிலமொழிகள் கூறுகிறேன் கேள்:—

“மணம் மிகுந்த அகில், சந்தனம், குங்குமம், ஏலம் முதலியவற்றை வாரிக்கொண்டு ஓடிவரும் பொருநை வளங்கொழிக்கும் நாடு எங்கள் நாடு. கரையோரங்களிலெல்லாம் செந்நெற்பயிர்களும் கரும்புக்கழிகளும் செழித்து வளரும் நாடு எங்கள் நாடு. பச்சைப் பசேலென்று பசுமையான தோற்றத்துடன் சிறந்து விளங்கும் செந்நெற்கழனிகளிலே, வாளை மீன்கள் துள்ளி விளையாடும் நாடு எங்கள் நாடு. காலை வேளையிலே, ஆலயங்கள் தோறும் ‘பம்—பம்—பம்’ என்று சங்கு முழங்கும் திருநாடு எங்கள் நாடு. எங்கள் ‘நாட்டை அழகு செய்யும் தங்க விமானங்களைக்கொண்ட அழகிற் சிறந்த கோயில்களும், சிற்பவேலைப்பாட்டில் சிறந்தொளிரும் உயர்ந்த கோபுரங்களும் பற்பல; மங்கையர் நின்று பந்தாட—பைங்கிளிகள் இருந்து கொஞ்சிக் குலவ—கண்டோர் கண்களுக்கும் கருத்துக்கும் பெருமகிழ்வூட்டும் அழகிய மாடங்களை உடைய மாளிகைகள் பற்பல; அசையும் கருமலைகளைப் போன்ற பெருந்தேர்களும் யானைகளும் பற்பல.

சிறந்த கீர்த்தியை உடைய தேங்கொள் சோலைத் திருக்குறுங்குடியிலே, மெய்யன்பரை உய்வித்தருளத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நம்பியெம்பெருமான், அன்பிற் சிறந்த காரியாரின் அருந்தவத்திற்குத் திருவுள்ளம் பெரிதும் உகந்தருளியராய், திருவனத் தாழ்வானது திவ்யாம்சம் பெற்று திருக்குருகூரில் ஆதிநாதன் ஆலயத்தில் வளர்ந்திருந்த திருப்புளிய மாத்தினடியிலே மெய்ஞ்ஞானச் சுடர்வடிவுடைய சடகோபராக எழுந்தருளியிருந்து, தெளியாத வடமொழி மறைப்பொருள்களை எளிதில் தெளிவிக்கக்கூடிய செந்தமிழ்மறைகளைச் செய்தளித்து, சில காலத்திற்குப் பின்பு மறைந்துபோய்விட்ட ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்கள் எல்லாவற்றையும் மீண்டும் நாதமுனிகளுக்குத் தொகுத்துரைத்து அன்பர்களை உய்வித்தருளிய நம்மாழ்வாராகச் சிறந்திருந்த நாடு எங்கள் நாடு.

தனது இன்னருளைப்பெற்று உய்ய வேட்கை மிகுந்து ‘தஞ்சம்’ என்று அடைந்தவர்களுக்கு, ‘அஞ்சல்’ என்று அருள் செய்து அவர்களது சஞ்சலங்களனைத்தையும் தவிர்த்தருளும் நீலமேனி நெடியோனது ஆலயங்கள் நிறைந்த நாடு எங்கள் நாடு; பாஞ்சராத்திர சாத்திரங்களிலே பெரிதும் தேர்ந்து, அவற்றில் விதிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்குச் சிறிதும் மாறுபடாதவாறு, திருக்கோயில்களில் அருளுருவங்கொண்டு உறையும் இறைவனை பய—பக்தி—விச்வாசங்களுடன் பூசிக்கும் அர்ச்சகர்கள் நிரம்பிய நாடு எங்கள் நாடு; ஆசைகள் யாவும் துறந்து பகவத்—பக்தியில் சிறந்து ஆருயிர்கள்மேல் அன்பு மிகுந்து, உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைப் பொருள்களை எல்லோரும் கேட்டு உய்யுமாறு போருளுடன் வெளியிட்டுப் பெரிதும் மகிழும் மெய்ஞ்ஞான ஆசிரியர்கள் மலிந்த நாடு எங்கள் நாடு; சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மானிடரைப் புகழ்ந்து பாடி, அவர்களது மனம் எச்சமயத்தில் இரங்குமோ என்று எதிர்பார்த்து ஏங்கி நில்லாமல், ஒப்புயர்வற்ற தனிப்பரம்பொருளாகிய திருமாலையும் அப்பெருமானது மெய்யடியார்களையுமே வாய்மணக்க நா இனிக்கப் பாடி மகிழும் செஞ்சொற்கவிஞர்களையும் சீரிய நாவலர்களையும் பெற்றுச் சிறந்து விளங்கும் எங்கள் நாடு.

வடமொழி மறைகளையும் தமிழ்மொழி மறைகளையும் முறையாகப் பயின்று, அவற்றால் அறிவுறுத்தப்படும் உண்மைப் பொருள்களை ஐயந்திரிபறக் கற்று உணர்ந்து, சிந்தையில் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அருள் அந்தணர்கள் நல்லறம் வளர்க்கும் நாடு எங்கள் நாடு; கொடுவினை புரியும் தீயோரை தக்கபடி தண்டித்து, நல்வினை புரியும் தூயோர்க்கு நேரும் இடையூறுகளனைத்தையும் நீக்கி, எங்கணும் சமரச சன்மார்க்கமே நிலவச் செய்யும் நீதி வேந்தர்கள் நன்னெறி வளர்க்கும் நாடு எங்கள் நாடு; வஞ்சமும் பொய்யும் கொஞ்சமும் கருதாமல், நாட்டு மக்களுக்கு மகிழ்வூட்டக்கூடிய நற்பொருள்களைப் பல விடங்களிலிருந்து தருவித்துச் சேமித்து வைத்துக்கொண்டு சொற்ப லாபம் வைத்து விற்பனை செய்யும் நாகரிக வணிகர்கள், ஆரோக்கியம் வளர்க்கும் நாடு எங்கள் நாடு; நிலம் திருத்தி விதை விதைத்துப் பயிர் வளர்த்துக் கதிரறுக்கும் பழுதற்ற வேளாண்மையை மேற்கொண்டு நற்பணி செய்யும் வேளாளர்கள் வளம் பெருகும் நாடு எங்கள் நாடு.

அம்மே! எங்கள் நாட்டிலே, செழித்துத் தழைத்து வளர்ந்துள்ள பலாமரங்களில் பழுத்துத் தொங்கும் பெருத்த பழங்களிலிருந்து செந்தேன் சொட்டிக்கொண்டிருக்கும்; வெய்யில் பெரிதும் எரிக்கும் வெஞ்சுடர்க் கதிரவனது கிரணங்களின் வெப்பம் சிறிதளவும் தோன்றாவாறு அடர்ந்து வளர்ந்துள்ள மரங்கள் நிறைந்து எப்பொழுதும் குளிர்ந்திருக்கும் இயற்கை இன்பக்காட்சிகள் நிறைந்த வனங்களிலே, பலவகைப்பட்ட விலங்குகள் உலவும்; பல நிறங்கொண்ட பறவைகள் பறந்து திரியும்; சந்தன மரங்களிலிருந்து எழும் பரிமள கந்தமும் செண்பகமலர்களிலிருந்து வீசும் நறுமணமும் மெல்லிய பூங்காற்றோடு கலந்து எங்கணும் பரவும்; வெள்ளை வெளேலென்ற அழகிய மலர்களும் மொக்குகளும் கொண்டு நிற்கும் பசுமை மிகுந்த புன்னை மரங்கள், வெண்முத்துகளைத் தாங்கிய மாகத மரங்களைப்போல் விளங்கும்; செக்கச் செவேலென்ற சிவந்த மலர்களும் மொக்குகளும் பெற்று நிற்கும் மாதளை மரங்கள், இரத்தின மணிகளைத் தாங்கிய மரகத மரங்களைப் போல் விளங்கும்; நீலச் சேல்கள் பாய்ந்துவிளையாடும் நீர்வளம் மிகுந்த கழனிகளிலே, கதிர் சாய்த்துத் தலைவணங்கிக் காற்றில் அசைந்தாடும் செந்நெற்பயிர்கள் செங்கரும்போடு போட்டி போடுவனபோல் ஓங்கி வளர்ந்திருக்கும்; செங்கருப்பங்கழிகள் சிறந்த வெண்முத்துகளை உதிர்க்கும்.

“கொண்டல் தாவிய விண்தொடர் தண்டலை
கொஞ்சு பஞ்ச வனக்கிளி பேச
அண்டமூர் திறைகொண்டலை வேள்விரு(து)
ஆங்கிருந்து தேமாங்குயில் கூவ—
வண்டு விண்டலர் பூஉண்டு பாட—
மடம் புரிந்து இளமஞ்ஞைகள் ஆடக்
கண்டு, புண்டரிகத்(து), அரசு, அன்னம்
களித்து வாழ்திருநாடு எங்கள் நாடே.”

கண்களுக்கும் கருத்துக்கும் பெருமகிழ்வூட்டும் செந்தாமரைக் குளத்தின்

கரையில் வளர்ந்துள்ள நறுமணம் வீசும் மலர்களைத் தாங்கிய மரங்களின் கிளைகளில் அமர்ந்துள்ள குரங்குகள் கிளைகளைப் பிடித்து உலுக்கவும், அம்மலர்களிலிருந்து சொரியும் செந்தேன், நீரிலுள்ள செந்தாமரை மலர்களாகிய செம்பொற் கிண்ணங்களில் விழுந்து குளிர்ந்த நயும் புனலெங்கும் பரவும்.

காரியாரும் உடைய நங்கையாரும் செய்த பெருந்தவப் பயனாக பிறந்து, பிறந்தநாள் முதலே அழுதல்—சிரித்தல் — பாலருந்தல்—உரையாடல்—விளையாடல் முதலிய பிள்ளைப்பருவ இயல்புகள் ஏதுவுமின்றி உலக நடைக்கு மாறாக வளர்ந்து வந்ததனால், 'மாறன்' எனும் திருநாமத்தைப் பெற்று மகிழ்மாலை சூடிய சடகோபரின் திருவழுதி நாட்டுவளங்கள் முழுவதையும் விரித்துரைப்பது பெரிய செஞ்சொற்கவிகளுக்கே அரிதானால், பேதையாகிய என்னால் முடியுமோ?"—என்றுரைத்தாள் குறி பார்க்க வந்த குறத்தி.

(தொடரும்.)

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

ஔவையார்

(ஸ்ரீமதி. பண்டித-அசலாம்பிகை அம்மையார்.)

இப்பெயர் வாய்ந்த நமது ஓதாதுணர்ந்த மூதாட்டியார் இத்தமிழ் மக்களுக்கு ஆற்றியிருக்கும் தனித் தொண்டை எங்ஙனம் சிறப்பித்தாலும் போதியதாகுமோ? ஆயிரம் ஆயிரமான ஆண்பாற் புலவர் பெருமக்களும் வாகவிகளும் அருட் செல்வர்களும் அவ்வப்போது தோன்றித் தோன்றி காலத்திற்கு ஏற்பவையான நீதிகளை வெளியிட்டும் வரைந்து வைத்தும் மறைந்தனர். ஆயினும் பிறந்த பொழுதே கவி பாடியதாகச் சரித்திரம் கூறும் நமது மூதாட்டியார் இயற்றியருளிய பாலபோதங்களும் அவ்வினத்தாகிய நூற் பாப்புகளுக்கும் முன்னணியில் பொலிகின்றதென்பது சிறப்புரையோ? ஔவையார் உபாஸனா மூர்த்தியை இதர தேவதா உபாஸகர்கள் எவரும் முதலில் நிர்விக்கினமாக இஷ்ட சித்திபெற வணங்குவது மரபா யிருப்பதுபோல ஔவையார் அருளிய நூல்களும் பிரதம பூசைக்குரியதாக விளங்குகின்றது. பஞ்சாக்கரங்களை அஷ்டாக்கர பக்தன் புறக்கணிப்பதும் அஷ்டாக்கரங்களை பஞ்சாக்கர பக்தன் அசட்டை செய்வதும் இயல்பாக விருக்கும். இவ்வுலகில் பிரணவத்தை இகழ்பவர்களில்லை. அது போலவே பிரணவ ரூபியை இஷ்ட தேவதையாகக் கொண்டு அவதரித்த பிராட்டியார் அருளிய ஒவ்வொரு மொழிகளும், நீதிகளும் சமய வாதமென்னும் சண்டமாருதத்திற் ககப்படாத ஒப்பற்ற நிலையில் விளங்கி வருவதென்பது மிகையாகாது. பிறக்கும்போதே கவிபாடும் திறம்பெற்ற பெரியார் பிறரும் நமது தமிழகத்தில் தோன்றினர். எப்பாலாரும் ஒப்பும்படி தெய்வநூல் இயற்றியுள்ளனர் என்பது எவரும் உணர்ந்ததே. ஆனால் அவைகளும் சிறிது தயக்கமின்றிப் படிக்கவும் பிழையின்றி வரையவும் தேர்ச்சிபெற்ற பின்னரே நல்லாசான் மூலம் பயிலக் கூடியவைகளாகும். நமது ஔவையார் அருளிய நீதித் தொடர்கள் ஒன்றே தாயின் முலைப் பாலோடு காட்டி யுட்கொள்ளத் தக்க எளிய முறையில் அமைந்துளதாகும். ஆனால் இவ்வெளிய நீதித் தொடர்களில் அமைந்துள்ள கருத்துகளோ ஞானியரின் அநுபவம்போல் மாற்ற முடியாதது; மறுக்க வொண்ணாதது; எவராலும் திருத்த இடமில்லாதது. இடர்ப்பட்டு 60 வயதானவர்களும் படித்துணர முடியாமல் திக்கு முக்காடக் கவி பாடும் புலவர்களும் சிலர் உண்டு. இது பற்றியே 'பதம் பிரிக்கத் தெரிந்தவன் பாதி வித்துவான்' என்னும் பழமொழியும் நாட்டில் வழங்குகின்றது. அகராதியின் துணைகொண்டு காவிய உலகில் தலைநிமிர முயல்பவர்களின் உரைகளும், கவிகளும் அவைகளைப் படிப்போரையும் அதற்கிணையான கொடி வழியிற் கொண்டுவிடும். இயற்கையா யெழுந்த புலமையின் உள்ளங்

கவரும் இனிய நடைப்போக்கும் செயற்கையால் அரும்பிய நடைகளின் முரண்பட்ட நடையின் தன்மையும் அறிஞர்க்குத் தெற்றெனப் புலனாதல் இயல்பு. இவ்வித இன்பத்திற்கு வற்றாத ஊற்று ஔவையார் அருளிய நீதித் தொடர்களாகும். அன்றியும் இதர கவி வாணர்களிற் சிலரோ, அன்றிப் பலரோ தங்கள் புலமைக்குச் சான்றாக நவநவமான பற்பல வகைச் சிறப்பு அடைமொழிகளைச் சங்கிலித் தொடர்போலப் புனைந்து அமைத்துக்கொண்டு (பாமரர்களால் உச்சரிக்கவும் உணரவு் முடியாமல்) வெளிவரவும் காண்கின்றோம். இத்தகைய அறிஞர்களின் நிலைமைகளையும், இன்னார் தமது நூல்களுக்கமைக்கும் விநோத விசித்திரப் பெயர்களையும் காணுந்தோறும் கருதுந்தோறும் எவ்வித சிறப்புக்குரிய அடைமொழிகளுமின்றி ஔவையார் என்னுந் தனிப் பெயருடன் அன்றும் இன்றும், இனி என்றும் பொலியும் பெருமை உள்ளத்தை அள்ளுந் தன்மையது. தமிழ் அறிஞர்கள் எப்போதும் விரிவுபட வளர்த்திப் பேசி காலங் கடத்தும் இயல்புடையவர்கள் என்னும் ஒரு கருத்து வேரூன்றி யிருக்கும் நம் நாட்டில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சூத்திர கர்த்தா பெண்ணினத்திற்சேர்ந்த நமது பெருமாட்டியார் என்பதை மறுப்பவர் எவர்? எளிய மொழியில் தெளிய உரைப்பவரும், அரிய விஷயங்களையும் ஒரு வரியில் அமைப்பவரும் அவரே யன்றோ? அவரது சகோதரரென்று சரித்திரத்தால் கூறப்படும் தெய்வப் புலமை திருவள்ளுவனார் குறட் பாவில் அனைத் துலகங்களையும் அடக்கினார் என்பர். ஆனால் அவர் தமக்கையாராகிய பெருமாட்டியாரோ, அக் குறளிலும் பாதியான ஒரு சிறு வரியிலேயே உலகை யமைத்தருளினார். ஆத்திசூடியில் அமைந்த நீதித் தொடரை அரைவரி என்றும் கூறலாம். சிறந்த புலமையாளர்கட்கே விருத்த பேதங்களிற் சிறந்த வெண்பா இயற்றுவது புலி எனப் புகல்வர். அவ் வெண்பாவுக்கும் நாற்சீர் முச்சீர் நடுவே தனிச்சீர் என்ற வகையில் நான்கடி யுண்டு. இவ் வெண்பாவிற் கருத் தமைத்து சீர் தளை வழாமல் வாய்ப்பாட்டின்படி தெளிவுற முடித்துப் பாடுதல் அரிது. அதனினும் பாதியாகிய குறட் பாவினாலே உலக மனைத்தையும் அளந் தடக்கிப் பாடியது அதனிலும் அருமை. அதனிலும் அக் குறளிலும் பாதியாகிய அரைவரியில் இம்மை மறுமை இரண்டையும் தெற்றென விளக்கி வைத்தது அரிதினும் அரிதன்றோ? உதாரணமாக திருவள்ளுவர்,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்றருளினார். நமது மூதாட்டியாரோ,

"வானஞ் சுருங்கிற் றானம் சுருங்கும்"

என்றமைத் தருளினார். ஒவ்வொன்றும் இவ்வாறே சுருங்கி மிளிர்வதென்பது எவரும் உணர்ந்ததே. தவிர ஒப்பில் புலவர் பெருமானாகிய திருவள்ளுவரும், மற்றைப் பெரியாரும் கையாளாத தனி முறை யொன்றினை எம்பெருமாட்டியார் ஒருவரே கையாண்டனர் என்பது எண்ண எண்ண இன்பம் தருகின்றது. அதாவது அகரம் முதல் ஔகாரம் வரையிலும் ககர முதல் னகரம் வரையிலும் உயிர்மெய் விரிவுள்பட வரிசைக் கிரமமாக வாக்கியங்களை அமைத்து அணிபெற வைத்தருளிய கருணையே—பாலர்கள் உயிரெழுத்துக்களையும் உயிர்மெய் யெழுத்துக்களையும் வருத்த மின்றி மனப்பாடஞ் செய்வது வழக்கமாதலின் அதே நினைவினால் நீதித் தொடர்களையும் மனப்பாடஞ் செய்வதற்கு அநுகூலமாக இருக்கு மென்பது கருதி

யன்றோ அவ்வித எழுத்துக்களின் வரிசையையும் அமைத்தது. இனிய தின்பண்ட வடிவில் மருந்தைப் புகுத்தி மக்களுக்கு உண்பிக்கும் கருணைத் தாயின் அரிய அன்பன்றோ இது, பெண்மையினின்றும் முகிழ்த்த தனித் தாய்மையின் தண்மைப் பண்பென்று இதனைக் கருதாமல் வேறென்னென்று கூறுவது? பாலர்கள் இளமையிற் கல்வி பயிலுங்கால் வெளிக்கு நடிப்பாகவாவது அச்சுறுத்திப் பயிற்றுவது தந்தையரின் இயற்கை. அவ்வாறு தந்தை அன்பை யகத்தடக்கி அதட்டிக் கூறுவதைக் கேட்டாலும் தாய் மனம் தாளுவதில்லை. இந் நிலைமையைப் பாட்டிமார்களிலோ இன்னும் மனமுருகிக் கடியுந் தந்தையைக் கடிந்து தடுக்க முற்படுவர். இஃது உலகியல்பு. உலகில் அக்காலத்தும் பிற்காலத்தும் தோன்றிய இனித் தோன்றப் போகிற எல்லா பாலர்களுக்கும் அறிவினாலும் கருணையினாலும் பொதுப் பாட்டியாராக அவதரித் தருளிய நமது பெருமாட்டியார். சிறுவர்கள் நீதி பயிலுங்கால் நினைவுக்கு வராமல் இரக்கமற்ற ஆசிரியர் கோபத்திற்கும் தண்டனைகளுக்கும் உள்ளாகாமல் தப்பித்துக் கொள்ளுவதற்குத் தக்க உபாயமாகவே அரிச்சுவடி வரிசையில் அமைத்தனர் போலும்.

தவிர, அனைவரும் அவ்வவர் இயற்றிய நூல்களுக்கு அவ்வவற்றின் உள்ளுறைக்கு ஏற்பவே பெயர் அமைப்பர். அவ்வகையிலும் நமது ஔவையார் தனி வழி கோலினார். வெம்மையைத் தணித்து குளிர்ச்சியை நல்கும் இயல்பு வாய்ந்த அகத்தியை நினைவூட்டி யுள்ளார். ஔவையார் அருளிய ஆத்திசூடியாகிய பாலபோதத்தை ஆரம்ப பாலபோதமாகப் பயின்று அது கற்பிக்கும் வழி நிற்போர் எவரும் தீச்செயல்களென்னும் வெம்மையில் வீழ்ந்து அலக்கண் உறார் என்பதும் குறிப்பாற் கொள்ளத் தகும். எப்போது தீமை புரிவதில் விலகுகின்றார்களோ அப்போதே பாவத்தின் பயனை யூட்டும் நிரயம் என்னும் நரக வெம்மையும் நீங்கினவராகின்றனர்.

இனி கொன்றை வேந்தன் பெயரைச் சிந்திப்போமாயின் அதுவும் பிரணவ வடிவத்தை நினைவூட்டுங் குறிப்பாகின்றது. அன்றி ஓ என்னும் ஓரெழுத்தே பிரணவ ஒலியுமாய் வரி வடிவமுமாதல் உணர்ந்ததே கொன்றைத் தழையும் மக்கள் உடல் வெம்மை உள்ளக் கொதிப்பு முதலியவற்றால் தோன்றும் பல்வகை நோய்களைத் தவிர்க்க வல்லதென்பர் ஆயுள்வேதக் கலைஞர்.

ஆனால் இவ்விரண்டும் விநாயகருக்கும் சிவபெருமானுக்கும் பொதுப் பெயராக நிலவும் பெருமை யுடையது. இக் காப்பு ஒன்றினாலேயே அவர் உள்ளத்தின் தண்மையும் செம்மையும் விளக்க முறுகின்றது. அகத்தியை ஆத்தி என்று கூறி யிருப்பதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. முதலாவது சிவ, என்றால் சிவத்தையும் சிவா என்றால் சிவம் சக்தி யிருவரையும் குறிக்கும் என இருக்கு வேதத்தில் விளக்கப்பட் டிருக்கிறது. உலக நீதிகளை எளிய முறையில் சுருங்கிய வகையில் உதவ முன்வந்த நமது தலைவியார் சக்தியோடு கூடிய ஆகாரத்தை முதலில் அமைத்தது பொருத்தம். அதுவுமன்றி அகத்தி என்பது அகராதி படித்தவர்களுக்கே விளங்கும். உலக வழக்கிலும் சாமானியர்களால் உபயோகிக்கத் தக்கதன்று. ஆத்தி யென்பது வெளிப்படையான பதம். வழக்காற்றில் பாலர் சிறுமிகளும் இயல்பா யுணர்வது. அன்றியும் நீதித் தொடர்களைக் கற்க ஆரம்பிக்கும் இளைஞர்கள் முதலில் விநாயகரைத் துதித்தே பிறகு பயில வேண்டியதற்கும், ஏற்றபடி ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்று பெயர் புனைந்துள்ளார். நூலில் அடங்கியுள்ள நீதிகளைச்

சுட்டாமல் சொல்லும் பொருளுமாகிய சிவத்தின் திருநாமத்தையே சுட்டித் தொடங்கியுள்ளார். அன்றியும் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற சான்றோர் இயல்புப்படி இளமையிலிருந்தே கணபதி யுபாசனையும் பக்தியும், பயிலும் பாலர் உள்ளத்திலே ஆழப் பதியவேண்டி,

"ஓரானைக் கன்றை உமையாள் திருமகனை
பேரான கற்பகத்தைப் பேணினால்—வாராத
புத்திவரும் பக்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் சித்தி வருந்தான்"

என்ற வெண்பாவினாலும்,

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

என்ற வெண்பாவினாலும் வலியுறுத்தி யுள்ளார். தவிர சிலேடைக் கருத்துக்களை இவ்வளவு இலகுவாக அமைத்தல் எவர்க்கும் அரியது.

பின் கண்ட வெண்பாவில் பாலர் உட்கொள்ளும் விநாயக வழிபாட்டையும், அதனாலெய்தும் பயன்களையும் விளக்கி யிருக்கின்றார். ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்தோர்க்கு விளங்கும் குறிப்பாக உடல், மனம், செம்மை, வன்மை இவற்றைத் தரும் குணமுள்ள மூலிகைளாகிய திருமேனியானை நெருஞ்சில் கையாந்தகரை முதலிய ஔஷதிகளை தினமும் உட்கொள்ளும் படியும் பிறிதுமொரு பொருள்படக் குறிப்பால் வயித்தியராகவு மிருந்து அறிவுறுத்தி யிருக்கின்றார்.

என் சிற்றறிவு கொண்டு முற்றறிவின் முதிர் கனியாகிய மூதாட்டியாரின் ஒப்பற்ற தொண்டின் பெருமையை எவ்வாறு புகல முடியும்? நிற்க மூதாட்டியார் என்பது முதிர்ந்த பருவ முடையவர் என்பதையே பொதுவாக உணர்த்தும். ஆனால் ஔவையார் திறத்தில் அவ்வாறு கொள்வதற்கில்லை. பிறந்த சிசுப் பருவத்திலேயே ஓதாது அனைத்து முணர்ந்த பழுத்த அறிவும் அவாவறுத்த உள்ளமும் உடையரா யிலங்கியது பற்றியே ஔவையார் என்னும் பெயர் அமையப் பெற்றனர் என்று தெரிகிறது. திருவள்ளுவர் இல்லறமென்பது இத்துணைச் சிறந்ததென்பதற்காக மனைவியை மணந்து நடத்திக் காட்டினார். நமது பெருமாட்டியாரோ, "இல்லறம் அல்லது நல்லறமன்று" என்று அதனை முழுமனதுடன் ஆதரித்தாராயினும் தான் உலகுயிர்களை நல் வழியில் இயக்கும் சுக்கானாகவே தனித்திருந்து வாழ்ந்ததாக வுணர்கின்றோம். ஏனைய சிறப்புகளிலும் இச் சிறப்பு தலை சிறந்ததொன்றாம். உலகிற்கு உதவி புரியவே தாய்மை யன்புடன் ஔவையாரைத் தோற்றுவித் தருளிய இயற்கைத் தெய்வத்திற்கு மாசற்ற பேரறிவின் மணி முடியாகிய பெருமாட்டியாருக்கு மேம்பட்ட உரிமையில் ஒருவரை அமைக்கத் திருவுளம் இல்லை யென்பது நன்கு விளங்குகின்றது. பெண்மை யியல்பு துறவுக்கும் பெரிதும் சால்புடையதென்பதும் ஔவைப் பெருமாட்டியாரின் கிடைத்துள்ள வரலாற்றினால் ஒருவாறு துணியலாகும். இனி ஆத்தி சூடியில் உள்ள நீதித் தொடர்களில் சிறிது ஆராய்ந் துணர்ந்து இன்புறுவோமாக.

'மணிமேகலை' நூலின் அமைப்பும் சரித்திரக் குறிப்பும்

R. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம்.
(Right Reserved.)
(தொகுதி 19. பகுதி 12. 921-ம் பக்கத் தொடர்ச்சி.)

III. மணிமேகலையும் காப்பிய விதியும்

மணிமேகலை யென்னும் இந்நூல் தமிழ்மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றென்பது கூறப்பட்டது. 'காப்பியம்' எனப்படும் நூலினங்களுக்குப் பலவிதிகள் உண்டு. அவ்விதிகளின் வரம்பு கடவாது ஒட்டியுள்ள நூற்களைக் கற்றோர் 'காப்பியநூ லெ'ன்பர். 'மகா காவிய' மென்று வடமொழியிலும், 'பெருங்காப்பிய' மென்று தென்மொழியின் கண்ணும் வகுத்துக் கூறப்பட்டுள்ள இத்திறப்பட்ட காப்பிய நூற்கள், காப்பிய நூற்களுக்குரித்தாக வேண்டிய சில விதிகளுக் குட்பட்டதாகவே இருத்தல் வேண்டும். அவ்விதிகளைக்கொண்டு இந்நூலையும் ஆராய்ந்து, இது காப்பி நூலாகுமா, அல்லவா என்பதை அறிந்திடலாம். 'காப்பியத்தைத்' தொடர்நிலைச் செய்யுளெனவும் ஆன்றோர் கூறுவர். அது சொல் தொடர்நிலை, பொருள் தொடர் நிலை என இரு வகுப்பினது. பொருள் தொடர்நிலைச் செய்யுளே பெருங்காப்பியமென்றும் சிறுகாப்பியமென்றும் இரு பகுப்பினவாக இலங்குவது.

காப்பிய விதிகள்.

பெருங்காப்பியமென்பது, வாழ்த்தல் கடவுள் வணக்கம், தலைமைப் பொருளுரைத்தல் என்ற மூன்று வகையினதாகிய மங்களங்களுள் ஒன்றினை முதற்படக் கொண்டுள்ளதா யிருத்தல்வேண்டும். அறம் பொருளின்பம் வீடாகிய நான்கு பொருளையுந் தருந் தனிமைய தாதல்வேண்டும். ஒழுக்கத்தாலும் நோக்கத்தாலும் சிறந்து விளங்குமொரு தலைவனையே அன்றி ஒரு தலைவியையோ கதை முதல்வராகக் கொண்டிடல்வேண்டும். மற்றுமோ, காடு, மலை, கடல் முதலிய பல திறப்பட்ட இயற்கை வருணனைகளைக்கொண்டு செவியின்பம் பயத்திடல் வேண்டும். பலதிறப் பாட்டாலாயினும், ஒருதிறப் பாட்டாலாயினும் கற்றோராலியற்றப்பட்டு சுவைத்திடல் வேண்டும். இவையனைத்தும் அப்பாவினத்தின் குண விசேடணங்களாகுமென கற்றறிந்தோர் கூறுவர். எனவே இது ஒரு கதையின் மேலதென்பது விளங்கும். இம்மட்டோடன்று. மற்றும் பலவும் உண்டு. காப்பிய நூல் தலைமகன் அல்லது தலைமகளின் பிறவியினின்றும் இறுதிக்கால மீறாக உள்ள இடைக்காலத்தில் நிகழும் செய்திகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கூறி, முடிவு பெறாத நூலாயிராது, கூறும் எவ்விஷயங்களையும் முடியக் கூறுவதாய் இருத்தல் மிகவும் அவசியமென்பர். மேற்கூறியவாறன்றி, வருணனைகள் பல பெறாமலும், புருஷார்த்தங்கள் நான்கினையும் பெறாது குறைவுபடப் பெற்றும் வருவன—சிறு காப்பிய வகுப்பினுட்படுத்திக் கூறுவர் தமிழ்ப்பெரியார்.

இன்னோரன்ன விதிகளை ஒட்டியோ அன்றி வெட்டியோ, 'மணிமேகலை' உள்ள தென்பதை நோக்குமிடத்து, இந்நூல் மேற்குறித்துள்ள விதிகளைச்

சிற்சில விடங்களில் தழுவாது உள்ளதென்றே கூறவேண்டி யுள்ளது. ஆயின் ஆழ்ந்து நோக்கி, இம்மாபெரும் நூலின் மாண்பினைக் காண்போருக்கு, ஒல்காப் புகழ்பெற்ற இந்நூல், காப்பிய இலக்கண விதிகட்குட்பட்டு, அம்முறையின நூலின் இலக்கணங்களை வாய்க்கப் பெற்றுள்ளதெனக் கூறவும் இடமுள்ளது. முதலாக காப்பிய இலக்கணைக்கு இயைய, மணிமேகலை இம்மண்ணகத்தே பிறந்தது முதலாக, அவளது செய்திகளை விரிவாகக் கூறவேண்டியிருப்பினும் ஆசிரியர் சாத்தனார் அங்ஙனம் செய்யாராகி, இந்நூலகத்து, இந்திரவிழா வரைகாதையில், இளம் பெண்ணாகிய அவள் கோவலனது மகளென்பதையும்; தந்தையின் பிரிவுக்கு ஆற்றாது தாளாத துயரத்திற்காளாகி

[3]மணிமேகலை யென்னும் காப்பியம்.

வாடிய முகமும் புழுங்கிய நெஞ்சமும் கொண்டிருந்தன ளென்பதும்; வருத்த மிகுதியால் வடிந்த கண்ணீரில் நீரோடி நின்ற அவளது காத்திருந்த நறுமலர் மாலை தூய்மை நீங்கப் பெற்றதென்பதும்; பின்னர் தனது தாயாகிய மாதவியின் சொற்படி மலர் கொய்ய வனம் புகுந்தனளென்பதுமாகிய தொடர்பியான செய்திகள் பலவற்றையும் முறைப்படி ஒன்றன் பின் ஒன்றாகக் கூறியுள்ளனர். பிறவியிலிருந்து நிகழ்ந்தன கூறப்படாது போகினும் மணிமேகலையின் அதிபாலிய காலம் தொட்டுமுள்ள கதையினைக் கூறினாராகலின் இது எவ்வாற்றானும் இழுக்குடைத்தாகாதெனத் துணிந்து கொள்ளலாம். இரண்டாவதாக, இறப்பு வரையில் நிகழ்ந்தன கூறல் காப்பிய இலக்கணமாம், சாத்தனார் அங்ஙனஞ் செய்யாது, முடிவாக உலக அனுபவத்தாலும், அறிவின் பெருக்காலும், பவத்திற மறுக, புத்தமதத்தைத் தழுவிய பாவை, பிக்ஷுணிக் கோலங் கொண்டு, அழியாத இன்பநிலையை அடைதற்கு நோற்ற கதையோடும் முடித்திட்டது வழுவெனக் கொள்ளுவோரும், மறுமுறை நோக்கி அதனை வழுவன்றென்றே தெளிந்து தேர்ந்திடுவர்.

பாவை சூழ்ந்த இப்பாரினில் மக்களுறும் வாழ்க்கை யெல்லாம் இம்மண்ணை வெறுத்தலோடு முடிந்திடுமாகலின் மணிமேகலையின் ஜீவிய சரித்திரமும், அஞ்ஞானமாகிய இருளைப் போக்கி மெய்ஞ்ஞானமாகிய ஒளியைப் பெற்றிட அவள், நிலைத்து ஓரிடத்து நிம்மதியோ டிருந்ததோடு முடிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக, உலகவாழ்வு, பற்றுக்களைத்

உலக இறப்பு.

துறந்து, சிற்றின்பங் கடிந்து, பேரின்ப மார்க்கத்தை எய்துதற்கு வழி காட்டியாகவுள்ள உண்மைத் துறவிக் கோலங் கொண்டதோடு முடிவு பெறுமென்பது ஆழ்ந்தறிந்து நோக்கற்பாலது. சுருக்கமாகக் காட்டியுள்ள இக்காரணங்கள் கொண்டு காணுமிடத்து 'மணிமேகலை' யென்னும் புகழ் சாலிந்நூல், கதாநாயகியின் பிறவியினின்றும் துறவியான வரையிலுமுள்ள நிகழ்ச்சிகளைப் புகழ்ச்சியாக நவிலுதலின் இஃது காப்பியமென்பது தெளியப்படும். அதுபற்றியே ஆன்றோர் பலரும் இதனை ஐம்பெருங் காப்பியத்தி லொன்றாக்கி ஆதிகாலந்தொட்டே அழைத்தும் வருகின்றனர்.

இக்காப்பியம் 'மணிமேகலை' என்ற நற்பெயர் பூண்டு அந்நாளினின்றும் வழங்கப்பட்டு வரினும், அப்பெயரே ஆசிரியர் இந்நூலுக்கு இட்ட பெயரென்பதை முடிவுபடக் கூறுதற் கிடமில்லாது உள்ளது. இந்நூலின் பதிகத்தில் 'மணிமேகலை துற'வென்னும் பெயரொடும் இது பாடப்பட்டதென்று

கூறப்பட்டிருப்பதால் இது 'மணிமேகலை துறவு' என்றே அழைக்கப்பட்டதென்பது தெரிய வருகின்றது. சிவஞான சித்தியார், பரபக்கத்திற் சௌத்திராந்திகன் மதத்துள்ள "ஓங்கிய வுருவம்" என்னும் திருவிருத்தத் துறையிலும்; நீலகேசி; புத்தவாதச் சருக்கத்துள்ள "குயலா குயலம்" என்னும் செய்யுளுரையிலும்; இந்நூலை "மணிமேகலை துறவு"

இந்நூலின் இயற்பெயர்

எனவே குறித்து எழுதி இருத்தலால், இது மேற்கூறிய உரை யெழுதப்பட்ட காலத்திலும் அப்பெயரோடு வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதும் புலப்படுகின்றது. தன்னகத்துள்ள விஷயங்களுக் கேற்ப "மணிமேகலை துறவு" என்பதே இந்நூலுக்கு ஏற்ற பெயராகப் பொருந்துமாயினும், பரம்பரையாக இது 'மணிமேகலை' என்று அழைக்கப்பட்டு வருவதாலும்; தாம் கண்ட சில ஏட்டுப் பிரதிகளில் 'மணிமேகலை' என்றே இருப்பதாலும்; உலக வழக்கு செய்யுள் வழக்கு என்ற இருவகை வழக்கையும் கருதி 'மணிமேகலை' யென்ற பெயரே இந்நூலுக்கு எடுத்தாளப்பட்டதெனத் தமது பதிப்பில், தமிழ் தழைத்தோங்க அரும்பாடு பட்டுவரும் மகாமகோபாத்தியாய சுவாமிநாத அய்யரவர்கள் கூறுவது காணத்தக்கது. மற்றும் சிலப்பதிகாரத்தின் இறுதியிலும் 'மணிமேகலை' என்ற நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் 'சிலப்பதிகாரத்திற் குறித்துள்ள கதையின் தொடர்பை முடிவுறச் செய்கின்றதென இருநூற்களின் ஒற்றுமை தோன்றவும், இந்நூல் 'மணிமேகலை' என அழைக்கப்பட்டு வந்த விவரம் விளங்கவும் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றால் சிலப்பதிகாரத்தின் கதைத் தொடர்பே 'மணிமேகலை' யென்பது பெறப்படும். இவ்விரு காப்பியங்களும், சோழன் கரிகாற் பெருவளத்தானது காலத்தில், காவிரி கடலொடு கலக்கும் துறையிலுள்ளதும் சோழவளநாட்டின் தலைநகராக விளங்கியதும், கவிகள் புகழ்ந்து சிறப்பித்துக் கூறுவதுமாகிய காவிரிப்பூம் பட்டினத்தில், வசித்து வந்த மூவகை வணிகருள் பெருங்குடியரின் குலத்துதித்த

கோவலன் குடும்பம்.

வணிகர் மாசாத்துவானின் மகன் கோவலனின் குடும்பத்தைப்பற்றிய விஷயங்களையே கூறுவதாக உள்ளன. ஒன்றனுள் தாய் தந்தையரின் சரித்திரமும், மற்றொன்றில் அவர்களின் மகள் உலகைத் துறந்து உவகையோடு உயர்தரக் கருத்துக்களை உசிதமானதெனத் தெளிந்து கைக்கொண்ட வரலாறும் விளங்கக் கூறப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்களும் ஒருமனப்பட்ட நண்பர்களாகவும், உத்தமக் கவிகளாகவும், ஒரு காலத்தவர்களாகவும் இருந்ததே இதற்குக் காரணம் போலும். உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் இங்ஙனமாக இருத்தல் வேண்டுமென்றே கூறுதல் நோக்குக.

(தொடரும்.)

வில்லிபாரதச் செய்யுளாராய்ச்சி

(பண்டித. ரா. திம்மப்பய்யர்.)

(தொகுதி 19. பகுதி 12. 894-ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்ற கட்டுரையில் 'அங்கியா லங்கியை வெதுப்பி' என்று தொடங்கும் பாரதப் பாசுரத்திற்கு விரிவுரை வரைந்து, அதற்கு மேற்கோளாகச் 'சகமார்க்கம்........பெறுவர்' என்ற சிவஞான சித்தியாரிலுள்ள செய்யுளை யெழுதி மாதவச் சிவஞான யோகிகளது கருத்துக்கடங்கிய பொழிப்புரையையுங் காட்டினேம்.

இனி அப்பாசுரத்ின்கட் போந்த சில அரிய விடயங்களை விளக்கி வரைவாம். இச்செய்யுளின் முதலடியி லுள்ள வாயுவை யடக்குதலின் விவரம். வாயுவானது எப்பொழுதும் வெளியே வருதலும் உள்ளே போதலுமாக இயங்கிக்கொண் டிருக்கும். வெளிப்போதல் இரேசகம். உள்ளே போதல் பூரகம். வெளிவருதலை மேல்நோக்கிச் செல்லும் வாயு வென்பர். நிசுவாச மென்பது இதன் வடமொழிப் பெயர். உள்ளே செல்லுதலைக் கீழ்நோக்கிச் செல்லும் வாயுவெனக் கூறுப. வடமொழியாள ரிதனை உசுவாசம் என்பர். இவ் வாயுவை யிங்ஙனஞ் செல்ல வொட்டாது தடுத்தடக்குத லாகிய கும்பகமாவது சுழுமுனை நாடியின் வழியாகப் புருவ நடுவில் மனத்துடனுக நிறுத்திப் பழகுதலாம்.

ஆறாதாரங்களாவன:—மூலாதாரம், சுவாதிட்டானம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்பனவாம். மூலாதாரம் குதத்துக்கு இரண்டங்குலத்திற்கு மேல் இலிங்கத்திற்கு இரண் டங்குலத்திற்குக் கீழுள்ள இடம். இவ்விடத்தில் முக்கோண வடிவ மிருக்கும். அவ்வடிவத்தில் நான்கிதழ்களை யுடைய செந்தாமரையும், வஸஶஷஸ என நான்கு அக்கரங்களு மிருப்பனவாம். விநாயகர், இதில் விளங்குந் தேவதை யாவர். சுவாதிட்டானத்திற்கு இருக்கை இலிங்கமூலம். வடிவு அறுகோணம். ஆங்குப் பேரொளியினை யுடைய ஆறிதழ்ப் பதும மிருக்கும். அதன்கண், ம்பபமயரல என்னும் ஆறெழுத்துக்க ளிருக்கும். இதில் விளங்குந் தேவதை பிரம தேவர். மணிபூரகத்திற் கிருப்பிடம் நாபி. வடிவு மூன்று வட்டம். இரத்தினப் பிரபை போன்ற பத்திதழ்களை யுடைய அரவிந்த மாண்டுளது. அதில் ண்ட ட ண த த்த த ந்த ந ப ப்ப எனப் பத்து அக்கரங்க ளிருக்கும். இவ்வாதாரத்தி லிலங்குந் தேவதை விட்டுணு. அநாகதத்திற்குத் தானம் இருதய கமலம். வடிவு முக்கோணம். இதில் பொன் போன்ற நிறத்தினையுடைய பன்னிரண் டிதழ்க் கமல முள்ளது. அதில் க, க்க க ங்க ச ச்ச ஜ ஜ்ஜ ஞ ஞ ட ட்ட எனப் பன்னிரண்டு அக்கரங்க ளிருக்கும். இவ்வாதாரத்தில் ருத்திர தேவதை விளங்குவார். கண்டம் விசுத்திக் கிருக்கையாம். வடிவு அறுகோணம். வெண்ணிற முள்ள பதினறிதழ்த் தாமரை

யிதழை யுளதாகும். இதில், அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு லூ எ ஐ ஓ ஔ அம் அ: எனப் பதினறு எழுத்துக்க ளிருக்கும். இதில் விளங்குந் தேவதை மகேசுவரர். ஆக்கினைக் கயனம் புருவநடு. இதில் இரண் டிதழ்களையுடைய செங்கமல முளது. இவண், ள, க்ஷ என இரண்டக்கரங்களுள. இதில் விளங்கும் அதிதேவதை சதாசிவர். இவ் வாறாதாரங்களையும் ஆதனமாகக் கொண்டு அவற்றுக்கு மேலாகிய பிரம ரந்திரத்தில் ஆயிர மிதழ்களை யுடைய தாமரை மலர் மேல் பரமசிவன் எழுந்தருளி யிருப்பர்.

அசபையாவது—நாதவடிவா யிருக்கின்ற குண்டலினி சத்தி சொரூபம்.

அட்டாங்க யோகம், இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகை நிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என எண்வகைத்தாம்.

இயமமாவது: கொல்லாமை, வாய்மை வழங்கல், கள்ளாமை, பிறர் பொருள் விழையாமை, பொறிகளைப் புறம்பே சோவிடா நடக்கல் முதலியனவாம்.

நியமமாவது, தவம், சுத்த முடைமை, தத்துவ நூலாராய்தல், பெற்றது கொண்டு மகிழ்தல், தெய்வம் பேணலாதியனவாம்.

வளிநிலையாவது—பிராணவாயுவையடக்கல். அது மந்திர ஜபத்துடனடக்குதலும், மந்திரஜபமின்றி யடக்குதலுமென இருவகைத்து.

தொகை நிலையாவது—மனத்தைப் புறத்தே சோவொட்டா தடக்குதலாம்.

பொறை நிலையாவது—மனத்தை யகத்தே ஓர் தானத்தில் நிறுவச் செய்தல்.

நினைதலாவது—மூர்த்தியின் சொரூபத்தை மனத்தாற் பாவித்துச் சிந்தனை புரிதலாம்.

சமாதியாவது—மூர்த்தியாகிய தோற்றமும், சிந்தித்தலாகிய தொழிலும், சிந்திக்கின்றதானும் ஆகிய வேற்றுமையின்றி மூர்த்தியுந்தானு மிரண்டறக் கலந்து நிற்றலாம்.

இவ்வட்டாங்க யோகத்தின் தன்மை, பண்டைத் தமிழிலக்கணமாகிய ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருத்தலால் தமிழ் மக்களின்புறற்பொருட்டு அச்சூத்திரத்தையும், அவ்விடயமாக உரையாசிரியர் குறித்திருக்கும் நன்னிய உரையையுங் குறிப்பிடுவோம்.

'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபினரசர் பக்கமும்
இருமூன்று மரபினேனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியி னாற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்

187520
சென்னை-600 ...

மனநிலை வகையொ டாங்கெழு வகையிற்
றொகைநிலை பெற்றதென்மனார் புலவர்.'
(தொல் புறத்திணையியல்—சூ—20)

என்பது சூத்திரம்

இனி, ஈங்கெடுத்துக்கொண்ட விடயத்திற்குப் பொருத்தமானது 'நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்' என்னுந் தொடராம். இதற்கு, உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியர் குறித்த உரையைக் காண்போம். அவ்வுரையாவது,

நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்—அவ்வறிவர் கூறிய ஆகமத்தின் வழி நின்று வீடுபெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்துத் தவம் புரியுங் கூறும்.

வழக்கென்றதனான், அந்நாலிரண்டுந் தவம் புரிவார்க்குரியனவும், தவஞ்செய்து யோகஞ் செய்வார்க்குரியனவுமென இருவகைய வென்று கொள்க.

அவற்றுள், தவஞ்செய்வார்க்குரியன, ஊண் நசையின்மை, நீர்நசையின்மை, வெப்பம்பொறுத்தல், இடம்வரையறுத்தல், ஆசனம்வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என எட்டும், இவற்றிற்கு உணவினும் நீரினுஞ் சென்ற மனத்தைத் தடுத்தலும், ஐந்தீநாப்பணும்—நீர்நிலையினும் நிற்றலும், கடலும், காடும் மலையும் முதலியவற்றில் நிற்றலும், தாமரையும், ஆம்பலும், யாமையும் முதலிய ஆசனத்திருத்தலும், உண்டற்காலை உரையாடாமையும், துறந்தகாற்றொட்டும் வாய்வாளாமையும் பொருளென்றுணர்க.

இனி, யோகஞ் செய்வார்க் குரியன, இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என எட்டும் இவற்றை,

'பொய்கொலை களவே காமம் பொருணசை
யிவ்வகை யைந்து மடக்கிய தியமம்'
'பெற்றதற் குவத்தல் பிழம்புநனி யுணர்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு
நயனுடை மாபி னியம மைந்தே'
'நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென்
றொத்த நான்கி னொல்கா நிலைமையோ
டின்பம் பயக்குஞ் சமய முதலிய
வந்தமில் சிறப்பி னாசன மாகும்'
'உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்
தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை'
'பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாம
லொருவழிப் படுப்பது தொகை நிலைப் புறனே'

'மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையே'
'நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த னினைவே'
'ஆங்ஙனங் குறித்த வாய்முதற் பொருளொடு
தான்பிற னாகாத் தகையது சமாதி'

என்னும் உரைச் சூத்திரங்களா லுணர்க' என்பதேயாம்.

நம் பழந்தமிழ் மக்கள் அட்டாங்கயோகம் வல்ல சீரிய ஞானிகளாய்த் திகழ்ந்திருந்தனர் என்றற்கு, மேலே காட்டிய சூத்திரமும் உரையுமே போதிய சான்றாம்.

இவ்வெட்டும், தோழ நெறியென்ற யோகத்துள் அடங்கும். எவ்வாறெனின், கூறுதும்:

வாயுவையடக்கல் பிராணாயாமம், புலனொடுக்குதலாகிய மனவடக்கம் பிரத்தியாகாரம், சுழுமுனை மார்க்கத்திற் செலுத்துதல் தாரணை, ஆதாரங்களையும் அதி தெய்வங்களையும் அறிதல் தியானம், பிரமரந்திரத்தில் பூரணப் பிரகாசத்தைத் தியானித்தல் சமாதியாம். இயமம், நியமம், ஆதனம் ஆகிய மூன்றும் உடையார்க்கே இவ்வநுசந்தானங் கூடுமாதலால் அவற்றைக் கூறாராயினர்.

இச் செய்யுள் தோழநெறியாகிய யோகத்தி னிலக்கணத்தையும் அதன் பயனையும் நன்கு விளக்கிற்றென்க.

ஹிருதயம் நின்றுபோயும் பிழைத்திருக்கிறார்.

சுமார் எட்டு வருஷங்களுக்கு முன்பு டாக்டர் எச். டப்ளியூ. டி. க்ரூக் என்பவருடைய ஹிருதயம் துடிப்பது நின்றுவிட்டது. அதற்குப் பிறகும் அது துடித்ததில்லை. ஆகிலும், அவர் பிழைத்திருக்கிறார். சுறுசுறுப்பாய் வேலை செய்கிறார். அவர் வாரத்திற்கு ஆறு நாட்கள் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார். தன் காரையும் ஓட்டுகிறார். அதைப்பற்றி கவலைப்படுவதை விட்டு, தனது தொழிலில் மிக்க அக்கறை எடுத்துக்கொண்டு பாடுபடுகிறார். வைத்திய நிபுணர்களுக்கு இது அதிசயத்தைக் கொடுக்கிறது.

டாக்டர் க்ரூக் என்பவர், கைஸ் ஆஸ்பத்திரியில் படித்துக் கொண்டிருக்கும்போது அவருக்கு வாதஜுரம் அடிக்கடி வந்து கொண்டிருந்தது. அதனால் அவர் இருதயத்தின் வால்வுகள் அகன்று போயின. இந்த வால்வுகள் ஒழுங்காய் திறந்து மூடினால்தான் இரத்த ஓட்டம் உண்டாகும். இந்த வால்வுகள் பம்பு செய்யும்போது ஹிருதயத் துடிப்பு உண்டாகிறது. அவை அகன்றதும், இரத்தமானது ஒரே சமமாகப் பாய்கிறது. இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்த ஒன்றும் கிடையாது. —(ஆ. தீ.)

பிரம சூத்திரம்.

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

(19-ம் தொகுதி 11-ம் பகுதி 828-ம் பக்கத் தொடர்ச்சி.)

5. ஈக்ஷத்யதிகரணம்.

சூ. 5. அவதாரிகை:—பிரம்மத்திற்கு சாஸ்திர பிரமாணத் தன்மை (வேதாந்த சாஸ்திரத்தால் அறியப் படுதல்) இல்லை யென்றும், வேதமானது கர்மத்தையும் உபாசனையையும் விதி விலக்குகளால் காட்டுவதே யென்றும், ஆகவே வேதாந்தமும் கர்மோபாசனைகளைச் சிறப்பிக்க வந்ததே யன்றி பிரம்ம சொரூபத்தை மாத்திரம் காட்ட வந்த தல்லவென்றும் கூறும் பட்டர் பிரபாகரர் போதாயன விருத்திகாரராது ஆக்ஷேபங்களைக் கண்டித்து, வேதாந்த சாஸ்திர வாக்கியங்கள் பிரம்மாத்ம ஞானத்தையே பிரயோஜனமாக உடையனவென்றும், உபாசனை முதலிய கர்மங்களின் சம்பந்த மில்லாமல் கேவல பிரம்மத்தினிடத்தே சம்பந்தமுடையனவென்றும், அந்தப் பிரஹ்மம் சர்வஞ்ஞத்துவமும் சர்வ சக்தித்துவமும் உடையதாய் ஜகத்தின் உற்பத்தி ஸ்திதி லயங்களுக்குக் காரணமாய் இருக்கின்றதென்று, மேலும் அது (பிரஹ்மம்) வேதத்தால் அறியப் படத்தக்கதாய் ஸ்வத சித்த வஸ்து (தானாகவே எனறும் விளங்கும் பொருளாக) வாய் இருக்கின்றதென்றும் இதுகாறும் காட்டப்பட்டன. இனி, பூர்வ பக்ஷிகள் கூறும் மற்றும் பல ஆக்ஷேபங்களும் அவ் வாக்ஷேபங்களுக் குரிய சமாதானங்களும் காட்டப்படுகின்றன.

“ஸ்வத சித்த வஸ்து ஆகமப் பிரமாணத்தால் மாத்திரமன்று அனுமானப் பிரமாணத்தாலும் அறியப் படலாம். ஜகத்திற்குக் காரணமாகவுள்ள சித்த வஸ்து எது? என்று அனுமானிக்கு மிடத்து பிரகிருதியே ஜகத்காரண வஸ்து என்று நிச்சயிக்கப் படுகின்றது. ஜகத்திற்கும் பிரகிருதிக்கும் அநிருத சடத்துவாதிகளால் சாதர்மம் (ஒற்றுமை) இருக்கின்றது. ஆகலின், பிரகிருதியே ஜகத் காரண வஸ்துவன்றி, முன்பு கூறப்பட்ட லக்ஷணங்களை யுடைய பிரம்மம் ஆகமாட்டாது. வேதாந்த வாக்கியங்களும் இக் கருத்தையே தெரிவிக்கின்றன” என்று இவ்வாறு சிலர் ஆக்ஷேபிக்கின்றனர்.

இவ்வாறு ஆக்ஷேபிப்போர் முக்கியமாக சாங்கியராவர். சாங்கிய மதம் இரண்டு வகைப்படும். ஒன்று நிரீசுவர சாங்கிய மதம். இதற்குக் கர்த்தா

கபிலன். மற்றொன்று சேசுவர (கடவுள் உண்டு என்று ஒப்பும்) சாங்கிய மதம். இதற்குக் கர்த்தா இரணியகர்ப்பன்.

நிரீசுவர சாங்கிய மதம்:—“ஈசுவரன் இல்லை. அசேதனமாயும் சுதந்தரமானதாயும் சத்துவராஜஸ்தமோ குணவடிவமாயும் உள்ள மூலப் பிரகிருதியினின்றும் உலகம் தோன்றிற்று. புருஷர்கள் அசங்கராயும் (மலமற்றவராயும் யாதொரு பற்றும் இல்லாதவராயும்) பலராயும் இருக்கின்றனர். அன்றியும் அப் புருஷர்கள் மூலப்பிரகிருதியினும் பின்னமா (வேறா)க இருப்பவர்கள். அவர்களின் போகத்தி னிமித்தம் பிருகிருதியானது அப்பிரயத்தினமாகவே உலக வடிவமாகப் பரிணமித்திருக்கின்றது. புருஷன் அநாதியாகவே புத்தியைச் சார்ந்துள்ள அவித்தையின் வசப்பட்டவனாய் பெத்தன் எனப் படுகின்றான். மூலப் பிரகிருதியையும் புருஷனையும் பகுத்துணர்வதால் அவித்தை நீங்கும். அதுவே முத்தி எனப்படும். ஆகவே, புருடர்களுக்கு (ஆன்மாக்களுக்கு) வேறாக ஈசுவரன் ஒருவன் உண்டு என்பது பொய்” என்னும் கொள்கை யுடையது.

சேசுவர சாங்கிய மதம்:—“புருடர்களுக்கு (ஆண்மக்களுக்கு) வேறாக ஈசுவரன் ஒருவன் இருக்கிறான். அந்த ஈசுவரனது சந்நிதான விசேஷத்தினால் பிரகிருதியானது உலகாகாரமாகிறது. புருஷர்கள் வெவ்வேறாக இருக்கின்றார்கள். யோகாப்பியாசத்தினால் புருஷர்கள் அணிமா முதலிய அஷ்டைசுவரிய சித்திகளையும் பெற்று விதேக கைவல்யத்தை யடைகின்றனர்” என்னும் கொள்கை யுடையது.

இவ்விரு வகுப்பினருள் நிரீசுவர சாங்கியரின் வாதம் என்னவென்றால்:—

(1) ‘சர்வஞ்ஞத்துவமும் சர்வ சக்தியு முள்ள பிரம்மம் உலக காரணமா யுள்ளது’ என்று கூறும் வேதாந்த வாக்கியங்களே பிரகிருதி பரமாகவும் பொருள்தாக் கூடியனவாக இருக்கின்றன.

(2) உலகாகாரமாகப் பரிணமித்தல் முதலிய மாறுபாடுகளை அடைதற்குரிய சக்தி பிரகிருதியினிடத்தில் இருக்கின்றது. அது போலவே சர்வஞ்ஞத்துவமும் அதற்கு உண்டு. ஞானம் என்று எது சொல்லப்படுகின்றதோ அந்த ஞானமும் பிரகிருதியினிடத்திலுள்ள சத்துவ குணத்தின் காரியமேயாகும். சுருதியும் இதனை ஒப்புக்கொள்ளுகின்றது. சத்துவம் ராசதம் தாமதம் என்னும் முக்குணங்களும் ஒப்பநின்ற (சமத்துவமாகவுள்ள) நிலையிலும் சத்துவமானது அந்தப் பிரகிருதியினிடத்தில் இருத்தலால், வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ள சர்வஞ்ஞத்துவம் பிரகிருதிக்கும் இருக்கிறது என்று கூறத் தடையில்லை. மேலும் முக் குணங்களும் ஒப்பநிற்கும் அந்த நிலையில் தன்னினும் வேறான பொருள் ஒன்றும் இல்லாமையால், தானே உலகாகாரமாகப் பரிணமித்தல் முதலிய காரியங்களைச் செய்யக்கூடிய சர்வ ஞான சக்தியைப் பெற்றிருக்கின்றது என்பதைக் கொண்டே, அது (பிரகிருதி) சர்வஞ்ஞத்துவமு முடையது என்று ஊகிக்கப் படுகிறதே யன்றி, உண்மையில் சர்வஞ்ஞத்துவம் அதனிடத்திலிருப்பதாகச் சொல்ல முடியாது. பிரம்ம வாதிகளும் கூட சிருஷ்டிக்குமுன் பிரம்மத்திற்கு சர்வஞ்ஞத்துவ முண்டென்று அதன் சர்வ ஞான சக்தியைக் கொண்டே யல்லவா ஊகிக்க வேண்டும்? அக் காலத்தில் (சிருஷ்டிக்கு முன்பு) பிரம்மத்தைப் பற்றிய வேறான பொருள் ஒன்றும் இல்லாமையால் ஞானத்தைப் பற்றிய விஷயமே இல்லாம லிருக்கி

றது. மேலும், ஞானம் நித்தியமானால் பிரம்மத்திற்கு அந்த ஞானத்தின் உற்பத்தி விஷயத்தில் யாதொரு சுதந்திரமும் இல்லாமற்போக நேரும். ஞானம் அநித்தியமாயின் அந்த ஞானத்திற்கு அழிவு நேர்ந்தால் பிரஹ்மம் சர்வஞ்ஞத் தன்மை யற்றதாய் இல்லாமலே போக நேரும். ஆதலால், பிரளயத்திலும் அப்படியே எல்லா அவஸ்தைகளிலும் சர்வஞான சக்தித் தன்மையே சர்வஞ்ஞத்துவமாமன்றி வேதாந்திகள் சொல்வது போல சர்வ ஞானாசிரயத்துவம் சர்வஞ்ஞத்துவம் அன்று.

(3) சத்துவத்தை யுடைய தேகேந்திரியம் முதலியவற்றின் சேர்க்கையினாலேயே (வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு இம் மூன்றும் சேர்ந்த வழி சிவப்பு நிறம் தோன்றுதல் போல) ஞானம் வெளிப்படுகின்றது. தேகேந்திரியாதிகளின் சேர்க்கை காரணம்; ஞானம் காரியம். காரணத்தால் காரியம் தோன்றுவதே இயல்பு. பிரஹ்மமோ காரண காரியமற்றது என்று சொல்லப் படுகிறது. ஆகவே, காரண காரிய மற்ற பரப்பிரம்மத்திற்கு சர்வஞ்ஞத்துவமோ (எல்லாவற்றையும் அறியும் தத்துவமோ) கிஞ்சிஞ்ஞத்துவமோ (சிற்றறிவுடைமை) இருப்பதாகக் கூறுதல் சாத்தியம் அன்று. சத்துவ குணத்தை மிகுதியாக வுடைய தேகேந்திரியாதிகள் இருப்பதனாலல்லவா யோகிகள் சர்வஞ்ஞர்களாவதை நாம் காண்கின்றோம்?

(4) அநேகாத்மமாக வுள்ள மூலப் பிரகிருதியே உலகாகார மாவதற்கேற்ற அநேக பரிணாமங்களை யடைதற் குரியதாகுமே யன்றி, ஏகாத்மமாகிய பிரம்மம் அவ்வாறு பரிணாமங்களை யடைதற்கு ஏற்றதாகாது.

ஆகையால், உலக காரண வஸ்துவைக் குறிக்கும் வேதாந்த வாக்கியங்கள் பிரகிருதியைக் குறிக்கின்றனவே யன்றி பிரம்மத்தைக் குறிக்கவில்லை."

என்று இவ்வாறு கூறும் நிரீசுவர சாங்கியரின் ஆக்ஷேபங்களை நிராகரிப்பதற்காக:—

சூத்திரம்:—"ஈக்ஷதே: நாசப்தம்" ....5.

ஈக்ஷதே:—ந—அசப்தம்.

(இ-ள்) ந—சாங்கியர்கள் கற்பித்துக் கூறும் பிரகிருதி ஜகத் காரணமாகாது; (ஏனெனில்), அசப்தம்—வேதத்தில் கூறப்படாத விஷயமாக இருத்தலின்; (அது ஏனெனில்), ஈக்ஷதே:—அந்த ஜகத் காரண வஸ்துவிற்கு சங்கற்பம் வேதத்தில் கூறப்பட் டிருத்தலால்.

(கருத்து) "பிரபஞ்சத்திற்குக் காரணமாயுள்ள அந்த வஸ்துவானது பிரபஞ்சத்தைப் படைப்பதற்கு முன் உலகத்தைச் சிருஷ்டி செய்வேன் என்று நினைத்து சிருஷ்டி செய்தது" என்று சுருதிகள் சொல்கின்றன. சாங்கியர்களால் சொல்லப்படும் பிரகிருதியானது அசேதனமா (அறிவற்றதா) யிருப்பது என்று கூறப்படுகின்றதாகலின், அசேதன பதார்த்தமானது. 'நினைத்தது' என்று சொல்வது பொருந்தாது. தவிர, பிரகிருதி பிரபஞ்ச காரணம் என்று வேதத்தில் எவ்விடத்தும் கூறப்பட் டிருக்கவில்லை. ஆகலின், பிரகிருதி ஜகத் காரணமென்று நவிலுதல் அயுக்தமாம்.

ஆகவே, சாங்கியரின் முன்னர் காட்டப்பட்டுள்ள நான்கு ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் எவை எனின்; பின்வருவனவாம்.

(1) மேலேகாட்டிய காரணங்களால் பிரம்மம் பிரபஞ்ச காரணமென்று சொல்லும் வேத வாக்கியங்கள் பிரகிருதி பரமாகவும் பொருள் தரக்கூடியன வாயிருக்கின்றன வென்பதற்குச் சிறிதும் இடமில்லை என்பது விளங்குகின்றது.

(2) சாங்கியர் கூறும் பிரகிருதி ஜடப்பொருள் (அசித்துப் பொருள்—அறிவற்றது.) அந்த சடப்பொருள் வேறொரு சேதன (அறிவுள்ள) பொருளின் சகாயமின்றியே உலகாகாரமாகப் பரிணமிக்கும் வன்மையுடையதாவது அசம்பாவிதம். "சத்துவத்தின் தர்மமா (தன்மையா)கிய ஞானத்தினால் பிரகிருதி சர்வஞ்ஞம் (பேரறிவு) உடையதா யிருக்கின்றது" என்னும் வாதமும் சரியன்று. ஏனெனில், மூலப் பிரகிருதியாகவுள்ள நிலையில் அதனின்றும் பிரிக்கப்படக்கூடாதபடி முக்குணங்கள் சமநிலை பெற்றிருப்பதால், அம்மூன்று குணங்களுள் ஒன்றாகிய சத்துவ குணத்தின் தர்மமாகிய ஞானம் மாத்திரம் எப்படி சம்பவிக்கும்? "சர்வஞான சக்தியிருத்தலால் சர்வஞ்ஞத்தன்மை பிரகிருதிக்கு இருப்பதாகச் சொல்லலாம்" என்னும் வாதமும் அயுக்தமானதே. ஏனெனில்: அந்தக் காலத்தில் ஞான சக்தியை யுடைய சத்துவம் இருந்ததுபோலவே, ஞான பிரதி பந்தக (ஞானமுண்டாகாதவாறு தடுக்கும்) சக்தியையுடைய ரஜோதமோ குணங்களும் அந்தப் பிரகிருதியினிடத்தில் இருந்திருக்கின்றன. ஆகலின், சத்துவத்தால் தோன்றும் ஞானம் மற்ற குணங்களால் தடைப்பட்டுத் தோன்றாதொழியுமே. ஒன்றினால் மற்றொன்றின் சக்தி அழியுமே. எனவே, இதுவும் சரியன்று.

ஒருவேளை நிரீசுவர சாங்கியரின் வாதத்தை விட்டு சேசுவர சாங்கியரின் வாதத்தின்படி பார்த்தாலும் பிரகிருதிக்கு சர்வஞ்ஞத்துவம் சம்பவியாது. ஏனெனில்,

சேசுவர சாங்கியரின் வாதம் இதுவாம்:—

"இரும்பிற்குச் சுடும் தன்மை உண்மையில் இல்லை. நெருப்பின் சேர்க்கையால் உண்டாகின்றது. எனினும் "இரும்பு சுடுகின்றது" என்று தகன சக்தி இரும்பினுடையதாகக் கற்பிக்கப்படுகின்றது. அதுபோல, பிரகிருதிக்கு நினைக்கும் (ஈக்ஷண) சக்தி உண்மையில் இல்லை, ஈசுவரனால் அந்த சக்தி பிரகிருதிக்கு உண்டாகின்றது. எனினும், அந்த நினைக்குந் தன்மை பிரகிருதியினிடத்திருப்பதாகக் கற்பிக்கப்படுகின்றது" என்னும் இந்த சேசுவரசாங்கிய வாதமும் சரியல்ல. ஏனெனில்,

பிரகிருதிக்கு நினைக்குந் தன்மையை யுண்டாக்கும் அந்த ஈசுவரனே சர்வஞ்ஞனாகிய ஜகத்கர்த்தா என்று சொல்வது மிகவும் யுக்தமாயிருக்குமல்லவா? முக்கியத்தை விட்டு அமுக்கிய (கௌண)த்தினிடத்தில் ஏன் சர்வஞ்ஞத்துவத்தைச் சொல்லவேண்டும்? நிற்க,

ஞானம் நித்தியம் என்னும் பக்ஷத்தில் பிரம்மத்திற்கு அந்த ஞானோற்பத்தி விஷயமாக யாதொரு சுதந்தரமுமில்லாமற் போகவேண்டிவரும்" என்று நிரீசுவர சாங்கியரால் முன்னர் கூறப்பட்டது. ஏன் சுதந்தரம் இல்லாமற் போகவேண்டிவரும் என்பதற்கு பூர்வபக்ஷி காரணங் காட்ட முடியுமா? எல்லா விஷயங்களையும் பிரகாசிப்பிக்கும் சாமர்த்திய முடையதும் நித்தியமுமாகிய ஞானமானது எவனை ஆசிரயித்திருக்கின்றதோ அவன் எப்பொழுதும்

அசர்வஞ்ஞனாவான் என்று சொல்ல முடியாதன்றோ! ஞானம் அநித்தியம் என்னும் பக்ஷத்தில் அசர்வஞ்ஞத்துவம் ஒரு காலத்தில் உண்டாகலாம். அத்தகைய ஆக்ஷேபம் ஞானம் நித்தியம் என்னும் பக்ஷத்தில் தோன்றாதே.

ஞானம் தோன்றி அழியும் தன்மை யுடையதாயிருந்து, ஒருகாலத்தில் தோன்றாமல் போகுமானால், அப்பொழுது பிரம்மத்திற்கு சுதந்தரம் இல்லாமற் போகலாம். வஸ்துவின் விசேஷ ஞானத்திற்கு சாமானிய ஞானம் காரணமாயிருத்தலால் அந்த விசேஷ ஞானம் அநித்தியமென்று சொல்லப்படலாம்.

(ஒரு கயிற்றைச் சில வழிப்போக்கர்கள் பார்க்கின்றனர். அவர்களுள் ஒருவன் "இது பாம்பு" என்கிறான். மற்றொருவன் "இது ஜலதாரை" என்கிறான். மற்றொருவன் "அல்ல, அல்ல இது பூமியின் பிளப்பு" என்கிறான். வேறொருவன் "இது கயிறு" என்கிறான். இவர்கள் கூறிய இவற்றில் இரண்டு பதங்கள் காணப்படுகின்றன. "இது" என்கிற பதம் எல்லாவற்றிலும் இருக்கின்றன. பாம்பாகக் கண்டவன் முதல் யாவரும், "இது பாம்பு," "இது ஜலதாரை," "இது பூமியின் பிளப்பு," "இது கயிறு" என்றனர். இவற்றுள் "இது" என்னும் இருப்பு, அந்தக்கயிற்றின் சாமானிய ஞானம். பாம்பு ஜலதாரை முதலியன விசேஷஞானம். மயக்க (பிராந்தி) காலத்திலும் "இது" பாம்பு என்கிறான். பிராந்தி நீங்கிய காலத்திலும் "இது" கயிறு என்கிறான். இங்கு பிராந்தி காலத்திலும் பிராந்தி நீங்கிய காலத்திலும் "இது" என்பது மாறுபடாமல் இருக்கிறது. இந்த "இது" என்பதே சாமானிய ஞானம்; (நிர்விகற்பக—பிறழ்ச்சியற்ற—ஞானம்) இந்த சாமானிய ஞானம் நித்தியம். மற்ற பாம்பு கயிறு முதலிய ஞானம் விசேஷ ஞானம் (சவிகற்பக—பிறழ்ச்சியுடைய ஞானம்.) இப்படியே எல்லாப் பொருள்களிலும் காண்க.)

இந்த சாமானிய ஞானமே பிரம்மஸ்வரூபமாக இருக்கின்றது.

(உலகத்திலுள்ள எல்லாப் பதார்த்தங்களிலும் ஐந்து அமிசங்கள் இருக்கின்றன. அவை (1) நாமம், (2) ரூபம் (3) அஸ்தி (4) பாதி (5) பிரியம் என்பனவாம்.

(1) கடம்—நாமம். (2) உருட்சி—அதன் ரூபம். (3) கடம் இருக்கிறது என்பது—அஸ்தி. (4) கடம் விளங்குகிறது என்பது—பாதி. (5) கடம் பிரியமா யிருக்கிறது என்பது—பிரியம் (ஆனந்தம்.)

இப்படியே எல்லாப் பொருள்களிலும் இந்த ஐந்து அமிசங்கள் இருக்கின்றன. இவற்றுள் அஸ்தி பாதி பிரியம் என்னும் மூன்று அமிசங்கள் எல்லாப் பொருள்களிலும் உண்டு. நாமம் ரூபம் என்னும் மற்ற இரண்டு அமிசங்கள் மாத்திரம் மாறுபாடுடையன. கடம் என்னும் நாமமும் உருட்சியான ரூபமும் படத்தில் (ஆடையில்) இல்லை. அப்படியே படம் என்னும் நாமமும் அதன் ரூபமும் கடத்தில் இல்லை. இப்படியே எல்லாப் பதார்த்தங்களிலும் நாமரூபங்கள் மாறுபாடுடையன. கற்பிதமாயு மிருக்கின்றன.

அந்த அஸ்தி பாதி பிரியம் எங்கும் கலந்திருக்கின்றது. சச்சிதானந்த ரூபமா யிருக்கின்றது. ஆதலால் ஆத்மஸ்வரூபமாம்.

ஞானம் நித்தியமா? அநித்தியமா? என்னும் கேள்விக்கு நித்தியம் என்பதே விடையாகும். அப்படி நித்தியமாக இருப்பதால் ஆத்மாவின் ஸ்வரூபமே ஞானம் என்று விளங்குகின்றது. ஏனெனில், ஆத்மாவுக்கு வேறானதெல்லாம் அநித்தியம் என்பது நியமம். ஞானத்தை ஆத்மாவுக்கு வேறெனக் கொள்ளின் அநித்தியமேயாகும். ஆதலால் ஞானம் நித்தியம் என்று கொண்டு ஞானம் ஆத்மாவிற்கு வேறென்று சொல்லுதல் பொருந்தாது.

ஞானம் அநித்தியமென்றால் அது கடம் முதலியவற்றைப்போல் ஜடமாகும். அநித்திய வஸ்து எதுவோ அது ஜடமாம். ஆதலால், ஞானம் ஜடம் என்று கூறுதல் பொருந்தாது. ஜடமல்லாதபோது அது அநித்தியமுமாகாது. எனவே ஞானம் நித்தியம்.)

தவிர, சூரியன் தான் பிரகாசிக்கச் செய்யவேண்டிய வஸ்து இருந்தாலும் இராவிட்டாலும் பிரகாசித்துக்கொண்டிருப்பதுபோல, பார்த்தலாகிய காரியம் நிகழ்தற்குரிய விஷயங்களாகிய வஸ்துக்களிருப்பினும் இராவிடினும் பிரஹ்மம் பார்க்கிறான். எனினும், உலக சிருஷ்டிக்கு முன் பிரம்மத்திற்கு வேறாக ஒரு பொருள் இல்லாமலிருப்பினும் அந்த நிலைமையிலும் பார்த்தல் தொழில் நிகழ்தற்கு அவசியமான ஒரு பொருள் இல்லாமல் போகவில்லை. அப்படியானால் அந்த வஸ்து எது? எனில்: அது பிரம்மமோ அல்லது அதற்கு வேறானதோ இன்னதெனக் கூற இயலாத வஸ்துவாகும். எனவே அது சதசத்விலக்ஷணமாக விருப்பது. அவ்வியாகிருத நாமரூபாத்மகமானது. அநாதியானது. அத்தகைய ஒரு பொருள் (பிரகிருதி) பார்த்தலாகிய வியாபார கர்மமாகி இருப்பதாக சொல்லத்தக்கதாயிருக்கின்றது. ஆதலால் பூர்வபக்ஷியின் இரண்டாவது ஆக்ஷேபமும் யுக்தமன்று.

(3) "ஈசுவரனுடைய அநுக்கிரகத்தால் யோகிகள் சர்வஞ்ஞத்துவத்தைப் பெறுகின்றார்கள்" என்று சேசுவரசாங்கியர் சொல்லுகின்றார்கள். ஆகவே, யோகிகளுக்கு சர்வஞ்ஞத்துவம் உண்டுபண்ணும் ஈசுவரன் சர்வஞ்ஞன் என்று சொல்வதில் தடை என்ன?

"சரீராதிகளின் சம்பந்தமில்லாமல் ஈசுவரனுக்கு பார்க்கும் தன்மை உண்டாகாது" என்னும் ஆக்ஷேபமும் சரியன்று. ஈசுவரன் அந்த ஞான சொரூபனாகவே இருத்தலால் சரீராதிகளின் அபேக்ஷை வேண்டியதில்லை. சுயம்பிரகாச பதார்த்தத்தைப் பிரகாசிக்கச் செய்ய மற்றொரு பிரகாசம் வேண்டியதில்லையே. அவித்தியாவசப்பட்ட சம்சாரிக்கு சரீராதி சம்பந்தமில்லாமல் ஞானம் உண்டாகாதே யன்றி ஞானப் பிரதிபந்த காரணரகிதனாகிய ஈசுவரனுக்கு சரீராதி சாதன சகாயம் தேவையில்லை.

(4) பிரம்மம் ஏகமாயினும் பலவித வேறுபாடுகளைக் கொண்ட பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கும் சாமர்த்திய முடையது. (இவ்விஷயம் 2-ம் அத். 1 பாதம். 4-ம் சூத்திரத்தில் விளக்கப்படும்.)

ஆகவின் ஜகத் காரணத்தைக் கூறும் வேதாந்த வாக்கியங்களுக்குப் பிரகிருதி பரமாகப் பொருள் கூறுதற்குச் சிறிதும் இடமில்லை என்று அறிக.

சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு

சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு ஜூன்மீ 10-ம் நாளில் ஆரம்பமாயிற்று. இம்மகாநாட்டைச் சென்னை அரசாங்க இரண்டாவது மந்திரி கனம். பி. டி. ராஜன் அவர்கள் திறந்துவைத்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் டி. வி. உமாமகேசுவரன் பிள்ளை, பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமைவகித்தார்கள். வரவேற்புக் கழகத் தலைவராயிருந்தவர் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. எம். எல். அவர்கள். வரவேற்புக் கழகத் தலைவர் சொற்பொழிவில் ஒரு பகுதியும், தலைவர் சொற்பொழிவின் சாரமும் மேற்படி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் கீழே வெளியிடப்பட்டிருக்கின்றன. அவை முறையே வருமாறு:—

வரவேற்புக் கழகத் தலைவர் சொற்பொழிவு

ரகரத்தையும் றகரத்தையும் ஒன்றாக்கினால் சொற்குழப்பம் ஏற்படும். றகரத்தாற் புலனாகும் வீரச்சுவை மறைந்தொழியும். 'அற்றதலை போக அறாத தலை நான்கினையும், பற்றித் திருகிப் பறியேனோ' என்பதிலுள்ள சினவாற்றல் றகரத்தைப் பொறுத்ததே. ஆசிரியரென்னும் பொருள்படும் குரவரும், மலைவேடரைக் குறிக்கும் குறவரும் ஒரு சொல்லாகும். அரமும் அறமுமொன்றாம். விரலும் விறலும், அரையும் அறையும் தலைமயங்கி அவ்வவற்றின் பொருளாற்றல் வேறுபாட்டைத் தொலைத்து விடும். னகரத்தை ஒழித்து விட்டால், நகரத்திற் கினமாய மெல்லோசை இன்னதென்பது விளங்காது. மொழிக்கு முதலில் வராத எழுத்தைப்பற்றிய சூத்திரத்தை மாற்ற வேண்டும். ழகரத்தை ஒழித்தால் மாட்டுக் குளம்பும் உணவுக் குழம்பும் ஒன்றாவதுடன் தமிழிற்குரிய சிறப்பெழுத்தும்போய், அவ்வெழுத்துள்ள சொற்கள் தமிழ்ச்சொல்லென்ற கருத்திற் கிடமிராது. வடமொழியில் லகரமே முதலில் உண்டு. பின் ளகரம் வந்தது. லளவேற்றுமை கிடையாது. தமிழில் லகரமும் ளகரமும் வேறாதல் கல், கள், வில், விள், கலம், களம், வல், வள், கொல், கொள் என்பவற்றின் பொருள் வேறுபாட்டாலறியப்படும். பிறவும் அவ்வாறே கண்டுகொள்க.

தமிழ் எழுத்துவடிவுகளெல்லாம் கருவின் உருவாய் ஓங்காரத்தில் நின்று தோன்றியன. ஆதலாலும் தமிழில் நெடுங்கணக்கிற்கு வடிவம் தனியே அமைந்திருப்பதாகிய செய்தியை மறைத்தல் வரலாற்றுண்மையை மறைத்தல் ஆகுமாதலாலும் தமிழின் வரி யெழுத்துக்களை மாற்றுவது தவறாகும்.

அவ்வாறே தமிழ்ச் சொற்களையும் பாதுகாத்தல் வேண்டும். பிற எழுத்துக்களின் கலப்பு தமிழில் ஏற்படுங்காலத்தில் தமிழ் எழுத்தின் அமைப்பிற்கு ஏற்றவாறே அவைகள் சேர்க்கப்பட வேண்டும் என விதி இருப்பினும் தமிழிலுள்ள சொற்களை இழவாதிருத்தற் பொருட்டும் தமிழ்மொழியின் ஆற்றல்களை விளக்கிக் காட்டுதற் பொருட்டும் புதுக்கருத்துக்களைத் தனித்தமிழ்ச் சொற்களாற் புலப்படுத்துதலே பொருத்தமாகும்.

தமிழ்மொழியிலே பிறமொழிச் சொற்களைக் கலத்தல் கூடாதென்பதைச் சிலர் நோக்க வொடுக்க மென்பர். அது தவறு. நூல் இழைப்பதும் ஆடை நெய்வதும் அறவே ஒழிந்த இந்நாட்டில் அவை தழைத்தற்

பொருட்டு கதராடை யணிதல் வேண்டுவோரை ஒடுக்க நோக்கினர் என்று கூறுதல் தவறாதல்போல, தூய தமிழ்ப்பேச்சு மிகக் குறைந்து, தமிழ்ச் சொல்லாக்க முறைகள் பெரிதும் மறைந்தொழிந்த இத் தமிழ்நாட்டிலே அவை நிலைத்தற்பொருட்டு தூய தனித்தமிழ் வழங்கல் வேண்டுமென்றல் தக்கதே யாதல் காண்க.

சொல் என்பதை உரைப்பதற்கு மொழி, உரை, கூறு, இயம்பு, அறை, பறை, நொடி, ஒப்பு, பேசு, சாற்று ஓது முதலிய பல சொற்கள் பல உணர்ச்சி நயங்களை விளக்கத் தக்கவாறு தமிழில் அமைந்திருப்பவும் வசனித்தான் சம்பாஷித்தான் முதலிய அயற்சொற்களை வழங்குவோமாயின், தமிழிலுள்ள சொற் செல்வத்தையும் அதன் வகை நயங்களையும் நாம் அறியா தொழிவோம். வெவ்வேறு தொழிலுடையோர் வழங்கும் குழூஉக்குறிச் சொற்கள் மரபுச் சொற்கள் முதலியவற்றை அத் தொழில்களைப்பற்றிய நூல்களை எழுத விரும்புவோர் கற்றுப் பயன்படுத்துதலை விடுத்து பிறமொழிச் சொற்களை நேராகத் தமிழில் பயன் படுத்துதல், 'கருந்தனம், கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு அரிப்பரித் தேய்த்துப் பொருள் தேடு'வதை யொக்கும் என்பதைத் தச்சர்மரபுச் சொல்லாக வழங்கும் 'ஏண்' என்னும் ஓரசைச் சொல்லாற் குறிப்பது எவ்வளவு எளிதென்பதைப் பாருங்கள். அவ்வாறே தமிழ் மருத்துவ நூலிலுள்ள சொற்கள் பல, மருத்துவ நூற்கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுவதுடன், நம் முன்னையோர் நமக்கு வைத்த அரும்பொருட் குவியல் இன்ன வென்றறிந்து நாம் மகிழ்தற்கும் ஏதுவாகும். வரலாற்று வளர்ச்சிக்கும் அது காரணமாகும். முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோற் காத்தல் நமது கடமையாதலறிக.

தலைவர் சொற்பொழிவு

பழந்தமிழ்க் காலமுதல் வட சொற்களும் திசைச் சொற்களும் தமிழில் இன்றி யமையாத விடத்து வழங்கி வந்திருக்கின்றன. ஆனால் பிறமொழிகள் தமிழுலகில் நுழைந்து பணிசெய்ய நேருங்கால் அவைகள் தமிழியலுக்கு முரண்படுதல்பற்றி அவ்வட எழுத்துக்களை நீக்கி எழுதுவதே முறையென மூதறிஞர் கண்டனர். வடசொற்கள் தமிழில் பெரிதும் வழங்கத் தலைப்பட்ட பிற்காலத்திலும் இவ் வியலுக்கு மாறுபடா வண்ணம் வடமொழி ஆக்கத்திற்குச் சில விதிகளும் நன்னூலார் வகுத்தனர். அக்காலமுதல் இதுகாறும் தோன்றிவரும் சிறந்த நூல்கள் யாவும் இம்மொழி மரபு வழுவாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய நாளில் தமிழை வளம்படுத்துவோமெனத் தலைப்படும் ஒரு சிலர் தமிழ் எழுத் திலக்கணத்தில் குறைபாடுகள் மலிந்திருப்பதாகவும் அவற்றை அகற்றுதல் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாததென்றும் கூறுகின்றனர். நூல் வழக்கினருக்கும் மொழிகளையும் அவற்றின் எழுத்திலக்கணங்களையும் இக்கொள்கையினர் நடுநின்று ஆய்வரெனில் பிறமொழிகளில் காணும் குறைபாடுகள் சொல்லிறந்தன வென்றும் தமிழ் மொழியில் அத்துணை குறைபாடுகள் இல்லையென்றும் காண்பர்.

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் ஒருங்கே உடைய ஆங்கிலப் புலவர்கள் நமது எழுத்திலக்கணத்தைச் சீர்திருத்த முற்பட்டனரா? நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகிய உரையாசிரியர்கள் வடநூலார் கொள்கையில் அடிபட்டிருந்தும் தமிழ்மரபு இழுக்கா வண்ணம் உரை நூல்கள் இயற்

றினரன்றே! வடவெழுத்தைத் தமிழில் பெய்து கொள்கை இன்றியமையாதென இவ்வுரையாசிரியர் காணவில்லையே? தமிழன்பர் என்றும், தமிழ்ப் புலவர் என்றும், தமிழை வளம்பெறச் செய்வார் போலவும், தமிழுக்குப் புத்துயிர் அளிப்பார் போலவும் வாய்ப்பறை சாற்றி ஆங்கிலம், வடமொழி ஆகிய பிறமொழிகளில் தமக்குள்ள பெருமதிப்பினால் தமிழ் மொழிமேல் குறைகளை ஏறிட்டுக் கூறியும், தமிழ் மொழியின் சீரினை இழித்துக் கூறியும், மனம்போனவாறெல்லாம் சீர்திருத்தம் பேசத் தலைப்படுகின்றவர் போலித் தமிழரல்லவா?

கலை நூல்கள் தமிழில் எழுதப் பெருங் குறையென எல்லோராலும் கருதப் பெறுகிறது. தமிழில் எழுதப் பெறும் கலை நூல்களுக்கு உண்மையான தேவை நாட்டில் இருந்தால் நூல்கள் ஒன்று பலவாகத் தோன்றி விடுமென்பது என்பது எனது நம்பிக்கை. தமிழ்ப் பற்றுடைவர்கள் ஒரு சிலர் ஆங்காங்கு நடத்திவருகிற தமிழ்க் கலாசாலைகளையன்றி, சிறந்த முறையில் விரிவான ஏற்பாடுகளுடன் நடத்தப்பெறும் உயர்தரத் தமிழ்க் கல்லூரி ஒன்றேனும் தமிழ்நாட்டின் எல்லைக்குள் காண்பதற்கில்லை. தமிழ் நாட்டிலுள்ள குறுநில மன்னர், நிலக்கிழவர்கள், செல்வர்கள் ஆகிய பெருமக்களில் பெரும்பாலர் தமிழ் மொழியிடத்து அன்பில்லாதிருக்கின்றனர்; இவர்களுடைய அரண் வாய்ந்த மாளிகைகளில் கண் முதலிய புலன்களைக் கவரும் பொருள்கள் சேமித்திருப்பதன்றி, அறிவையும் மனதையும் கவரும் தமிழ் நூல்களைத் காண்பது அரிதினும் அரிதாகின்றது. தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஆங்கிலக் கல்லூரிகள் எத்தனை, வடமொழிக் கல்லூரிகள் எத்தனை வளனுற விளங்குகின்றன. இதுகாலை அரசியற் பித்தினால் இந்தி மொழியும் இந்திப் பிரசாரகரும் தமிழ்நாட்டில் பெற்றிருக்கும் ஆக்கத்தின் பொருட்டு என்ன? பிறமொழிகள் வளர்தற்கும், தமிழ்மொழி வளங்குன்றுதற்கும் காரணமாவது தமிழரின் முயற்றின்மையே யாகும். அரசியலாரையும், நாட்டின் தலைவர்களையும், மடங்களின் தலைவர்களையும், பெருஞ் செல்வரையும் பழிதூற்றுவதில் பயனில்லை.

தமிழ் நாட்டின் நிலை பல்லாற்றானும் தளர் வுற்றிருக்கின்றது. நூற்றுக் கணக்கான ஆங்கிலக் கல்லூரிகளும், இரண்டு பல்கலைக் கழகங்களும் தமிழ் நாட்டின் எல்லைக்குள்ளிருந்தும்' தமிழரில் பெரும்பாலர் கல்லா மாக்களெனக் கருதப்படுகின்றனர். ஆங்கிலக்கல்லூரியிலிருந்து கற்று தேறி வெளிவருபவர் புதுக்கொள்கைகட்கு அடிப்பட்டு, பிறர்மாட்டு அன்பும் அருளும் கொண்டு தொண்டு புரியுமாறறியாத ஊமராய்த் தனிச்சாதியினரா யிருக்கின்றனர். அறியாமை அகலவும், நாடு நலஞ்சிறக்கவும் தமிழ்க் கல்வியே சிறந்த கருவி. தமிழ் மொழியின் ஆக்கம் பெறுதற்குரிய வழிகளை நாடித் தமிழறிஞர் நாட்டைப் புரப்பாராக.

நிறைவேறிய தீர்மானங்கள்

சென்ற மாதம் திருநெல்வேலியில் கூடிய தமிழர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் விவரம் பின்வருமாறு:—

1. ஆங்கில ஆசிரியருக்குள்ள தகுதிகளும் வெறுப்புகளும் தமிழ் ஆசிரியர் கட்கும் இருத்தலினாலே அவ்வப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆங்கில ஆசிரியருக்குத் தருவதுபோலச் சம்பளம் தமிழாசிரியர்கட்கும் தரவேண்டுமன்று மென்று அரசியல் அதிகாரிகளையும் கல்லூரி நடத்துகிறவர்களையும் ம் மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

2. உலக மூதன் மொழியாகவும் பலதுறைக் கல்விகளும் அமைந்துள்ளதாகவும் உள்ள தமிழை அடிமை மொழிஎனப் பொருள் படும் "வர்னகுலர்" என்று சொல்லாமல் "தாய் பாஷை" எனக் கூறவேண்டும் எனப் பல்கலைக் கழகத்தாரை இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

3. ஆசிரியப் பயிற்சி பள்ளிகளில் தகுதி வாய்ந்த தமிழாசிரியர்களை அமர்த்தல் வேண்டுமென இம்மகாநாடு தீர்ப்பளிக்கிறது.

4. மக்களிடை அறிவை வளர்க்கச் சுற்றுதல் நிலையங்கள் பல இடங்களிலும் தொடங்கும்படி நாட்டாண்மைக் கழகத்தாரையும் தமிழ்ச் சங்கங்களையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

5. நூல் பதிப்புக் கழகத்தாருடைய ஒப்பம் பெற்ற நூல்களில் பல பிழை மலிந்திருப்பதைக் கண்டு இம்மகாநாடு வருந்துகிறது.

6. ஆங்கிலத்திலும் வட மொழியிலும் இருப்பது போல தமிழிலும் துணைமொழி இல்லாமல் தமிழிலேயே பி. ஏ., எம். ஏ. தேர்வு ஏற்படுத்த வேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழகத்தாரை இம்மகாநாடு வேண்டிக் கொள்கிறது.

7. கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலம் ஒழிந்த எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்பித்தல் வெண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

8. பள்ளி இறுதித்தேர்வு (எஸ். எஸ் எல். சி.) நடுத் தேர்வு, கல்லூரித் தேர்வு (பி. ஏ.) ஆகிய தேர்வுகளில் தமிழை எடுத்துக்கொண்ட மாணவர் அதே மொழியை விருப்பப் பாடமாக எடுத்துக்கொள்ளலாமென விதிக்க வேண்டுமென்று பள்ளி இறுதிக் கழகத்தாரையும் பல்கலைக் கழகத்தாரையும் இம் மகாநாடு வேண்டுகிறது.

9. தமிழ் மொழியில் பல் பொருள் விளக்க அகாதி இன்மையின் அக்குறையை நீக்கத் தமிழறிஞர்கள் முற்படுதல் வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

10. நாட்கள் உண்மை வரலாற்றை விளக்குகின்ற கல்வெட்டுக்களை ஆராய்ச்சி செய்வதற்கு அதில் பழக்கமுள்ள தமிழ்ப்புலமை மிக்கார்களையே ஏற்படுத்தியும் அவற்றைத் தாமே ஆராய்பவர்களுக்குப் பண உதவிகள் செய்யும்படிக்கும் இது வரையில் வெளிவராத கல் வெட்டுக்களை விரைவில் வெளியிடும் படிக்கும் அரசியலாரை இம் மகாநாடு வேண்டுகிறது.

11. தமிழ்ப் பெயர்கள், பிறமொழிப் பெயர்களாக மாற்றப் பட்டிருப்பதை உண்மைப் பெயரால் வழக்கத்தில் கொண்டுவர வேண்டிய ஏற்பாடு செய்யகமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிது.

12. தமிழ்நாட்டில் நடைபெறும் விழாக்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் தமிழ் பாடல்களே பாடுமாறு ஏற்பாடு செய்யத் தமிழ்ப் பெருமக்களை இம் மகாநாடு வேண்டிக் கொள்கிறது.

மேல்நாட்டுக் கலைகளிலுள்ள கலைச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை ஆராய்ந்து தருமாறு ஒரு உட்கழகத்தை இம்மகாநாடு அமைக்கிறது.

மகாநாட்டில் சென்னை மாகாணத் தமிழர் சங்கம் என்று ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு விதிகளும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

ஒரு விவசாயி முறையீடு

(நா. ரே. முத்துகிருஷ்ணன்.)

நான் ஓர் விவசாயி. விவசாயத்தில் பெரிதும் விருப்பமுள்ளவன். எனக்கு ஓர் விருத்தாப்பியமான தாயும் ஓர் மனைவியும், இரண்டு குழந்தைகள்—5 வயதுள்ள ஓர் பெண்ணும், 9 வயதுள்ள ஓர் ஆண் மகவும் உண்டு. இவ்விரு குழந்தைகளும் பள்ளியில் கல்வி பயில்கிறார்கள். எனக்குக் கொஞ்சம் சொந்த நிலம் உண்டு; நன்செயும் புன்செயுமாக இருக்கின்றன. இவைகளைக் கொண்டே என் குடும்பத்தை வெகு சிக்கனமாகவும் கஷ்டத்தோடும் நடத்திவந்தேன். ஆயினும் இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கும் நிலையைக் கவனித்தால் என் நெஞ்சம் பற்றி எரிகிறது. இவ்வருஷம் என் நிலம் சரியான காலாகாலத்தில் மழை இல்லாததினால் எவ்வருஷத்தைக் காட்டிலும் இவ்வருஷம் குறைவாகக் கண்டு முதல் செய்தேன். இவ்வருஷம் நெல்விலையானது கனவிலும் கருதமுடியாத விதத்தில் குறைந்தது அனைவரும் அறிவார்கள். சர்க்கார் வரி வசூல் ஆரம்பமாயிற்று. ஒன்றும் சமாளிக்க முடியவில்லை. விளைந்த நெல்லில் மூன்றில் இரண்டு பங்கு சர்க்காருக்கு விற்று வரிசெலுத்திவிட்டு மீதி ஒரு பங்கை என் குடும்பச் செலவிற்கும் என் பண்ணை ஆளின் குடும்பத்திற்கும் மறு வருஷவரைக்கும் வைத்துக் கொள்ளுவோமென்று கணக்கு பார்த்தேன். சரிப்பட்டு வரவில்லை. சுமார் நான்கு மாதங்களுக்கே வரும்போலிருக்கிறது. மறுபடி என்ன செய்வதென்றும் யோசித்தேன்; ஒன்றும் புலப்படவில்லை. எல்லாவற்றிற்கும் தெய்வமே துணை என்று நெல்லை விற்கத் தொடங்கினேன். ஆனால் நெல் வியாபாரியோ பெரிய சுளை விழுங்கிப் பேர்வழி; நெல் அளப்பதில் மகாசூரன்; இச்சூரன் என் நெல்லை—நான் அரும்பாடுபட்டு ஒவ்வொரு மணி மணியாகச் சேர்த்த நெல்லை-நான் நம்பி இருந்த நெல்லை-எனது ரத்தவியர்வை நிலத்தில் விழச் சேகரித்த நெல்லை—என் முன்னோர்கள் எனக்கு அருமையாய் அளித்த நிலத்தின் நெல்லை-நானும் என் மனைவி மக்களும் வயிறார உண்டு களிக்காத நெல்லை—என் மனைவிக்கு நல்ல உடைகள் வாங்கிக் கொடுக்காமல் இவ்வருஷம் வாங்கித் தருவதாகச் சொல்லிச் சேகரித்த நெல்லை—என் அன்னை விருத்தாப்பிய காலத்தில் விரும்பியவைகளை அன்போடு வாங்கி அளிப்போமென்று பாடுபட்ட நெல்லை—என் மக்களுக்குச் சென்ற பண்டிகைகளில் நெல் விற்றுப் புது ஆடைகள் வாங்கித்தருவதாக சமாதானம் சொல்லி நான் நம்பி இருந்த நெல்லை—தேர் திருவிழாக்களுக்கு அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று என் மனைவி மக்கள் கேட்டதற்கு, நெல்விற்று அழைத்துப்போகிறேன் என்று சொல்லி அவர்களும் அப்படியே நம்பியிருக்க என்னை நம்பிக்கைத்துரோகமாக்கிய நெல்லை—நான் எப்படியாவது கிழிந்த வேஷ்டிகளை வறுமையால் உடுத்து மனம் சாந்தமாயிருந்தாலும் அவ்வறுமை தெரியுமா என் அருமை குழந்தைகளுக்கு? அவைகள் என் கால்களைப் பற்றிக்கொண்டு பெண் எனக்கு எங்கேயப்பா பட்டுப் பாவாடையும் கால் காப்பு செய்து தருவதாக சொன்னீர்களே என்று ஒரு புறம் வருத்த, மற்றொரு பக்கம் என்மகன் எனக்குப் புத்தகம் வாங்கவேண்டும் அப்பா, அடுத்த வீட்டு ராமு பட்டுச் சட்டைபோட்டு இருக்கிறான் அதுபோல் எனக்கும் வேண்டும் என்று அழ மற்றொரு பக்கம் என் மனைவி அடுப்பங்கரையிலிருந்துகொண்டு என்னைக் கேட்க முடியாதவளாய் தேம்பித் தேம்பிக்கொண்டும் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் ஓட கிழிந்த புடவைக்கு மறு புடவையில்லையே என்று ஏங்கவும் என் அன்னை அனாதியான பிணம்போல் ஓர் மூலையில் படுத்திருக்கவும் கண்டு இறைவனே நான் உன்னையே நம்பி இருக்கிறேன். வேறு இவ்வுலகில் உதவுவார்கள் யாருமில்லையே என்று சோர்ந்து நின்ற என் முன்னிலையில் தன் இஷ்டம்போல் மரக்காலைப் பாய்ச்சி அளந்து மூட்டை கட்டினான். அளந்த நெல்லுக்கு அப்படியே பணத்தை நெல் வியாபாரி கொடுத்ததுதான் தாமதம். சர்க்கார் வரிவசூல் செய்யும் பட்டாமணியம் தெருவில் நின்றுகொண்டு என் பிள்ளைவாள் இனிமேல் பொறுக்க முடியாது. இன்றையதினம் செலுத்தாதுபோனால் நாளை உன் வீட்டை ஜப்தி செய்துவிடுவோம் என்று உரக்கத் தெருவில் கத்தினார்.

வாங்கிய பணத்தை அப்படி கொண்டுபோய் கொடுத்து ரசீது கேட்டேன், இன்னும் ரூ. 12 பாக்கி என்றார்; கையில் இல்லையே என்றேன். இல்லாவிட்டால் ஏதாவது நகைகூடவா இல்லை. எங்கள் தாசில்தார் உங்களுக்காக நகைகளை இம்பீரியல் பாங்கியில் வைத்து இருக்கிறார்கள், நீ காலையில் நன்னிலம் ஸ்டேஷனில் ரயில் ஏறினால் மாலையில் பணத்தோடு திரும்பிவிடலாம்; என் கஷ்டம் என்றார். ஐயோ நகையைக்கூட கண்டு அறியேனே தெய்வமே என்ன செய்வேனென்று ஏங்கினேன். மணியம் சரி இன்னும் பத்து நாள் தவணை தருகிறேன் ஏதாவது தோதுசெய்து செலுத்தும் என்று போயினார். சரி மீதி கொஞ்சம் இருந்த நெல்லையும் விற்று செலுத்திவிட்டு நெல் குதிர்களை காலியாக்கினேன். அத்துடன் சர்க்கார் வரி கவலை நீங்கியது. ஆயினும் என் குடும்ப நிர்வாகத்திற்குத் தற்சமயம் தானியம் இல்லை. என் அடுப்பு அவிந்தது என் மனைவி சாப்பாட்டிற்கு அரிசியில்லை என் செய்வதென்றாள். அச்சமயம் என் பண்ணை ஆள் தெருவில் நின்றுகொண்டு ஆண்டே ஆண்டே, என அழைத்தான்: ஏன் என்றேன். ஐயோ கஞ்சி காய்ச்சி இரண்டு நாள் ஆகிறது தந்தையே, நீதான் இச்சமயம் காப்பாற்றவேண்டும்; இல்லாவிடின் பிள்ளை இறந்துவிடும்போல் இருக்கிறது; நாங்களாவது பொறுத்துக்கொண்டிருக்கிறோம், என் சிறு குழந்தை பசியால் பேச சக்தியற்று கீழே விழுந்துகிடக்கிறது. இச்சமயம் கொஞ்சம் கஞ்சி ஊற்றினாலொழிய உயிர் போய்விடுமென்று கெஞ்சியபடி அழுதுகொண்டு வாயிற்படியில் உட்கார்

தான். என் இரு குழந்தைகளும் பள்ளிவிட்டு வாடிய முகத்தோடு சோறு போடம்மா என்று கேட்டுக்கொண்டு உள்ளேவந்து சோர்ந்து விழுந்து "நாளைக்கு பள்ளிக்கூட சம்பளம் கொண்டுவந்தால் இவ்விடம் வரலாம்; இல்லாதுபோனால் வரவேண்டாமென்று உபாத்தியாயர் கண்டிப்பாய் சொல்லிவிட்டார்; பணம் கொடுங்களப்பா" என்று வாட்டமுற்ற முகத்தோடு கேட்டார்கள். எனக்கோ ஒன்றும் தோன்றவில்லை. நான் யாரிடம்போய் முறையிடுவேன்? ஏ பாரத நாடே, உன் மக்களாகிய எங்களை காப்பாற்றுவார் ஒருவரும் இல்லையே! ஏ பிரிட்டிஷ் அரசாங்கமே இதுதானா உன் ஆளுகை! குடிகளுக்கு நேரும் குறை நீக்கல் அரசாங்கத்தைச் சார்ந்தது அல்லவா? "ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்குமே" என்று அறிந்தும் வாளா இருக்கிறாயே! நாங்கள் படுந்துன்பம் உங்களைச் சார்ந்ததல்லவா? ஏழையாகிய நாங்கள் உங்களிடமல்லவா முறையிடவேண்டும். நீங்களே இவ்வாறு செய்தால் வேறு யார் இவ்வுலகில்? வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் எப்படி செழிக்கும்? இவ்வாறு கேட்டும் கண்டும் வாளா இருப்பது தரும நீதியோ? ஏ தாலுக்கா ஜில்லாபோர்டு மெம்பர்களே! எங்களிடம் ஓட் வாங்குவதற்கு எவ்வளவு சிரத்தையோடு மோட்டாரோடு வந்து உறவாடி பதவி பெற்றீர்கள்! பதவி பெற்றுவிட்டு எங்களுக்கு என்ன செய்தீர்கள்? இதுதானா நாங்கள் உங்களை நம்பியதன் பலன்? இனியாவது கண் விழித்து எங்களை எடுத்துப் பார்க்கமாட்டீர்களா? நாங்கள் படுகுழியில் வீழ்ந்து பசியால் பரிதவிக்கும் இக்காலையிலல்லவோ எங்களைக் காப்பாற்றவேண்டும்? ஏ சீர்திருத்தவாதிகளே! நம் நாடு முன்னேற முடியாமல் ஆழ்ந்துகிடக்கும் சங்கதி இப்போது அல்லவா தெரிகிறது? இவ்வாறு ஏழையாகிய யாங்கள் பசியால் பரதவித்தால் நம் இளைஞர்கள் எப்படி பலசாலியாகவும் வீரர்களாகவும் ஆக முடியும்? பள்ளி சம்பளம் கொடுக்க முடியாமல் பரதவித்தால் எப்படி புத்திசாலியாகவும் மேதாவிகளாகவும் ஆகமுடியும். இனியாவது எல்லாவற்றையும் விட்டு இதற்கு ஆவன செய்யவேண்டுகிறேன். ஏ பத்திரிகை ஆசிரியர்களே! உங்களது பத்திரிகைகளில் "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை" என்றும், "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்றும், "மேழிச் செல்வம் கோழைப்படாது" என்றும் வானளாவ விவசாயத்தின் சிறப்பைப் புகழ்ந்தீர்களே! உங்களது புகழை நான் படித்து உபாத்தியாயர் உத்தியோகத்தையும் ராஜிநாமா செய்து விவசாயத்தில் ஆவலுற்று இறங்கினேனே. தற்கால விவசாயச் சிறப்பு இதுதானா! உங்களுக்கு ஞாபகம் எப்போதாவது வந்தால் சிறிது தீர்வையை குறைக்கும்படி எழுதிவிட்டு பேசாமல் மறந்துவிடுகிறீர்கள். இனியாவது மறக்காமல் எங்களது குறைகளைத் தீர்க்க பலமாகக் கண்டித்து எழுதுங்கள். சட்ட சபைகளில் வீண் விதண்டாவாதங்கள் பேசி மறுக்ஷணம் உல்லாசமாகக் காலங்கழிக்கும் பெரிய சீமான்களே! உயிர்போகும் தறுவாயிலுள்ள விவசாய வாயில்லாப் பூச்சிகளாகிய எங்கள்மேல் கருணைகூர்ந்து எங்களைக் காப்பாற்ற இது க்ஷணம் வந்தாலொழிய மறுக்ஷணம் எங்களது மனைவி மக்களும் கால்நடைகளும் வேலையாள்களும் உயிர் நீங்குவது திண்ணம்! இனி மேலும் நான் அதிகம் எழுதமுடியாது; என் கை சோர்கிறது.

சில விநோதங்கள்

நாணயம் தவறுதல்:—பணம் வந்ததும் திரும்பக் கொடுத்துவிடலாம் என்ற முழுமனத்துடன் சிலர் சாமான்களை கடைகளில் வாங்குகிறார்கள்; சினேகிதர்களிடம் பணம் கடன் வாங்குகிறார்கள்; ஆனால் பணம் வந்துவிட்டால் நினைவு மாறிவிடுகிறது. பணத்தை திரும்பக் கொடுத்துப் பழையகடனைத்தீர்க்க மனம் வருவதில்லை. அப்படியே ஒருவேளை கொடுத்துவிட்டாலும் பணம் செலவாகி விட்டதே என்று ஏங்குகிறார்கள்; அல்லது இன்னொரு தடவைகொடுத்தக் கொள்ளலாமென்று நினைத்து நாணயம் தவறிக் கெடுகின்றார்கள். உலகத்தில் இக்காலத்தில் பெரும் பாலர்களும் நாணயம் தவறுதல் கக்ஷியைச் சேர்ந்தவராகவே யிருக்கிறார்கள்.

2. வீட்டின் செலவு:—புருஷன் சம்பாதித்து வீட்டுச் செலவுகளை கவனிக்கிறவரையிலும் மனைவிக்கு கொஞ்சமும் கவலையே கிடையாது; அதிக செலவாளியாகவே யிருப்பாள். வீட்டுக்கு வரும் விருந்தாளிகளையும் தன் சொந்தக்காரர்களையும் இன்னும் சிலநாட்கள் கூட இருக்கச்சொல்வாள். தன் கணவனுக்கு அதிகச் செலவாகிறதே என்று எண்ணாள்-சிக்கன புத்தியும் வராது-கணவன் உத்தியோக மாறுதலாலோ, வியாபாரத்தை யிட்டோ, அல்லது வேறு ஏதாவது காரணங்களையிட்டோ, வேறொரு இடத்திற்கு செல்லும்படி நேரிட்டு மாதம் இவ்வளவு என்று செலவுக்குக் கொஞ்சம் நாட்கள் கொடுக்க நேரிட்டால் மாதா மாதம் வருகிற பணத்துக்குள் செல்லவிட வழிதேடுவாள்; செட்டுத்தனமான குடித்தனமும் செய்ய ஆரம்பித்துவிடுவாள். அதிகம் செலவிட்டால் நாளைக்கு என்ன செய்வது என்பது என்ற கவலையும் ஏற்படும். அனேக ஸ்திரீகள் புருஷனை பலசெலவுகளைச் செய்யக் கட்டாயப் படுத்துகிறார்கள். புருஷர்களும் அவர்கள் மீதிருக்கும் அன்பின் மிகுதியால் அவர் சொல்லை மறுக்க முடியாதபடி விலையுயர்ந்த ஆடையாபரணாதிகளிலும், விருந்துகளிலும், கலியாணம் முதலியவைகளிலும் செலவழித்துவிட்டு தாங்கள் இறக்கும் முன்பே ஓட்டாண்டியாகிறார்கள். ஓட்டாண்டியானாலும் சொத்துக்களை விற்றால் எங்கே தங்கள் கௌரவம் குறைந்துபோகுமோ என்று எண்ணி பணம் ஏராளமாக கடன்வாங்கி அதற்கு வட்டியும் வட்டிக்கு வட்டியுமாக ஏறிவிடுகிறது. இந்நிலையில் புருஷனும் இறந்துவிடுகிறான். பிறகு சொத்துக்களை விற்கவேண்டி வருகிறது. வாங்குகிறவர்கள் அவர்கள் கடனுக்காகவே சொத்துக்களை விற்கப் போகிறார்கள் என்ற உண்மையைத் தெரிந்து குறைந்த விலைக்கும் கேட்கிறார்கள். சொத்துப் பூராவும் விற்றும் கூட கடன் தீர்க்கமுடியாமல் ஆகிவிடுகிறது. பிறகு பெரிய பணக்காரன் பெண்ணும், பணக்காரன் மனைவியுமான இந்த ஸ்திரீ கூலிவேலை செய்ய தள்ளாத காலத்தில் புறப்பட்டு காலக்ஷேபம் செய்யவேண்டிவருகிறது. இப்பேர்ப்பட்ட நிலைமையிலுள்ள பலரை நான் பார்த்திருக்கின்றேன்.

ஆகையால் நமது பாரத தேசத்து ஸ்திரீரத்னங்களே! நீங்கள் வீண் டம்பங்களிலும் அனாவசியங்களிலும் செலவிடும்படி உங்கள் நாயகர்களைத் தூண்டாமல் நாயகன் வரவைக் கவனித்து அதன் நான்கில் ஒரு பங்காவது மீத்து வைக்கும்படி அவனைச் செய்யவேண்டியது உங்கள் கடமையாகும். அப்படி நீங்கள் செய்தால் தான் உங்களுடையவும் உங்கள் சந்ததிகளுடையவும் பிற்காலவாழ்வு சௌக்கியமாக இருக்கும். —(வீ. சங்கரய்யர்.)

ஆற்றில் மூழ்கிக் காப்பாற்றப்பட்டவர் (காப்பாற்றியவரைப் பார்த்து):—ஐயா! தாங்கள் என் உயிரைக் காப்பாற்றியதற்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. இருந்தாலும் ஒரு ஐந்து ரூபாயாகிலும் தரவேண்டுமென்று விரியப்படுகிறேன். ஆனால் என்னிடம் 10 ரூபாய் நோட்டாயிருக்கிறதென்று யோசிக்கிறேன்.

காப்பாற்றியவர்:—ஆனால் பாதகமில்லை. இன்னொருதடவை குதித்து விடுங்கள்.

***



வக்கீல்:—"அடே! என்டா போர்டைக் கழற்றுகிறாய்!"

வக்கீல் மகன்:—"அம்மா என்னிடம் 'நீ உங்கப்பா பேரை எடுக்கப் போவதில்லை.' என்று சொன்னாள். அதற்காகத்தான் உன் பெயரை எடுத்துக் காண்பிக்கப் போகிறேன்."

***

தகப்பனார்:—அடே கழுதை, மேலே விழாதே.

தனயன்:—கழுதைமேலா விழுந்தேன். அப்பாமேல்லவா விழுந்தேன்.

***

டாக்டர் (நோயாளியைப் பார்த்து):—ஐயா! உமக்கு இன்று உடம்பு எப்படியிருக்கிறது?

நோயாளி:—மூச்சுவிடுவதற்குத்தான் மிகவும் கஷ்டமாயிருக்கிறது ஸார்!

டாக்டர்:—பயப்படவேண்டாம்! அதையும் ஒரேவேளை மருந்தில் நிறுத்தி விடுகிறேன்.



மானேஜர்:—"இந்தக் கடிதங்களை அந்த அலமாரியில் வைக்கும்படி உனக்கு எந்த மூட்டாள் சொன்னாண்டா?"

சேவகப் பையன்:—"எஜமான்தான் சொன்னீர்கள்."

மானேஜர்:—"நீ என்னை மூட்டாள் என்று சொன்னதால் உன்னை வேலையை விட்டு நீக்கிவிட்டேன்; போ."

***

புதிதாக வந்த வேலைக்காரன்:—எஜமான் எனக்கு என்ன சம்பளம் போடப்போகிறீர்கள்.

நீதிபதி:—(மறதியாய்) பதினைந்து ரூபாய் அல்லது ஒரு வாரம் கடுங்காவல்.

***

மனைவி:— (டாக்டரிடம்) "நான் சற்று முன் தெர்மாமீட்டர் வைத்துப் பார்த்தேன். ஜுரம் 136 டிகிரி இருந்தது!"

டாக்டர்:—"அப்படியானால் அம்மா இது சாதாரண வைத்தியன் குணமாக்கக்கூடிய ஜுரமல்ல. உடனே நெருப்பு அவிக்கும் எஞ்சினுக்குச் சொல்லியனுப்புங்கள்.

***

கணவான்:—ஒரு சவரனுக்கு எவ்வளவு தூரம் கம்பி நீட்டலாம்.

தட்டான்:—பம்பாய் வரைக்கும் கம்பி நீட்டலாம்.

***

ஜெயில் விசிட்டர்:—(கைதியைப் பார்த்து) நீ இங்கு எவ்வளவு நாட்களாக இருக்கிறாய்?

கைதி:—இரண்டு மாதங்களாக.

ஜெ. வி:—என்ன சார்ஜின்பேரில்?

கைதி:—சார்ஜா! எல்லாம் இனமாகவே கிடைக்கிறதே!

பெண்:— (வாலிபனைப்பார்த்து) நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. ஏனெனில் நான் உன்னைக் காதலிக்க வில்லை. ஆனால் நான் உன்னுடைய சகோதரி மாதிரி இருக்கிறேன்.

வாலிபன்:—பேஷ்! அப்படியானால் உன் தகப்பனார் இறக்கும் பொழுது எவ்வளவு சொத்துவைத்துவிட்டுப் போவார்?

***



வாடகை மோட்டாரில் ஏறியிருப்பவர்:—"ஏனப்பா! நான் உன்னை பிராட்வேயிலிருந்து மைலாப்பூரில் கொண்டு விடும்படி சொன்னேனே. நீ இத்துடன் நாலுமுறை சென்ட்ரல் ஸ்டேஷன் வழியாக மோட்டாரை ஓட்டி வந்திருக்கிறீரே. என்ன சங்கதி?"

மோட்டார் ஓட்டி:—"தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கோ. நான் தங்களை பட்டணத்திற்குப் புதிதாக வந்திருக்கும் ஒரு தெலுங்கு நாட்டு ஆசாமி யென நினைத்திருந்தேன்."

***



"நீயும் உன் பெண்சாதியும் எப்போதாவது மோதிக் கொள்வ துண்டா?"

"ஏன்? அவள் பின்னாலே நான் போய்க் கொண்டிருந்தால் எப்படி மோதிக் கொள்ள முடியும்?"

***

தாய்:—ஏண்டா, குழந்தாய்! உன் தங்கையின் ஞாபகமில்லாமல் தானே நீ பலகாரங்களையெல்லாம் சாப்பிட்டாய்?

குழந்தை:—"சாப்பிடும்போதெல்லாம் தங்கையின் ஞாபகந்தான். எங்கே மத்தியில் வந்து விடப்போகிறாளோ என்று எண்ணிக் கொண்டேதானே சாப்பிட்டேன்.

டெலிபோன் மூலம் நீந்த பயிற்சி:—டெலிபோன் வாயிலாய் நீந்தும் முறையைக் கலிபோர்னியா வாசி யொருவர் கற்றுக்கொடுத்து வருகிறார். அவர் நீரில் நனையாத டெலிபோன் கருவியைத் தலையி லணிந்து கொண்டு தம் கையிலுள்ள குழாய் மூலமாய் வேறோரிடத்தில் நீந்திக் கொண்டிருக்கும் மாணவர்க்கு இன்னின்னவாறு நீந்த வேண்டுமென்று அவ்வப்போது தெரிவிக்கிறார். போதிப்பவர் வைத்திருக்கும் ஒரு சிறிய பாட்டரி டெலிபோன் மூலம் பேசுவதற்கு வசதி செய்து தருகிறது.

***

92 வயதான பத்திராசிரியர்:—ஆஸ்திரேலியாவில் சில்போர் விக்டோரியா பிரீபிரஸ் என்னும் பத்திரிகை வெளியாகிறது. அதன் ஆசிரியருக்கு இப்போது வயது 92. அவர் இன்னமும், அப்பத்திரிகைக்கு ஆசிரியராகவும், சொந்தக்காரராகவும் மிருப்பதோடு, நிருபராகவும், அச்சு கோப்போராகவும் இருக்கிறாராம்.

***

113 பேருக்கு ஒரே பெயர்:—ஜெர்மனியில் ஆடர் மெர்கோ என்னும் கிராமத்தில் ஒரே பெயருடைய 113-பேர் இருக்கிறார்கள். இவர்கள் 30-குடும்பத்தைச் சேர்ந்தவர்க ளாயினும், 'லாங்க்' என்னும் ஒரு பெயரையே உடையவர்களாக இருக்கிறார்களாம்.

***

மூக்கை இன்ஷியூர் செய்த அராபியர்:—நறுமண மிக்க தைலங்களை மோந்து பார்த்து அதன் விஷயங்களை விளக்கமாகச் சொல்லக்கூடிய ஒரு அராபியர், தமது மூக்கை 2000 பவுனுக்கு லண்டன் கம்பெனி யொன்றில் இன்ஷியூர் செய்திருக்கிறாராம்.

***

பார்லிமெண்டில் இலவசப் பொடி:—பிரிட்டிஷ் பார்லிமெண்டில் மெம்பர்களுக்கு மற்ற வசதிகளோடு, இலவசமாகப் பொடியுங் கொடுக்கப்படுகிறதாம். பார்லிமெண்ட் சபையின் பிரதம வாயிலாளனிடம் இப்பொடி கிடைக்குமாம். முன்னொரு காலத்தில் இப்பார்லிமெண்டிலிருந்த யாரோ ஒரு மெம்பர் இவ்வழக்கத்தை யுண்டு பண்ணிவிட்டுப் போனாராம்.



லீப்ஷிக் ஆசிரியரொருவர், புத்தகங்களை மனிதர்கள் படிப்பதுபோல் சப்தமிட்டுப் படிக்கக்கூடிய இயந்திர மொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்.

*　　　*　　　*　　　*

ஜப்பானில் அரிசி விளைவு மிகுதியாயிருப்பதால், அதை உணவுக்கே யன்றி, மற்றெதற்காயினும் பயன்படுத்த முடியுமா என்று ஆராய்ந்து பார்த்து முடிவில் மோட்டாருக்கு உபயோகமாகும் ஒருவித எண்ணெயாகச் செய்யலாமென்று இப்போது செய்து வருகிறார்கள்.

*　　　*　　　*　　　*

அமெரிக்காவில், துப்பாக்கியால் சுட்டாலும் உடையாத ஒருவித கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குண்டு அதில் ஊடுருவிப் பாயமுடியாததோடு தான் தூளாகவும் போய்விடுகிறதாம்.

*　　　*　　　*　　　*

நவக்கிரகங்களில் மிகவும் பெரிதான வியாழனின் குறுக்களவு 86,500 மைல் தூரமெனக் கூறப்படுகிறது.

*　　　*　　　*　　　*

பைபில் இதுவரை 678 பாஷைகளில் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டிருக்கிறதாம்.

*　　　*　　　*　　　*

காக்கை, கழுகு, வாணியம்பாடி ஆகிய பறவைகள் ஆகாயத்தில் 6000 அடிகள் உயரம் பறந்து செல்லக்கூடியனவாம்.

*　　　*　　　*　　　*

உலகத்தில் மொத்தம் 6,72,486 சாரணப் பெண்கள் இருக்கின்றனராம்,

*　　　*　　　*　　　*

சென்ற ஆண்டில் மட்டும் பைபில் 1,09,33,203 பிரதிகள் செலவாகியிருக்கிறதாம்.

*　　　*　　　*　　　*

ஆப்கானிஸ்தானத்தில் உள்ள ஒரு கோழிமுட்டையிலிருந்து நான்கு கால்கள், மூன்று தலைகளோடு கூடிய கோழிக் குஞ்சு வெளிப்பட்டதாம். ஆனால் அது பின்னர் இறந்துவிட்டதாம்.

*　　　*　　　*　　　*

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் டிராம்வண்டியில் நெடுந்தூரம் பிரயாணம் செய்பவர்கள் சௌகரியத்தின் பொருட்டு, ரேடியோவை அதிலமைத்து பாடச் செய்யப்பட்டிருக்கிறதாம்.

*　　　*　　　*　　　*

ஸ்பெயின் தேச மாதான மாட்டிரிட் என்பவன் தெருத் தெருவாகச் சென்று வட்டிக்குப் பணங் கொடுக்கிறானாம். இதனால் அவன் பெரும்பாலான ஏழை மக்களுக்குத் தெரிந்தவனாக இருக்கிறானாம்.

ஆசிரியர் குறிப்புக்கள்

மஹாத்மா மீது வெடிகுண்டு

அஹிம்ஸா தர்ம சொரூபியான காந்தியடிகட்குச் சென்ற மாதம் ஏற்பட விருந்த விபத்தின் செய்தி நாடு முழுதும் மிகுந்த சஞ்சலத்தை உண்டாக்கி விட்டது. உலகம போற்றும் உத்தமரான காந்தியடிகள் புனா நகர சபையின் உபசாரம் பெறச் சென்றபோது எவனோ ஒரு அயோக்கியன் வெடி குண்டு எறிந்துவிட்டான். நல்லவேளையாகக் காந்தியடிகள் உயிர் தப்பினார். காந்தியடிகளின் காருக்கு முன்வந்தகாரில் இருந்தவருட் பட ஏழு பேருக்குக் காயங்கள் ஏற்பட்டன. தீண்டாமையை விலக்கி ஹிந்து தர்மத்தைப் புனிதப் படுத்தவேண்டும் என்று காந்தியடிகள் ஆற்றி வரும்தொண்டு ஸநாதனிகட்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கி யிருக்கிறது என்பது எல்லாருக்கும்தெரிந்த விஷயம். இவர்கள் காந்தியடிகட்கு எதிரிடையாகச் செய்துவரும் பிரசாரம் கண்ணியமற்றதாயும், அவருக்கத் தக்கதாயும் இருந்து வருகிறது. இதற்குக் குருவாயூரிலும், பீகாரிலும் காந்தியடிகளின் விஜத்தின்போது ஸநாதனிகள் பலாத்காரத்தில் இறங்கியதே போதிய சான்றாகும். ஸநாதனிகளின் தவறான பிரசாரத்தின் பயனாகவே யாரோ ஒரு அயோக்கியன் வெடிகுண்டு வீசி ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றி விடலாம் என்று நம்பித் துணிந்து விட்டான். இத்தச் சம்பவத்தைக்கொண்டு ஸநாதந தர்மத்தில் பற்றுள்ள எல்லாரையும் நாம் குற்றங்கூற விரும்பவில்லை. ஆனால்இத்தகைய பலாத்காரச் செய்கைகளால் அவர்கள் தலைகுனிய வேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது. காந்தியடிகள் வாழ்க.

அடிகளின் சுற்றுப்பிரயாணமுடிவு விழா.

தீண்டாமை விலக்கின் பொருட்டுக் காந்தியடிகள் தொடங்கிய அகில இந்தியச் சுற்றுப் பிரயாணம் ஆகஸ்டு மாதம் 2-ம் தேதி முடிவுபெறும். இச் சுற்றுப்பிரயாணம் 1933-ம் ஆண்டு நவம்பர்மாதம் 7-ம் தேதி வார்தாவில் ஆரம்பமாயிற்று என்பது நேயர்கட்குத்தெரியும். ஒன்பது மாதங்கட்குப் பிறகு காசி க்ஷேத்திரத்தில் பிரயாணம் முடிவு அடையப்போகின்றது. காந்தியடிகள் தென்னிந்தியாவில் ரயில்வண்டிகளிலும், கார்களிலும் வெகு விரைவாகச் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஒரிஸ்ஸாவில் கால் நடை யாத்திரை செய்து கிராம மக்களிடையே பிரசாரம் செய்தார். இந்தச் சுற்றுப்பிரயாணப் பூர்த்தியை இந்திய மக்கள் ஒரு விழாவாகக் கொண்டாடவேண்டும் என்று ஸ்ரீமான் ஜி. டி. பிர்லா அறிக்கை வெளியிட்டிருக்கிறார். ஜூலை 29-ம் தேதி இது கொண்டாடப்பட வேண்டும் என்று அவ்வறிக்கை கூறுகிறது. ஸ்ரீமான் ஜி. டி. பிர்லா அவர்கள் வெளியிட்டிருப்பதுபோல் ஹிந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்வதிலும், தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேறச் செய்வதிலும் இந்தச் சுற்றுப் பிரயாணம் ஒரு விசேஷ அம்ஸமாக ஹிந்துமத சரித்திரத்தில் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. காந்தியடிகள் தீண்டாமை விலக்குச் சம்பந்தமாக மேற்கொண்டுள்ள முயற்சி நாட்டு மக்கள்உள்ளங்களில் மிகுந்த உணர்ச்சியை எழுப்பி யிருக்கிறது என்பது அநுபவம். அடிகளின் சுற்றுப்பிரயாணப் பூர்த்தி விழாவின்போது 1932-ம் ஆண்டு செப்டம்பர்மீ 25-ம் தேதிய என்று பம்பாயில் கூடிய ஹிந்து சமூகத்தினர் தீண்டாமையை விலக்க உறுதிகொண்டு நிறைவேற்றிய தீர்மானத்தை வற்புறுத்த வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் இருப்பிடங்களை போய்ப் பார்க்கவேண்டும்; தீண்

டாமை விலக்குப் பிரசாரம் செய்யும் தொண்டர்கள் ஒருவாரம் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும்; தாழ்த்தப்பட்டவர்களுடைய குறைகளையும் தேவைகளையும் அறிந்து ஆவன செய்யவேண்டும். பலவித இடையூறுகளுக்கும் ஆபத்துக்களுக்கு மிடையே தள்ளாத வயதில் காந்தியடிகள் தமது கடமையை நிறைவேற்றி வருவதை நாட்டுமக்கள் நன்கு கவனித்து அவரது திருவுள்ளம் மகிழ்ச்சி அடையுமாறு செய்வார்களாக.

ஏழைப் பிள்ளைகளின் பள்ளிச் சம்பளம்

ஏழைப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை முன்னிட்டுப் பள்ளிக்கூடங்களில் குறைந்த சம்பளம் வாங்கும் முறையை நீக்கிவிடக்கூடாது என்று தாய் தந்தையர்கள் சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். அதற்கேற்ப அரசாங்கத்தாரும் அவ்வுத்தரவை தற்காலிகமாய் அமலுக்குக் கொண்டு வராமல் நிறுத்திவைத்திருப்பது சற்றே ஆறுதல் அளிக்கக்கூடியதாகும். அரசாங்கத்தார் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களிடம் குறைந்த சம்பளம் வாங்க வேண்டும் என்று சட்டம் செய்த பிறகு அந்தச் சமூகத்தில் குறிப்பிடத்தகுந்த மாதிரியில் கல்வி வளர்ச்சி அடைந்து வருகிறது. சென்ற ஐந்தாண்டுகளில் அச் சமூகச் சிறுவர்—சிறுமியர் பலர் கல்வியறிவு வாய்ந்தவர்களாகி இருக்கின்றனர். அநேக பள்ளிக்கூடங்களில் குறைந்த சம்பளம் மாத்திரமன்றி இலவசமாகவும் கல்வி போதிக்கப்படுகிறது. இந்நிலையில் சென்ற ஜனவரி மீ 6-யில் அரசாங்கத்தார் குறைந்த சம்பள விகிதம் வாங்குவதைப்பற்றி ஒரு உத்தரவு வெளியிட்டிருக்கின்றனர். அந்த உத்தரவில் ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்கள் மூலம் வசூலாகும் மொத்தம் சம்பளத் தொகையில் 100-க்கு 7½ ரூபாய்க்கு மேல் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கட்குச் சம்பளம் குறைக்கக்கூடாது என்று குறிப்பிட்டிருந்தனர். இந்த உத்தரவு மிகவும் தாமதமாய்க் கல்வி இலாகா அதிகாரிகளிடம் சேர்ந்தமையால் இதில் கண்டபடி காரியத்தில் நிறைவேற்ற முடியாமல் போயிற்று. திடும்பிரவேசமாக இந்த உத்தரவைக் கேட்டவுடன் பரம ஏழைகளான தாய் தந்தைமாரிற் பலர், இவ்வறுமைக் காலத்தில் சம்பளம் கொடுக்க இயலாதவர்களாய்த் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்கட்கு அனுப்பாமலே நிறுத்திக்கொண்டனர். அதனால் பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் தொகையும் குறைய நேட்டது. மாகாண மெங்கும் கண்டனக் கூட்டங்கள் எழுந்தன, தாழ்த்தப்பட்ட சமூகத்திலுள்ள எல்லாப் பிரிவினரும் தங்கள் கஷ்டநஷ்டங்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

சர்க்கார் கடமை என்ன?

எவ்வளவு சௌகரியங்களைச் செய்தாலும் இதுவரை ஆண்களில் 100-க்கு 7-பேரும் பெண்களில் 3-பேரும் மாத்திரமே கல்வி கற்றவர்களாய் இருக்கிறார்கள். உண்மை யிப்படியிருக்க, எதிர்காலத்தில் பிரஜைகளாக விளங்கப்போகும் சிறுவர்—சிறுமியர்கட்குக் கல்விச்சௌகரியம் விசேஷமாய் ஏற்படுத்தாமல் இருப்பது நாட்டு நலம் கருதும் சர்க்காருக்கு லக்ஷணமாகாது. பண நெருக்கடி இதற்கு இடம் கொடுக்கவில்லை என்பதே அரசாங்கத்தாரின் சமாதானம். அதற்கு வேறு துறைகளில் செலவு செய்வதைச் சுருக்கிக்

கொண்டு கல்வி வளர்ச்சிக்கு அதிகம் செலவு செய்யலாம் என்பதும் வழக்கமான பழைய பேச்சேயொழியப் புதிய பேச்சல்ல. எது எப்படி யிருந்தாலும், கல்வி இலாகா மந்திரியும், அரசாங்கத்தாரும் மக்கள் முறையீடுகட்குச் செவி சாய்த்து இந்த ஆண்டிலும் வழக்கப்படி குறைந்த சம்பளம் வாங்கலாம் என்று முடிவு செய்து ஜனவரி மீ உத்தரவை அமலுக்குக் கொணராமல் நிறுத்தி யிருப்பது விசேஷமே. இதைப்பற்றி அடுத்த ஆண்டில் என்ன செய்வது என்று மேற்கொண்டு ஆலோசனை செய்து வருகிறார்களாம். முனிசிபாலிடிகளிலும், ஜில்லா போர்டுகளிலும் போதிய பணம் இருந்து அவைகள் சர்க்கார் உத்தரவில் குறிப்பிடப்பட்டதைவிட அதிகமாகச் சம்பளங்களைக் குறைக்கக் கூடுமானால் தங்களுக்கு எல்வித ஆக்ஷேபனையும் இல்லை என்று அரசாங்கத்தார் அறிவித்திருக்கிறபடியால் அந்த ஸ்தாபனங்கள் அதிக உதவி செய்து வருகின்றன. ஒரு நாட்டு நாகரிகத்திற்கும் ஏனைய முன்னேற்றங்கட்கும் கல்வியே அஸ்திவாரம். எனவே இந்த உத்தரவு என்றும் அமலுக்கு வராமல் இருக்குமாறு செய்யவேண்டும். இதனால் ஏற்படும் நஷ்டங்களை வேறு வகைகளில் ஈடு செய்து கொள்ளவேண்டும். ஏழைகளான ஆண்கட்கும் பெண்மணிகட்கும் சாசுவதமாக விசேஷக் கல்வி வசதி அளிக்க அரசாங்கத்தார் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

தொழிற்சங்கங்களிடையே ஒற்றுமை

சென்னைத் தொழிலாளர்களிடையே அரசியல்கக்ஷி ஏற்படுவதன் சம்பந்தமாகத் தீவிரமான கருத்து வேற்றுமை இருந்து வந்தது நேயர்கட்குத் தெரியும். இத் தொழிலாளர் கோஷ்டிகளிடையே ஒற்றுமை உண்டுபண்ணவும், மாகாணத்திற்கென வலிமையான தொழிலாளர் அரசியல் கக்ஷி ஒன்றை ஸ்தாபிக்கவும் ஸ்ரீமான் டாக்டர். வரதராஜுலு நாயுடு அவர்கள் எடுத்துக் கொண்ட நன் முயற்சியை நாம் பாராட்டுகின்றோம். அவர் சென்ற மாதம் 24-ம் தேதி மாலை தமது "தமிழ்நாடு" காரியாலயத்தில் ஒரு தொழிலாளர் பிரதிநிதிகள் மகாநாடு கூட்டினார். அம்மகாநாட்டில் சென்னை நகரிலிருந்தும், வெளி ஜில்லாக்களிலிருந்தும் பல்வேறு தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்டது குறிப்பிடத் தக்கதாகும். அக்கூட்டத்தில் தொழிற் சங்கங்களின் மாகாண மகாநாடு ஒன்றைக் கூட்டுவதென்றும், திறமையான தொழிலாளர் அரசியல் கக்ஷி ஒன்றை ஏற்படுத்தி அதன் கொள்கை, வேலைத் திட்டம் முதலியவற்றை முடிவு செய்வதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டதை அறிந்து மகிழ்ச்சிப் பெருக்கு அடைகின்றோம். சரியான கணக்கு வழக்குகள் உள்ளவையும், 1-4-34-க்கு முன்னதாக ரிஜிஸ்டரானவையுமான தொழிலாளர் சங்கங்கள் ஷை மகாநாட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும். அங்ஙனம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரே தொழிலாளர் அரசியல் கக்ஷியின் தலைவராகவும் இருப்பார். தீவிரமான கருத்துவேற்றுமை படைத்திருந்த தொழிலாளர் சகோதரர்கள் இத்தகைய நன் முடிவுக்கு வந்தது பெரிதும் போற்றத்தக்கது என்பதில் ஐயம் இல்லை. இத் தோழர்கள் என்றும் ஒற்றுமையுடன் பரஸ்பரம் ஒத்துழைத்துத் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். மேன்மேலும் தொழிலாளர் தோழர்களுக்கு உதவி புரிந்து வரவேண்டும் என்று ஸ்ரீமான் டாக்டர். வரதராஜுலு நாயுடு அவர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(தொகுதி 19. பகுதி 12. 959-ம் பக்கத் தொடர்ச்சி.)

டாக்டர் நடேசன் நீல அறைக்குள் சுமார் ஐந்து நிமிஷங்களிருந்தார். அங்கு இன்னும் என்னென்னவோ சோதனைகளெல்லாம் செய்துகொண்டிருந்தார். பிறகு தன் மனதிற்கு ஒன்றும் சரிப்படாமல் அறையினின்றும் வெளியே வந்தார்.

வெளியே வந்தாரோ இல்லையோ உடனே 'இன்ஜெக்ஷன்' என்று உரக்கக் கத்தினார்.

நேயர்களே! நீங்களும் இதைக் கவனித்துக்கொண்டே வருகிறீர்கள். இருந்தாலும் இதைப்போன்ற அதிசயத்தை நீங்கள் பார்த்துமிருக்கமாட்டீர்கள் கேட்டுமிருக்கமாட்டீர்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

நான் இன்ஜெக்ஷன் செய்வதற்கு தயாராயிருந்தேனுகையால் அவர் 'இன்ஜெக்ஷன்' என்றவுடனே நான் அவருடைய புஜத்தில் இன்ஜெக்ஷன் செய்தேன். ஆனால் இந்த முறை இன்ஜெக்ஷன் கொடுத்த மறு நிமிஷமே மயக்கம், மூர்ச்சை, தேகவலியெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிவிட்டன. டாக்டர் நடேசன் சிரித்துக்கொண்டே இதையொரு விளையாட்டாக நினைத்துப் பேச ஆரம்பித்துவிட்டார்........ஒரு நன்மை ஏற்பட்டுவிட்டது; என்னவென்றால் நீல அறையின் மர்மம் புரியாவிட்டாலும் அந்த மர்மத்திற்கு இன்ன மருந்து கொடுத்தால் உடனே அநுகூலம் ஏற்பட்டுவிடுமென்று டாக்டர் நடேசன் கண்டுபிடித்துவிட்டார்.

டாக்டர் நடேசன்:—இம் மர்மம் இப்படியே எக்காலமும் இருந்துவிடுமோ வென்று பயப்படுகிறேன். எனக்குக் கொஞ்சங்கூட புலப்படவில்லை ஒரு உண்மை யென்னவென்றால் அந்த அறையில் பேய் வாசம் செய்கிறதென்றும் வந்து போவோருக்கு அது இவ்விதம் தொந்திரவு கொடுக்கிறதென்றும் நினைப்பதற்கு ஏதுவில்லை; ஏனென்றால் பேய்பிடிக்கும் பட்சத்தில் இந்த இன்ஜெக்ஷனுக்கு அது அடங்கி யிருக்காது. ஆனபடியால் இந்த அறையில் வேறு மறைவான ஒரு வஸ்து நம்மை இவ்விதம் பிடித்துக்கொள்கிறது. ஆச்சரியத்திலும் ஆச்சரியம், மனுஷன் அறையைவிட்டு வெளியே வரும்போதுதான் இந்த வஸ்துவுக்குக் கொண்டாட்டம் பிறந்து விடுகிறது—என்றார்.

"அந்த வஸ்து அறையின் வெளிப்பக்கத்தில் இங்கு எங்கேயாவது இருக்கலாமோ?" வென்றேன். "உன்பக்கந்தா னிருக்கவேண்டும்; இங்கிருக்க நியாயமில்லை" யென்றார் டாக்டர் நடேசன்.

வெகுநேரம் வரை நான், டாக்டர் நடேசன், பாலாமணியம்மாள், மீனாள் ஆக நால்வருமாகக் கலந்துபேசி இறுதியில் இந்நீல அறையைப் பூட்டிவிட வேண்டுமென்றும் வேலைக்காரர்களில் எவரும் அதைத் திறக்கக் கூடாதென்று உத்தரவு செய்துவிட வேண்டுமென்றும் தீர்மானித்தோம். நீலஅறை தற்சமயம் இருப்பதுபோலவே இருக்கவேண்டும் என்றும் தான் மறுநாள் வந்துதான் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டுமென்றும் டாக்டர் நடேசன் தெரிவித்தார்.

பாலாமணியம்மாள் ஒரு வேலைக்காரியிடம் 'டீ' தயார் செய்து கொண்டு வரச் சொல்லவே இரண்டு நிமிஷங்களுக் கெல்லாம் பாலாமணியம்மாள் எனக்கும் டாக்டர் நடேசனுக்கும் இரண்டு கண்ணாடி டம்ளர்களில் டீ கொடுத்தாள். நாங்கள் பசியினால் ஆவலுடனே யருந்தினோம். பிறகு டாக்டர் நடேசனும் நானும் பாலாமணியம்மாளிடம் மறுநாள் கட்டாயம் வருவதாகச் சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டு வெளியே சென்று ரிக்ஷாவிலேறிக் கொண்டோம். வீட்டைவிட்டுப் போகும்போது நான் ஒரு முறை என் மனைவியாளாகிய மீனாளைப் பார்த்தேன். அவளுடைய அன்பு நிறைந்த பார்வை என்னை மயக்கி விட்டது. என் மனமானது காதல் என்னும் அளவற்ற வஸ்துவால் தத்தளித்துக் கொண்டிருந்த போதிலும் இதை நான் டாக்டர் நடேசனுக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

ரிக்ஷாவில் போய்க் கொண்டிருக்கும் பொழுது நான் டாக்டர் நடேசனைப்பார்த்து "டாக்ட ரவர்களே! இந்த விஷயத்தைப்பற்றி உங்கள் மனதில் பட்டதென்ன சொல்லுங்கள்" என்று கேட்க, அவர் என்னைப்பார்த்து "இவ்விஷயம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. என்னால் இன்றைக்கு ஒன்றும் சொல்ல முடியாது. இம்மர்மம் தெளிந்த பிறகுதான் என் மனம் நிம்மதியாகும். அது வரையில் தயவுசெய்து என்னை யொன்றும் கேட்காதீர்கள்" என்றார்.

இவருக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டாமென் றெண்ணி நான் அப்பால் இவரை எதைப்பற்றியும் கேட்பதை நிறுத்திவிட்டேன். கொஞ்ச தூரம் சென்ற பிறகு நான் இவரிடம் விடை பெற்றுக்கொண்டு வேறொரு ரிக்ஷாவி லேறிக்கொண்டு என்னிருப்பிடமாகிய டாக்டர் மல்லையாவின் பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே கிடையாது. என் மனம் நீல அறையின் அதிசயத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. சமாச்சாரங்கள் போதாதென பல்லாவரத்தில் நேர்ந்த கொலையும், அங்கு போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் மாசிலாமணி முதலியாரின் மனைவி விருந்துக்கு வந்தவர்களின் பெயர்களைச் சொல்லும்போது இரண்டு பெயர்களைச் சொல்லாமல் விட்டுவிட்ட சந்தேக சமாச்சாரமும் எனது ஞாபகத்திற்கு வந்து குடிகொண்டன. பாலாமணியம்மாள் மாசிலாமணி முதலியாரின் மனைவிக்கு மிக்க நெருக்கமான சிநேகியாக வேண்டுமென்பது நன்றாய்த் தெரிகிறது. மேலும் இவளும் மீனாளும் பல்லாவரத்துப் பங்களாவில் பகலி விருந்ததை நானே பார்த்துவிட்டேன். போதாததற்கு ஒரு சிநேகிதரை ரகசியமாகக் காணும் பொருட்டுப்

பாலாமணியம்மாள் மீனாளுடன் வெளியூரிலிருந்து இச் சென்னைக்கு வந்திருக்கிறதாகத் தானே தெரிவித்தாள். இப்படி யெல்லா மிருக்கிறபடியால் மாசிலாமணி முதலியாரின் கொலையைப்பற்றிய உண்மை பாலாமணியம்மாளுக்கு நிச்சயம் தெரியுமென்று தீர்மானித்துக் கொண்டேன்...................

பல வழிகளிலும் என் மனம் வேதனை அடைந்தது.

சாரதா யார் என்று மாத்திரம் நான் கண்டுபிடித்துவிட்டால்! விழித்துக் கொண்டிருக்கும்போது அவளுடைய ஞாபகமே என் மனதிலிருந்து கொண்டிருந்தது; சிறிதுநேரம் தூங்கிவிட்டால் இந்தத் தூக்கத்திலேயும் சாரதாவைப்பற்றியே அடிக்கடிக் கனவு கண்டேன்! சாரதா! சாரதா! இம்மர்ம சாரதாதான் ஆதியிலிருந்து எனக் கேற்பட்ட அதிசயங்களுக்கும் அதியற்புதங்களுக்கும் காரணபூதமா யிருக்கவேண்டும்!

சாரதா வென்றால் போதும்; மீனாள் பயந்துபோய் விடுகிறாள்; முகம் வெளுத்துப் போகின்றது. மீனாள் சாரதாவுக்குப் பயந்து கொண்டிருக்கும் விஷயம் நான் பல்லாவரத்துத் தோட்டத்தில் இரகசியமாகக் கேட்ட சம்பாஷணையினா லறிந்தது. சாரதாவின் வலைக்குள் சிக்கிக் கொள்ளுவதை விட தற்கொலை செய்து கொள்ளுகிறேனென்று அவள் சபாபதி முதலியாரிடம் பேசின விஷயமும் நான் நன்றாய்க் கேட்டேன். சாரதாவும் பெண்; மீனாளும் பெண். ஒரு பெண்ணுக்கு மற்றொரு பெண் பயப்பட வேண்டிய காரணமென்ன?......என் காதலியின் பயத்தை எப்படித் தீர்ப்பது என்று எனக்குக் கொஞ்சமும் புலப்படவில்லை.................

மறுநாள் காலை எனக்கு அநேக கடிதங்கள் வந்தன. சில கடிதங்கள் நோயாளிகளிட மிருந்தும், மற்றுஞ் சில கடிதங்கள் "டாக்டர் ஸர்டிபிகேட்" வேண்டுமென்று தொந்திரவு செய்யும் கலாசாலைப் பிள்ளைகளிடத்தினின்றும் பல ஆபீஸ்களில் வேலைசெய்யும் குமாஸ்தாக்களிடத்தினின்றும், வந்திருந்தன. ஆனால் ஒரே ஒரு உறை போட்ட கடிதம் மைலாப்பூர் வக்கீல் இராஜகோபாலய்யங்காரிட மிருந்து வந்தது. இக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க, என்னுடைய தாயாரின் சகோதரராகிய தனகோடி முதலியார் திடீரென்று இறந்துபோய் விட்டாரென்றும் தனகோடி முதலியாருக்கு வார்சு இல்லாமையால் அவர் இறப்பதற்கு முன் தன்னுடைய சகல சொத்துக்களும் எனக்கே சேரும்படி உயில் எழுதி வைத்திருக்கிறாரென்றும் அந்த உயில் தன்னுடைய கையி லிருப்பதுடன் சொத்து விவரமும் தன் கையில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் வக்கீல் இராஜகோபாலய்யங்கார் எழுதி யிருந்தார்.

என்னுடைய கண்கள் மோசம் செய்யாவிடினும் இந்த சமாச்சாரத்தை என்னால் நம்பவே முடியவில்லை. இதிலேயும் ஏதாவது மர்மம் கலந்திருக்கக் கூடுமோ வென்ற சந்தேகம் என் மனதில் இருந்து கொண்டிருந்தது.

என்னுடைய மாமன் இறந்தது எனக்கு அதிக துக்கத்தை யுண்டு பண்ணிய போதிலுங்கூட, இதனால் கிடைக்கும் சொத்துக்களை நினைத்து நான் சந்தோஷப் படாமலில்லை.....................

காலையில் காபி சாப்பிட்டு விட்டு ஒரு மோட்டாரி லேறிக்கொண்டு நான் மைலாப்பூருக்குப்போய் அங்கு வக்கீல் இராஜகோபா லய்யங்காரின் வீட்டைத் தேடிக்கொண்டு சென்றேன். அவருடைய வீட்டை யடைந்து அவரைப் பார்த்ததுமே அவர் உள்ளே சென்று ஒரு பத்திரத்தைக்கொணர்ந்து

அதை யெனக்கு வாசித்துக் காண்பித்தார். உண்மையில் இது தனகோடி முதலியாரால் எழுதப்பட்ட உயில்தான் என்று அப்பொழுதே எனக்குத் தெரிந்தது. இந்த உயிலினால் மதராஸ் பாங்கில் என்பேரில் இருபதினாயிரம் ரூபா யிருக்கிறதென் றறிந்து கொண்டேன். உயிலைப்படித்து முடித்த பிறகு என்னுடைய சில்லரைச் செலவுகளுக்காக இராஜகோபாலய்யங்கார் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு உண்டியல் கொடுத்தார். நான் கரைகடந்த சந்தோஷமடைந்து உண்டியலை வாங்கிக்கொண்ட பின் வக்கீலுக்கு வந்தன மளித்துவிட்டுத் திரும்பி விட்டேன்......................நூறு ரூபாயைச் சேர்ந்தாப்போல் பார்த்திராத எனக்குத் தற்சமயம் எதிர்பாராமல் பாங்கியில் ரூ. 20,000 இருக்கிறதென்றால் என் மனம் இந்த சமயம் எப்படித் தத்தளிக்குமென்பதை நேயர்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

பகல் பத்து மணிக்குமேல் எனது உண்டியலை மதறாஸ் பாங்கியில் மாற்றிக்கொண்டேன். பிறகு என்னுடைய நண்பன் ஜகந்நாதனைப் பார்த்துவிட்டு வரலாமென்று லிங்கச் செட்டி தெருவுக்குப் போனேன். ஜகந்நாதனைக் கண்டதும் முதலில் எனக்குக் கிடைத்த ஐசுவரியத்தைப்பற்றி யவனுக்குச் சொன்னேன். இது கேட்டு அவன் சந்தோஷ மடைந்தான். பிறகு நீல அறையின் மர்மத்தைப்பற்றி அவனுக்கு விவரமாய்த் தெரிவித்தேன்.

நான் சொல்லிய தெல்லாவற்றையும் கவனமாய்க் கேட்டுக்கொண்டான். பிறகு என்னைப்பார்த்து "போகப் போக உனக்கு நேரிடும் விஷயங்கள் இவ்வுலகத்திலேயே நடைபெறாத அபூர்வ சம்பவங்களா யிருக்கின்றன. ஆனால் லோகநாதா! ஏன் நான் சொல்லுவதை அங்கீகரித்துக்கொள்ள மாட்டேனென்கிறாய்? இந்த விஷயத்தைப்பற்றிய ஞாபகத்தையே ஒழித்துவிட்டு நிம்மதியாக யிரு என்று எத்தனை முறை நான் உனக்குச் சொல்வது?" என்றான்.

நான்:—ஞாபகத்தை யொழித்து விடவாவது? அது எப்படி என்னால் முடியும்? இதில் மீனாள் கலந்திராவிட்டால் நான் இதைப்பற்றிக் கவலை கொள்ளாமலிருக்க நியாய முண்டு.

ஜகந்நாதன்:—நீ சொல்வது சரிதான். ஆனால் நீ ஒரு பேர் வழியைக் கவனிக்கப் போக நீ பலருடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்கிறாய்! உன்னுடைய விரோதிகள் சாமானியமானவர்களல்ல; உன் உயிருக்கே அவர்கள் வழி வைக்கிறார்களென்பது உனக்குத் தெரிய வில்லையா?

நான்:—தெரிகின்றது; இருந்தாலும் என்னுடைய உயிரைக் கொடுத்தாவது என் மனைவி மீனாளைக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமை. எனக்கு யார் யார் விரோதிகளோ அவர்கள் மீனாளுக்கும் விரோதிகள்தான். நான் இதில் சிரத்தை யெடுத்துக் கொள்ளாமலிருந்து விட்டால் மீனாளுடைய உயிரே போய்விடுமே?—என்றேன்.

இதைக் கேட்டதும் ஜகந்நாதன் சிறிதுநேரம் மௌனமா யிருந்துவிட்டுப் பிறகு என்னைப்பார்த்து "ஆனால், லோகநாதா! இந்த நீலஅறையில் யாரோ மீனாளுடைய உயிரை வாங்கிவிடவே இந்தத் தந்திரம் செய்கிறார்களென்று நீ எண்ணுகிறாயோ?" என்று கேட்டான்.

நான்:—அதற்குச் சந்தேகமென்ன?

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

பவஹு ஆடிமீ—கலியுகாதி 5036, சாலிவாகனம் 1857,
பசலி 1344, கொல்லமாண்டு 1109, ஹிஜுரி 1353,
இங்கிலீஷ் 1934ஹு ஜூலைமீ—ஆகஸ்ட்டுமீ

ஆடிமீ	ஜூலைமீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	16	திங்	சது6-30	பூர49-8	சித்60	ஸ்கந்த பஞ்சமி, கடகரவி
2	17	செவ்	பஞ்11-8	உத்54-35	அ54-35சி	சஷ்டி, கரிநாள் [நா-3-35
3	18	புத	சஷ்14-15	அஸ்58-23	ம58-23சி	குமார சஷ்டி
4	19	வியா	சப்15-50	சித்60	சித்60	திருதினஸ்பிரு,வாகனமேற
5	20	வெள்	அஷ்15-33	சித்0-20	சித்60	வாகனமேற, மருந்துண்ண
6	21	சனி	நவ13-23	சுவா0-30 விசா58.35	அ0-30சி	லக்ஷ்மி விரதாரம்பம், சக விரதாரம்பம்
7	22	ஞா	தச9-13	அனு55-0	மர60	சுபகாரியங்கள் விலக்க
8	23	திங்	ஏகா3-28 து56-15	கே49-48	சித்60	சர்வ, சயன, விஷ்ணு சயன ஏகாதசி,சிம்மா நா-33-55
9	24	செவ்	திர47-45	மூல43-35	அ43-35சி	பிரதோஷம்,8-க்குள் மழை
10	25	புதன்	சது38-38	பூரா36-38	அமி60	மாடுகொள்ள, கரிநாள்
11	26	வியா	○29-18	உத்29-18	சித்60	பௌர், சந்திர கிரஹணம்
12	27	வெள்	பிர19-53	திரு21-58	ம21-58சி	
13	28	சனி	துதி10-58	அவி15-13	சி15-13அ	
14	29	ஞா	திரி2-48 சது55-55	சத9-18	சித்60	
15	30	திங்	பஞ்50-38	பூரட்4-33	சி4-33அ	
16	31	செவ்	சஷ்46-58	உத்1-20 ரே59-58	அ1-20சி	
17	1934 ஆகஸ்ட்டு 1	புதன்	சப்45-13	அஸ்60	மர60	
18	2	வியா	அஷ்45-23	அஸ்0-28	அ0-28சி	
19	3	வெள்	நவ47-20	ப❋2-55	சித்60	
20	4	சனி	தச50-53	கிரு7-0	அமி60	
21	5	ஞா	ஏகா55-40	ரோ12-38	சித்60	சர்வ ஏகாதசி, சுப முகூர்த்
22	6	திங்	துவா60	மிரு19-13	அ19-13சி	சுப முகூர்த்தம் [தம்
23	7	செவ்	து1-23	திரு26-38	ம26-38சி	பிரதோஷம் [ர்த்தம்
24	8	புத	திர7-45	புன34-25	சித்60	மாசசிவராத்திரி,சர்வ முகூ
25	9	வியா	சது14-13	பூச42-15	அ42-15சி	சர்வத்திர ஆடி அமாவாசை
26	10	வெள்	●20-43	ஆயி49-55	மர60	நவக்கிரகசாந்தி செய்ய
27	11	சனி	பிர26-30	மக57-0	அ57-0சி	சந்திர தெரிசனம்
28	12	ஞா	துதி31-48	பூர60	சித்60	ஆடிப்பூரம், திருதினஸ்பிரு
29	13	திங்	திரி36-10	பூர3-20	சித்60	சர்வ முகூர்த்தம்
30	14	செவ்	சது39-28	உத்8-45	அ8-45சி	மாச சதுர்த்தி விரதம்
31	15	புத	பஞ்41-28	அஸ்12-55	ம12-55சி	நாகபஞ்சமி, 8-க்குள் மழை
32	16	வியா	சஷ்42-3	சித்15-45	சி15-45அ	சஷ்டி, ஆடியறுதி

		சுக்	செவ் புத
சனி ராகு	2-மிது-சுக் 20-கட-புத 27-கடக-சுக்		சூரி கே
			குரு

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

187520